
KALKI 11.12.94
ரூ. 3.00

கல்கி



போலிச் சாமியார்களால் ஆன்மிகத்துக்கு ஆபத்தா?



ஏஞ்சல் கிரே : பவுண்டரி நோக்கி...

‘கவர் ஸ்டோரி’ வரும், காத்திருங்கள்!



• சந்தியா



• காரன்

“கிரிக்கெட் பெண்களுக்கான விளையாட்டே அல்ல'' என்று சொல்கிறார் அஜித் கும்பத். சென்ற ஆண்டு சேப்பாக்கம் மைதானத்தில் பத்து லட்ச ரூபாய்க்கு கும்பத் ஸ்டாண்டை ஸ்பான்சர் செய்த குடும்பம் இவருடையது. மாநில அளவிலான கிரிக்கெட் போட்டிகளுக்கும் நிறைய ஸ்பான்சர் செய்கிறார்கள். ஆனால், பெண்கள் கிரிக்கெட் என்று வரும் போது 'கப்சிப்'.

காரணம்? ''உடற்கூறு ரீதியாகப் பெண்களுக்கு இந்த விளையாட்டு ஏற்றதல்ல. ஆண்களே சோர்வடைந்து விடும் போது, பெண்கள் எம்மாத்திரம்? கிரிக்கெட் என்பதே 'வலிமை' என்று ஆன பிறகு மென்மையான ஆட்டம் எடுபடுமா? அதனால்தான் ஸ்பான்சர் செய்யத் தயங்குகிறோம்!'' என்கிறார் அஜித்.

இவர் கருத்தில் நந்திதா ஸ்வரூப்புக்கும் முழு உடன்பாடு. இவர் கர்நாடக மாநில கிரிக்கெட் அணியில் இடம்பெற்றிருந்தவர். இப்போது கிரிக்கெட்டுக்கே முழுக்குப் போட்டு விட்டவர். "கிரிக்கெட் பேட் மிகவும் கனமானது. அதனால்தான் பெண்களால் சிக்ஸர்கள் அடிக்க முடிவதில்லை. பந்தும் 'ஹார்டா'க இருப்பதால், 'கேட்ச்' பிடிக்கும் போது நானே மணிக்கட்டு எலும்புகளை முறித்துக் கொண்டிருக்கிறேன்!'' என்கிறார்.

இவர்கள் சொல்வதைத் தற்போதைய பெண்கள் அணியினர் ஏற்றுக் கொள்கிறார்களா? இந்திய அணித் தலைவி சந்தியா அகர்வால், ஆஸ்திரேலிய அணித் தலைவி கேரன் ரோல்டன் ஆகியோரிடமும் ஆட்டக்கா(ரி)ரர்களான பூர்ணிமாராவ், ஜோ கேரி ஆகியோரிடமும் கேட்டோம்.

"இது போன்ற கருத்துக்கள் உருவாவதற்கான முக்கிய காரணமே உலக அளவில் விளையாட எங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்காததுதான். 86-ல் இங்கிலாந்துடன் ஆடிய ஒரு தொடருக்குப் பிறகு மீண்டும் 91-ல்தான் வாய்ப்புக் கிடைத்தது!'' என்கிறார் பூர்ணிமாராவ்.

"இப்போது நிலைமை மாறிக் கொண்டிருக்கிறது. பெண்கள் கிரிக்கெட்டுக்கான வரவேற்பு அதிகரித்து வருகிறது. இதற்கு சமீபத்தில் பூனாவிலும் இந்தூரிலும் நடந்த மேட்சுகளில் பத்துப் பன்னிரண்டாயிரம் பார்வையாளர்கள் வந்திருந்ததே சாட்சி!'' என்று ஒருமித்த குரலில் கூறுகிறார்கள், சந்தியாவும் கேரன் ரோல்டனும்.

"எங்களுக்கும் ஆட்ட நுணுக்கங்களெல்லாம் தெரியும்!'' என்கிறார் ஜோ கேரி. ஆயினும் ரசிகர்கள் மத்தியில் அத்தனை வரவேற்புப் பெறாததற்கு என்ன காரணம்?

"இதற்குச் சமூகக் கண்ணோட்டம்தான் முக்கிய காரணம்!'' என்று அடித்துச் சொல்லுகிறார் ஐசிநெட் நிறுவனத்தின் சேர்மனும் மானேஜிங் டைரக்டருமான பத்மநாபன். இவரும் கிரிக்கெட் மாட்சுகளின் போது, தமது நிறுவன விளம்பரங்கள் தருபவர்.

"ஆண்களின் கிரிக்கெட் ஆட்டத்தைப் போலவே பெண்களின் ஆட்டத்தையும் எதிர்பார்க்கக் கூடாது. டென்னிசை எடுத்துக் கொள்ளுங்கள்... பெக்கரின் வேகம் சபாடினியிடம் இருக்காதுதான். அதற்காகப் பெண்கள் டென்னிசை ஒதுக்கியா விட்டோம்?'' என்கிறார் இவர்.

"97-ல் நடக்கவிருக்கும் பெண்களுக்கான உலகக் கோப்பை ஆட்டத்திற்குப் பிறகு பாருங்கள். அப்புறம் எங்களையும் அட்டையில் போட்டுப் பத்திரிகைகள் எழுதத்தான் போகின்றன!'' என்று நம்பிக்கையோடு சொல்கிறார்கள் இந்தப் பெண் வீராங்கனைகள்.

- நிர்மலா சக்கரவர்த்தி

படங்கள் : சாரி



கேட்டைத் தாண்டி உள்ளே வர முயன்ற சட்டமன்ற உறுப்பினர் கராத்தே பாலசுப்பிரமணியம், மற்றும் சில கழக பிரமுகர்கள் போலீஸ் தடியடியில் பாதிக்கப்பட்டார்கள். உள்வாயிலில் நிருபர்களுடன் பேசிய கராத்தே பாலசுப்பிரமணியம், 'எம்.எல்.ஏ. என்று சொன்னேன்; கூட ஒரு அடி போட்டு விட்டார்கள்' என்று வேடிக்கை கலந்த வருத்தத்துடன் சொல்லிக் கொண்டிருந்தார்.
'கராத்தே'வுக்கு இந்த கதி!

எம்.எல்.ஏக்கு விழுந்த எக்ஸ்ட்ரா அடி!

“சேஷன் விமானத்திலிருந்து இறங்கி வந்தவுடன் வெளியே அனுப்பியிருந்தால் என்ன நடந்திருக்கும்?” இந்தக் கேள்வியை ஏர்போர்ட் உள்வாயிலில் அன்று பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த ஒரு அதிகாரியிடம் கேட்டபோது மெலிதான புன்னகை பூத்தார். அந்த போலீஸ் புன்னகைக்கு ஏராளமான அர்த்தங்கள்!

ஜனநாயகத்தில் கறுப்புக் கொடி காட்டி எதிர்ப்பைக் காண்பிப்பது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. ஆனால் அப்படி முன்வருபவர்களை ஒரு குறிப்பிட்ட இடத்தில் சவுக்குக் கட்டை வேலிக்குப் பின்னால் நிற்க வைப்பது வழக்கம். மாறாக அன்று, ஏர்போர்ட் கேட் வரை ஆட்டோக்களும், டெம்போக்களும் அனுமதிக்கப்பட்டன. ஆட்டோக்களுக்குள் வீச்சரிவாளும் ஆஸிட் பல்புகளும் அழுகிய முட்டைகளும்...

பழைய ஏர்போர்ட்டிலிருந்து புது ஏர்போர்ட் வாயில் வரை ஒருமுறைக்கு இருமுறை நடந்த போது, அதிமுகவினர் வெறித்தனத்துடன் காத்துக் கொண்டிருந்ததைத் தெரிந்து கொள்ள முடிந்தது. ஏர்போர்ட் வெளி

போலீஸ், பதினைந்து நிமிஷத்துக்கு ஒருமுறை போயஸ் தோட்டத்திலிருந்து வந்த உத்தரவுபடி நடந்து கொண்டிருந்தது. “உங்களைக் கைது செய்யலாமா?” என்று அ.தி.மு.க. முக்கியப் புள்ளிகளிடம் அனுமதி கேட்டே கைது செய்தது.

“முதல்வர் வருகிறார் என்றால், இரண்டு கி.மீ. தூரத்தை க்ளியர் பண்ணும் எங்களுக்கு, இந்தக் கூட்டத்தை கலைப்பது பெரிய காரியம் இல்லை. கைகள் கட்டப்பட்டிருக்கின்றன அவ்வளவுதான்” என்றார் வெளிமாவட்டத்திலிருந்து பாதுகாப்புப் பணிக்கு வந்திருந்த அதிகாரி ஒருவர்.

சேஷன், விஷயத்தை ஜனாதிபதி, பிரதமர் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார். அன்று நடந்த சம்பவங்கள் அனைத்தும் தமிழக அரசும் டெல்லிக்கு தெரிவிக்க இருக்கிறது.

ஆனால் சேஷன் விவகாரம் ஒரு விஷயத்தை மட்டும் தெளிவாக்குகிறது. ஆளும் கட்சி அராஜகத்தை அனுமதித்தால் நாளைக்கு கவர்னர் கூட ராஜ்பவனை விட்டு வெளியே வர முடியாது என்பதுதான் அது. ஏனென்றால் சட்டப்படி மத்திய பாதுகாப்புப் படைகள் கூட மாநில அரசின் சம்மதத்தோடுதான் செயல்பட முடியும்.

— தில்லப்பா

படம் - நன்றி : தினமலர்

சேஷன் விவகாரம் :

அராஜகமன்னா அவங்க அகராதி யில 'ஃபைவ்-ஸ்டார்' ட்ரீட்மெண்ட் போலிருக்கு...!



'ஹாய்!'

ஆர். வெங்கடேஷ்

அரசல் புரசலாய் விஷயம் தெரிந்தபோது கல்யாணிக்கு ஒரு நிமிஷம் பிரமிப்பாய் இருந்தது. ஆர்த்தி, பாலாஜியை விரும்புகிறாள். ஜூன் வந்தால்தான் பதினாறு வயது நிரம்பும் ஆர்த்தி. கோவையில் +2 படிக்கும் பாலாஜி. எப்படி நடந்திருக்கும்?

அத்தை பிள்ளை என்ற உறவு, நெருக்கம் தந்ததுண்டு. மனசுவரை பதியுமா? பதிந்திருக்கிறது.

ஆர்த்திக்கு பாலாஜி கடிதம் எழுதுகிறான். அதில் ஒன்று கண்ணில் பட்டபோது தான் ஆச்சரியம், பயம் எல்லாம்.

போனமுறை லீவுக்கு பாலாஜி, தன் அம்மாவுடன் வந்தபோது, ரொம்ப ஜாலியாகப் பொழுது போயிற்று. அவர்கள் ஊர் திரும்பின பின் இரண்டு நாட்கள் பிரமை பிடித்தவள்போல் இருந்தாள் ஆர்த்தி. இப்போது விஷயம் புரிகிறது. யாரையும் குறை சொல்ல முடியாது. ஆனால் வயசு?

ஆனால் ஆர்த்தியின் அப்பா மேலும் கீழும் குதித்தார், விஷயம் தெரிந்ததும் இயல்பான முரட்டுத்தனம். வேகம். பொறுமை காத்தாள் கல்யாணி. தப்பான விஷயமாய்த் தோன்றவில்லை. ஆனால் வாழ்க்கையில் பார்க்க, படவேண்டியது இன்னும் எவ்வளவோ இருக்கிறது. குறைந்த பட்சம், இருபத்தொன்றில் கல்யாணம் என்றாலும், இன்னும் ஐந்து வருஷம் இருக்கிறதே? என்ன வேண்டுமானாலும் நடக்கலாம், அதற்குள். இன்னும் உறுதிப்படாத சின்ன மனசு. ஏதாவது ரணம் ஏற்பட்டாலும், வலி தாங்குமா? முக்கியமானது, படிப்பு. அது பாதிக்கப்பட்டால், அப்புறம் ஒன்றுமேயில்லை. பயமாயிருந்தது கல்யாணிக்கு. கலவரமாகவும்.

"என்ன ஆன்ட்டி, கூப்டீங்களாமே அம்மா சொன்னாங்க?"- பாலாஜி.

கல்யாணச் சந்தடி தன்னி மேலே அழைத்துப் போனாள் கல்யாணி. உறவு கல்யாணம். ஒரே கொண்டாட்டம். சப்தம்.

"என்ன விஷயம் ஆன்ட்டி?"

"நீதான் சொல்லணும். ஆர்த்தி படிக்க வேண்டாமா? லெட்டர் எல்லாம் போட்டுண்டே இருக்கிறே?"

திகைத்தான். பின் மெள்ள புன்னகைத்தான்.

"சாரி ஆன்ட்டி.. ஆனா நான் இப்ப லெட்டர் போடறதேயில்லையே ஆன்ட்டி? ஆர்த்தி கூடாதுன்னுட்டா!"

"அப்படியா?"

"இதோ பாருங்க" அவன் பர்ஸிலிருந்து நான்காய் மடித்திருந்த கடிதத்தைக் கொடுத்தான். மணிமணியாய் ஆர்த்தியின் ஆங்கிலம்.

டியர் பாலாஜி,

உன் எல்லா லெட்டர்ஸூம் கிடைத்தது. இனி எழுதாதே. இது போதும். உன் மனசு புரிந்து விட்டது. முதல் வரியில் என் மனதும் உனக்குப் புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். ஆனால் வாழ்க்கை வேறு. நான் படிக்க வேண்டும். பெரிய ஆளாக வர வேண்டும். எம்.பி.ஏ. என் கனவு. அப்புறம் சிஸ்டமஸ் அனாலிஸ்ட் ஆக எப்படியும் இருபத்தி ஐந்து வயதாகும். பொறுமையிருந்தால், காத்திரு. அதுவரை ப்ளீஸ், டோண்ட் டிஸ்டர்ப் மீ.

எங்கேயாவது பார்த்தால் மட்டும் ஒரு ஹாய் சொல்லு, போதும்.

எவர் லவ்விங்,

ஆர்த்தி.


நான்கு மாதத்திற்கு முன் எழுதப்பட்ட கடிதம்.

"நானும் முன்னுக்கு வர வேண்டாமா ஆன்ட்டி? வித்தவுட் எனி டிஸ்டர்பென்ஸஸ், இப்போ நானும் ஐ.ஐ.டி. என்ட்ரன்ஸூக்கு ட்ரை பண்றேன். வரேன் ஆன்ட்டி..."

அவன் படியிறங்கினான். 'ஹாய்' சப்தம் கேட்டது.

ஆர்த்தியின் குரல்தான். ஆனால் கல்யாணிக்கு இம்முறை கலவரம் ஏதும் இல்லை.





போலிச் சாமியார்களால் எல்லா மதங்களுக்குமே ஆபத்துதான். குறிப்பாக இந்து மதத்துக்கு ரொம்பவும் ஆபத்து. காரணம், பரந்துபட்ட மக்கள் உள்ள மதம் இந்து மதம்; அதுவும் வாழ்க்கைக்கே உத்தரவாதமில்லாத தன்மையுடைய மக்கள் அதிகம் உள்ள மதம்.

ஒரு சராசரி கிறிஸ்துவனோ, முஸ்லீமோ தனது மதத்தைப் பற்றித் தெரிந்திருக்கிற அளவுக்கு, ஒரு சராசரி இந்துவுக்குத் தனது மதம் பற்றித் தெரியாது. எத்தனை இந்துக்களுக்கு வேதம் தெரியும்? பகவத் கீதை தெரியும்? மதம் பற்றிய மக்களின் இந்த அறியாமைதான் போலிச் சாமியார்களின் தோற்றத்துக்கு மூலகாரணமாகிறது; அவர்களின் வளர்ச்சிக்கும் உதவியாக இருக்கிறது.

நமது அரசியல்வாதிகளும் பொருளாதாரம் தெரியாத நமது மக்களின் அறியாமையைத்தான் மூலதனமாகக் கொண்டு அரசியல் நடத்துகிறார்கள் என்பதால், மதப் போலிகளும் அரசியல் போலிகளும் ரொம்பவும் இயல்பாகக் கைகோத்துக் கொண்டு, மக்களை ஏமாற்ற ஆரம்பித்து விடுகிறார்கள்.

இதன் காரணமாகத்தான் இந்துமத இயக்கங்கள் கூட அரசியல் இயக்கங்களாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. கங்கை எத்தனை புனிதமானது என்று சொல்கிறார்கள்! அந்தக் கங்கையைக் காவிரியோடு இணைத்தால் அது இன்னும் பெரிய புண்ணியமாகாதா? புனிதமாகாதா? அயோத்தியில்

கவர் ஸ்டோரி.... கவர் ஸ்டோரி.... கவர் ஸ்டோரி.... கவர் ஸ்டோரி....

போலி சந்யாசிகள் அவ்வப்போது அடையாளங் காணப்படுவது ஆன்மீகத்திற்கு ஓர் எச்சரிக்கையே தவிர, ஆபத்து அல்ல. சங்கரர், இராமானுஜர், மத்வர் என்று மகாபுருஷர்கள் அவதரித்த பூமி நமது பூமி. அவர்களைத் தொடர்ந்து இன்றும் சில தவச் சீலர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களெல்லாம் தங்களை விளம்பரப்படுத்திக் கொள்ளாமல் இருப்பதால்தான் போலிகள் பிரகாசிக்கிறார்கள்!

அரசும் ஆன்மீகமும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் மாதிரி. இரண்டும் ஒன்றாக முடியாது; கூடாது. இன்னும் சொல்லப் போனால், அவை தண்டவாளங்கள் மாதிரி. இரண்டும் இணையாகச் செல்ல வேண்டுமே தவிர, இணையக் கூடாது. ஆயினும் துரோணர் போர்க்களத்துக்கு வந்த மாதிரி, சாணக்யன் அரசியலுக்கு வந்த மாதிரி எப்போதோ ஒரு சந்தர்ப்பத்தில் அரசியலும் ஆன்மீகமும் இணையலாமே தவிர, எல்லாக் காலங்களிலும் கூடாது.

ஓர் அரசியல்வாதி ஆன்மீகவாதியை எதற்குத் தேடி வர வேண்டும்? அரசியல்வாதி மட்டுமல்ல; பொது ஜனங்களும் தான் எதற்காகத் தேடி வர வேண்டும்? அப்படித் தேடி வருபவர்கள் ஆத்மார்த்தமாகவா வருகிறார்கள்? எனக்கு எப்போது இன்னும் பெரிய பதவி கிடைக்கும்? எனக்கு எப்போது பிரமோஷன் கிடைக்கும்?

“போலிச் சாமியார்கள்: ஆன்மிகத்துக்கு ஓர் எச்சரிக்கை!”

- ஸ்ரீபெரும்புதூர்
ஸ்ரீ வரத எதிராஜ
ஜீயர் சுவாமிகள்

"மத விஷயங்களில் படித்தவர்களும் பாமரர்களே!"

— பெரியார்தாசன் கூறுகிறார்

மசூதியை இடிப்பதற்காகத் திரட்டிய கரசேவகர்களைக் கங்கை - காவிரி இணைப் புக்காகத் திரட்டியிருந்தால் என்னைப் போன்ற நாத்தி கர்கள் கூட ஆனந்தப்பட்டிருப் பார்களே! ஏன் செய்யவில்லை? காரணம் அவர்களின் போலித் தன்மை.

போலிகள் இருக்கிறார் கள் என்பதாலேயே ஆதி சங்கரர், இராமானுஜர், தாயு மானவர், வள்ளலார் போன் றவர்களை நாம் ஒதுக்கித் தள்ளி விட முடியாது. அப்புறம் என்னதான் செய்வது?

சமயம், தத்துவம், பொருளாதாரம் இந்த மூன்றையும் மக்களுக்குச் சொல்லித் தந்தாக வேண்டும். அதுவும் சரியான முறையில் சொல்லித் தந்தாக வேண்டும். மக்களுக்குப் பொருளாதார அறிவும் தெளிவும் இருந்து விட்டால் அரசியல்வாதிகளால் ஏமாற்ற முடியாது. சமய - தத்துவ அறிவும் தெளிவும் இருந்து விட்டால் போலிச் சாமியார்களால் ஏமாற்ற முடியாது.

ஆனால், எப்போதோ மக்க ளுக்குப் பொருளாதாரத்தைச் சொல்லித் தந்திருக்க வேண்டிய நமது அரசியல்வாதி கள், இப்போதுதான் எழுத்தறிவு இயக் கத்தை ஆரம்பித்திருக்கிறார்கள் என்பது எத்தனை பெரிய அவலம்! எத்தனையோ பெரிய பெரிய மகான்கள் தோன்றி, சமயம் பற்றிய தெளிவை மக்களுக்கு உண்டாக் குவதற்காகச் சத்சங்கங்கள் நடத்தியதாகச் சரித்திரம் இருக்கிறதே தவிர, நடைமுறை யில் இப்போது யாராவது செய்கிறார் களா? →


ஸ்டோரி.... கவர் ஸ்டோரி.... கவர் ஸ்டோரி.... கவர் ஸ்டோரி.... கவ

என் மகளுக்கு எப்போது கல்யாணம் நடக்கும்? இத் தனை சுயநலங்களையும் கொண்ட காம்யார்த்தமா கத்தான் வருகிறார்களே தவிர, வேறொன்றும் இல்லை. இதையெல்லாம் நிவர்த்தி செய்பவன் புரோக்கராகத் தான் இருக்க முடியுமே தவிர, துறவியாக இருக்க முடியாது. ஒரு நிஜமான துறவி, ஆத்ம அபிவிருத்திக்குத்தான் உதவு வார்; உதவவும் முடியும்.

இன்னும் சொல்லப் போனால் துறவிகள்தான் மக்களைத் தேடி வர வேண் டும். இதன் காரணமாகத் தான் அவர்கள் பிட்சை எடுத்துச் சாப்பிட வேண்டும் என்று சாஸ்திரம் சொல்லு கிறது. இன்றைய நிலையில் மடங்கள், பீடங்கள் ஆகிய வற்றை நிர்வகிக்க வேண்டிய பொறுப்பில் துறவிகள் இருப்பதால் பிட்சைக்கு வருவது சாத்தியமில்லைதான். அதற்காகத் துறவிகள் பந்தாவோடும் படாடோபத்தோடும் இருக்கக் கூடாது. அது நிஜத் துறவு ஆகாது.

மணவாள மாமுனிகள் எத்தனை பெரிய மகான்! அவர் சொல்கிறார் : "பெரு மானே, என்னைச் சுற்றி எத்தனையோ தவச் சீலர்கள். கற்றறிந்தவர்கள், மேதைகள். ஞானிகள் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் தங்களை விட நான் அதிகம் தெரிந்த வன் என்று கருதுகிற அவ





"அம்மா எனக்கு உடனே கல்யாணத் தைப் பண்ணி வைக்க முடியுமா முடியாதா...?"

"முடியாதுடா. என்ன செய்வே?"

"சாமியாராப் போய் ஆசிரமம் நடத்து வேன்!"

"ஐயய்யோ... என்னாங்க... இவன் என்ன வெல்லாமோ அசிங்க அசிங்கமாப் பிளான் பண்றான். சீக்கிரம் ஒரு பொண்ணைப் பாருங்க!"

— கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா

சரி, இதுபோன்ற போலி மதவாதி களின் உள்ளீடற்ற தன்மையை மக்களுக்கு உணர்த்த வேண்டிய நாத்திக இயக்கம் என்ன செய்கிறது? அந்த இயக்கம் கூட இன்னொரு சந்தர்ப்பவாத நிறுவனமாகி விட்டது, இன்னொரு கொடுமை! ஆக, இவர்களின் செயலற்ற தன்மை கூட போலிச் சாமியார்களின் வளர்ச்சிக்கு ஒரு காரணம் என்பதையும் மறுக்க முடி யாது.

எனவே, சமயத்திலும் சரி, அரசியலிலும் சரி, போலிகளை மக்கள் அடையாளம் காண வேண்டுமானால் சமயம், தத்துவம், பொருளாதாரம் ஆகிய மூன்றும் அடிப் படைக் கல்வியாக மக்களுக்குப் போதிக் கப்பட வேண்டும்; பள்ளி - கல்லூரிப் பாடத் திட்டங்களில் சேர்க்கப்பட வேண்டும். இந்த அடிப்படைக் கல்வி இல்லாத காரணத் தால்தான் பொறியியல், மருத்துவம் என்று படித்தவர்கள் கூட பாமர மக்களைப் போலவே போலிகளிடம் ஏமாந்து போய்க் கொண்டிருக்கிறார்கள்! ஆன்மீகத்தின் போர் வையில் நடக்கும் அக்கிரமங்களைக் கண்ட பிறகும் கொதித்தெழாமல் அடங்கிக் கிடக் கிறார்கள்.

சந்திப்பு : **பிரின்ஸ்**

படம் : **யோகா**

அட்டை வடிவமைப்பு : **அரஸ்**

கவர் ஸ்டோரி.... கவர் ஸ்டோரி.... கவர் ஸ்டோரி...: கவர் ஸ்டோரி....

வுக்கு நான் அவர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறேனோ என்று தெரியவில் லையே!"

ஆஹா! மணவான மாமுனிகளுக்குத்தான் எத்தனை தன்னடக்கம்! அத்தனை பெரிய மகானே அப்படியொரு தன்னடக்கத்தோடு தான் இருந்தார் என்பதை மக்கள் உணர வேண்டும். துறவியின் அடையாளம் காஷா யம் மட்டுமல்ல; எளிமை; தன்னடக்கம், கேரக்டர் என்று எல்லாம் சேர்ந்ததுதான் என்பதையும் உணர வேண்டும்.

இன்றைய வாழ்க்கையில் மக்களுக்கு ஏராளமான டென்ஷன். அதற்குத் துறவிகள் மருந்தல்ல. கோயிலுக்குச் செல்லுங்கள். ஆலோசனைகள் கேட்க வேண்டுமா, உங்கள் வீட்டிலுள்ள பெரியவர்களிடம் கேளுங்கள். ஆண்களே துறவிகளை நாடிச் செல்ல வேண்டியதில்லை என்கிற போது பெண்கள் ஒருபோதும் போகக் கூடாது. அவர்கள் தங்களுக்கு என்ன பிரச்னைகள் என்றாலும் திருமணமாகும் வரை பெற்றோரிடம்தான் கலந்து ஆலோசனை பெற வேண்டும். திரு மணத்திற்குப் பிறகு கணவன். விதவையான வர்களுக்குக் குழந்தைகள். இந்த வரை முறையைப் பெண்கள் மீறுவதால்தான் போலிகள் அவர்களைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

இவற்றோடு இன்னொன்றையும் சொல் லித்தான் ஆக வேண்டும். பொதுவாகவே இப்போது சத்யம், தர்மம் எல்லாம் மக்க ளிடம் குறைந்துதான் போய் விட்டது. இதன் காரணமாகத்தான் கோயில் நகைகள் களவு போகின்றன; சிலைகள் திருட்டுப் போகின் றன. கோடிக்கணக்கான மதிப்புள்ள சொத் துக்களையுடைய கோயில்களில் கூட நைவேத்யம் செய்வதற்கு ரேஷன் அரிசி கூட வாங்க முடியாத நிலையும் ஏற்பட்டிருக் கிறது.

இருப்பினும் காலங்காலமாக எத்த னையோ சோதனைகளைக் கடந்து வந்த மதம், நமது மதம். எனவே, அவ்வப்போது தோன்றும் போலிகளும் புல்லுருவிகளும் மக்களின் ஆன்மீக விழிப்புணர்வுக்கான எச்ச ரிக்கையே தவிர, ஆபத்து அல்ல என்பதிலும் சந்தேகமில்லை.

சந்திப்பு : **ப்ரியன்**

ஸ்ரீ கந்தசுவாமி
பர்மனென்ட் பண்டு லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நீதி நிறுவனம் துவக்கம் 1990
பதிவு அலுவலகம்: 60, சாமி பண்டாரம் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை- 600 002.
கிளை அலுவலகம்: 36, ஜீனிஸ் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை-600 015. போன்: 459569



பிக்சட் டிபாசிட்

46நாள்	3மாதம்	6மாதம்	ஆண்டு	2ஆண்டு	3ஆண்டு	4ஆண்டு	5ஆண்டு
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%

21%


5 வருடங்கள்
ரூ.50,000/-
அதற்கு மேலும்

PB பாண்டு

முதலீடு	காலம்	திரும்பப் பெறும் தொகை
ரூ. 25,000	60 மாதம்	ரூ. 70,000


சொத்துக்கள் மீது கடன்

- ❑ வீடு / ஃப்ளாட் பேரில் கடன் வழங்கப்படும்.
- ❑ மாத வட்டி ரூ.1.85 மட்டுமே
- ❑ விரைந்த சேவை.
- ❑ சென்னை மாநகராட்சி இருக்க வேண்டும்.



நகைக்கடன்

- ❑ குறைந்த வட்டிக்கு கிடைக்கும்
- ❑ 10 கிராமுக்கு ரூ.3000 வழங்கப்படும்.
- ❑ R.D. கட்டத் தேவையில்லை
- ❑ எந்த சார்ஜும் வசூலிப்பதில்லை



பென்ஷனர் நலத்திட்டம்

20%P.a ரூபாய் 10 ஆயிரமும் அதற்கு மேலும் காலம் 1 ஆண்டு வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.




சேர்மன்:
P. பாலசுப்பிரமணியம், B.Sc.,
முதன்மை அறங்காவலர்,
ஸ்ரீகந்தகோட்டம்,
சென்னை-600 003.
ஆலோசகர்
பார்க் டவுன் பெனிபிட்
பண்டு லிட்.


இயக்குநர்கள் குழு
R.விவேகானந்தன் B.Com.,
(Chairman : Park Town Benefit Fund Ltd.)
A.சுப்பிரமணியன்
V.சண்முகவடிவு B.A.,
V.விஜயகோபால் B.Com., D.C.P.
M.ராஜேந்திரன்
P.ஏகாம்பரம்

H.O. Friday Holiday பங்குதாரர்களுக்கு மட்டும் B.O. Tuesday Holiday

Kalki Shopping Page







ஆளுநர்
உடல் போர்வழிக்கு பதவி ஒரு கேடா...?
குறுக்கு வழியில் பதவி நீட்டிப்பு
முதல்வர்
மணியடிக்குது, நல்ல சகுனம்தான்;
பிரதமர்
கர்நாடகா
சிக்கிம்
ஆந்திரா
கோவா
சேஷன்
கறுப்புக்கொடி காட்டினா பயந்துடுவேனா? எனக்கு எப்பவும் நேர்வழிதான்...



கல்கி



1994
டிசம்பர் 11
பவ
கார்த்திகை 25
மலர் : 53
இதழ் : 19

தமிழ்த்திரு நாடு
தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.

சேஷன் நடத்திய ஏர்போர்ட் நாடகம்

சேஷன் காப்பி கேட்டதும், அது வரத் தாமதமாகவே, "ஏர்போர்ட்டை மூடி விடலாமே" என்று சீறியதும், தாம் சாப்பிட்டுக் கொண்டிருப்பதாகக் கூறி ஸ்ரீபாலைக் காக்க வைத்ததும், தம்மைக் காக்க வைத்ததாக ஸ்ரீபாலிடமும் ஹரிபாஸ்கரிடமும் இரைந்ததும், தமது வாழ்க்கை வரலாறு புத்தகத்தை "எங்கே காணோம்?" என்று புத்தகக் கடையில் கேள்வி எழுப்பியதும் எல்லாம் நாடகத்தின் தமாஷ் காட்சிகள். கதையின் மையக்கரு, "சேஷனைத் தமிழக அரசு அவமானப்படுத்த எண்ணியது; அவமானப்பட்டு நின்றது" என்பதுதான்! சேஷன் தமது அதிகாரத்தைக் காட்ட தமிழக அரசு வாய்ப்பளித்து விட, சேஷன் அந்த வாய்ப்பைத் திறம்படப் பயன்படுத்திக் கொள்ள, டி.ஜி.பி. ஸ்ரீபாலும் தலைமைச் செயலர் ஹரிபாஸ்கரும் அலறி அடித்துக் கொண்டு ஓடி வந்து, கைகட்டி நிற்க நேர்ந்தது. சேஷன் இறுதி வரை உறுதியாக இருந்து, தாம் எண்ணியதைச் சாதித்துக் கொண்டார். தமிழக அரசு சிறுமைப்பட்டுப் போயிற்று.

ஆட்சிப் பொறுப்பில் உள்ளோர் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டிருந்தால் இந்த அவமானத்தை எளிதில் தவிர்த்திருக்கலாம்.

அண்ணாவைப் பற்றி, சேஷனின் வாழ்க்கை வரலாறு நூலில் எழுதப்பட்டிருப்பது நம்மில் யாருக்குமே உடன்பாடு இல்லை. எதிர்ப்புத் தோன்றியதும், சேஷன் அதற்கு நேரடியாக வருத்தம் தெரிவிக்காமல் ஏதேதோ கூறி மழுப்புவதையும் நாம் ஏற்கவில்லை. "மாற்று கருத்து தெரிவிக்கும் உரிமை அனைவருக்கும் உண்டு; அந்த உரிமையை என்னிடமிருந்து பறிக்க முடியாது" என்கிறார் சேஷன். மாற்றுக் கருத்து என்பது வேறு; உண்மைக்குப் புறம்பான செய்தி என்பது வேறு. சேஷனின் கூற்றுப்படியே பார்த்தாலும், இவர் எழுதியதற்கு மறுப்புத் தெரிவிக்கவும் இவருக்குக் கறுப்புக் கொடி காட்டவும் உரிமை, அண்ணாவை மதிப்பவர்களுக்கு நிச்சயம் உண்டு அல்லவா?

அப்படி காட்ட முற்பட்ட தமது கட்சிக்காரர்களிடம் அமைதியை வற்புறுத்தி, "ஓர் அடையாளமாகத்தான் இந்த எதிர்ப்பை உணர்த்த வேண்டும்; வன்முறை கூடாது" என்று முதல்வர் கட்டளையிட்டிருந்தால் பிரச்னையே இருந்திருக்காது. இவ்வாறு முதல்வர் நடந்து கொள்ளாததற்குக் காரணம், தமது கட்சிக்காரர்களிடம் அவர் செல்வாக்கு இழந்து விட்டதாக இருக்க முடியாது; வேண்டுமென்றேதான் வாளாவிருந்திருக்கிறார் என்பது தெளிவு. போலீஸ் உயர் அதிகாரிகளே சேஷனிடம், "சட்ட ஒழுங்கு பிரச்னை இருப்பதால் மாற்று வழியில் போகலாம்" என்று கூறியுள்ளனர். இதற்கு சேஷன் இணங்கியிருந்தால், "பயந்து பதுங்கிச் சென்றார்" என்ற பரிகாசத்துக்குள்ளாகி இருப்பார். எனவே, நேர்வழியில்தான் தாம் அழைத்துச் செல்லப்பட வேண்டும் எனப் பிடிவாதம் பிடித்தது அவரது மதிநுட்பம்!

ம.தி.மு.க. தலைவர்களிடமும் போலீஸ் அதிகாரிகள் முன்கூட்டியே பேசி, ஓர் ஆரோக்கியமான, அடக்கமான, அடையாள எதிர்ப்புக்கு மட்டும் இடமளித்து, கண்ணியம் காத்திருக்கலாம். ஆனால் இவற்றையெல்லாம் முன்யோசனையுடன் (அல்லது வேண்டுமென்றே) செய்யத் தவறி விட்டு, "சேஷன் மாற்று வழியில் போக மாட்டேன் என்று அடம் பிடித்தார்" என்று அவர் மீதே பழிசுமத்துவது பொறுப்பிலிருந்து நழுவி தப்பிக்கப் பார்ப்பதாகும். "சேஷனுக்கு இங்கு அதிகாரபூர்வமான பணி இல்லை; சொந்தக் காரியமாக வந்தார்" என்று முதல்வர் நாடகக் கதையைத் திசை திருப்பப் பார்ப்பதும் அபத்தம். சேஷன் என்று இல்லை; இந்தியக் குடிமகன் யாராயினும், எந்த வேலையாக வந்தாலும், அவனுக்கு விமான நிலையத்திலிருந்து பொதுச் சாலைகளைப் பயன்படுத்தி தன் இருப்பிடம் சேர உரிமை உண்டு. அந்த உரிமைக்கு பங்கம் நேராது பார்த்துக் கொள்ள வேண்டியது அரசின் கடமை. ஆனால் மக்களைத் தமது ஊர்திகள் ஊர்வலத்துக்காக நாள்தோறும் மணிக்கணக்கில் காக்க வைக்கிற முதல்வர் இந்த உண்மையை உணர்ந்திருக்கிறாரா என்பதே சந்தேகம்!

ஆர்ப்பாட்டக்காரர்களின் பிரதிநிதிகளாக இரு சிறு குழுக்களை சேஷன் சந்திக்கச் சம்மதித்திருந்தால், இதற்கு அ.தி.மு.க.வும், ம.தி.மு.க.வும் ஒப்புதல் அளித்திருந்தால், போலீஸ் உயர் அதிகாரிகளும் ஒத்துழைத்திருந்தால் ஜனநாயகம் தலைநிமிர்ந்திருக்கும்.

ஆனால் இங்கே ஆரோக்கிய ஜனநாயகம் பற்றி யாருக்கு அக்கறை? ஈகோ பிரச்னைதானே முந்திரிக் கொட்டையாக முன் நிற்கிறது!

காட்சி - 1

இடம் : பத்திரிகை அலுவலகம்.

உதவி ஆசிரியர் : என்ன ஸார், கவலையா இருக்கீங்க?

ஆசிரியர் : பிரசுரகர்த்தர், நேத்து ரொம்பக் கடுமையாப் பேசிட்டாருய்யா 'பொறுப்பில்லாம நடந்துக்கறீங்க, நரசிம்மன்! இப்படி பத்திரிகை நடத்தினா இழுத்து மூடிட்டுப் போக வேண்டியதுதான்'னு சத்தம் போட்டாரு.

உ.ஆ : நல்ல கௌரவமான பத்திரிகைன்னுதானே நம்ம பத்திரிகையைப் பத்தி மக்கள் பேசிக்கிறாங்க...?

ஆசிரியர் : அதனாலேதான் அவர் கோபப்படறாரு. இவ்வளவு கௌரவம் எவன்யா கேட்டான்னு கத்தறாரு. பத்திரிகையைத் தரமா நடத்தி மானத்தை வாங்கறீங்களேன்னு திட்டறாரு.

உ.ஆ : அவர் சொல்றது கரெக்ட்தான் ஸார். இவ்வளவு ஒழுங்கா பத்திரிகை நடத்தினா எவன் ஸார் நம்மை மதிப்பான்? சர்குலேஷன் குறைஞ்சிட்டு வரும்போதே, பத்திரிகை தரம் உயர்ந்துகிட்டு வருதோன்னு பயந்தேன். எச்சரிகையா இருங்கன்னு அடிச்சுக்கிட்டேன். நீங்க கேக்கலை. பிரசுரகர்த்தரே கூப்பிட்டுத் திட்டினாத்தான் உங்களுக்கு உறைக்குது.

ஆசிரியர் : இப்ப என்னய்யா பண்றது? 'நீங்க என்ன பண்ணுவீங்களோ, தெரியாது. சர்குலேஷனை மடமடன்னு மூணு லட்சத்துக்கு உயர்த்தியாகணும். பத்திரிகை எவ்வளவு மட்டமாயிருந்தாலும் பரவாயில்லை. என்னாலே வெளியே தலை காட்ட முடியலை'ன்னு முடிவா சொல்லிட்டாரு. முடியாதுன்னா வேறே ஆசிரியரை வெச்சு நடத்திக்கிறாராம்.

உ.ஆ :அப்படின்னா என்னைப் பத்தி அவர் கிட்டே கொஞ்சம் ரெகமண்ட் பண்ணுங்க ஸார்.

3 லட்சம் விற்பனைக்கு முத்தான யோசனைகள்!

ஆசிரியர் : அடப்பாவி! என் வேலைக்கே குழி பறிக்கிறியா?

உ.ஆ : பின்னே, நானும் வாழ்க்கையிலே முன்னுக்கு வர வேண்டாமா ஸார்? நான் ஆசிரியர் ஆனா, முதல் இதழிலேயே அட்டையிலே உங்க படத்தைப் போட்டு நன்றி தெரிவிப்பேன் ஸார். வேற யாரோ உங்க ஸீட்லே உட்கார்றதுக்கு நான் உட்கார்ந்தா உங்களுக்குப் பெருமைதானே?

ஆசிரியர் : வாயை மூடுய்யா. போய் நம்ம ஸ்டாஃப் எல்லாரையும் கூப்பிடு. முதல்லே சர்குலேஷனை இன்க்ரீஸ் பண்றது பத்தி டிஸ்கஸ் பண்ணியாகணும்.

காட்சி - 2

ஆசிரியர் : சர்குலேஷன் மூணு லட்சத்தைப் பிடிக்கணும். உருப்படியான ஐடியாவா சொல்லுங்க.

உ.ஆ 1 : இப்போ மகாத்மா காந்தி வாழ்க்கை வரலாற்றைப் பிரசுரிச்சுக்கிட்டு வரோம் இல்லையா? உடனடியா அதை நிறுத்தணும்.

ஆசிரியர் : நிறுத்தினா சர்குலேஷன் ஏறும்னா சொல்றீங்க? இந்தத் தலைமுறை வாசகர்களுக்கு ரொம்பப் பயனுள்ள விஷயமாச்சே....

உ.ஆ 2 : படிச்சா பயன் கிடைக்கலாம். யாரும் படிக்கிற மாதிரி தெரியலையே...

ஆசிரியர் : வாசகர்களைப் படிக்க வெக்கறதுக்கு நாம என்ன பண்ண முடியும்?

உ.ஆ 3 : வாசகர்களுக்கு இஷ்டம் இல்லைன்னா விட்டுடணும். அவங்களைத் தொந்தரவு பண்ணக்கூடாது.

உ.ஆ 2 : இல்லேன்னா, மகாத்மா காந்தியைப் பத்தி நடிகை ஜூஹி சாவ்லாவை விட்டு எழுதச் சொல்லலாம். ஜூஹி சாவ்லா படத்தைப் போடறதுக்கு நமக்கும் ஒரு சான்ஸ் கிடைக்கும். ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு நடிகை மகாத்மாவைப் பாராட்டி எழுதட்டும்.

ஆசிரியர் : இப்ப இருக்கிற இளம் நடிகைகளுக்கு மகாத்மாவைப் பத்தி என்ன தெரியும்?

உ.ஆ 2 : ஆனா, இப்ப இருக்கிற வாசகர்களுக்கு இளம் நடிகைகளைத்தானே தெரியுது.

உ.ஆ 1 : நான் என்ன சொல்றேன்னா, மகாத்மா காந்தி வாழ்க்கை வரலாறுக்குப் பதிலா முப்பத்தெட்டு கொலை பண்ண முனுசாமியோட வாழ்க்கை வரலாற்றைப் பிரசுரம் பண்ணா பரபரப்பா இருக்கும்.

ஆசிரியர் : கொலைகாரனுக்கா



முக்கியத்துவம் கொடுக்கச் சொல்றீங்க?

உ.ஆ 1 : நீங்க ஏன் குறுகிய கண்ணோட்டத்தோட கொலைகாரனை மட்டும் பாக்கறீங்க? முனுசாமியோட வாழ்க்கை வரலாறைப் படிச்சா இனிமே யாரும் முப்பத்தெட்டு கொலை பண்ண மாட்டாங்க. ஒரு அளவோட நிறுத்திக்குவாங்க. சமுதாயத்துக்கு எவ்வளவு பெரிய நன்மை? பாவம் முனுசாமி.... அவனுக்காக நாமதானே குரல் கொடுக்கணும்...?

உ.ஆ 2 : அப்புறம் இந்த உள்ளாடை ஜோக், செக்ஸ் ஜோக் இந்த டைப்லே எதையாவது கண்டு பிடிக்கணும்.

ஆசிரியர் : சீச்சீ... குமட்டுது. கர்மம்! என்னய்யா ஜோக் அது?

உ.ஆ 3 : வாரா வாரம் படிச்சுக்கிட்டிருந்தா பழகிடும் ஸார். அப்புறம் நீங்களே கேப்பீங்க....

உ.ஆ 1 : லைட் அடிக்கிறது... ஜொள்ளு விடறது... அதை விட்டுட்டீங்களே....

உ.ஆ 2 : அதை விட முடியுமா? கல்லூரி மாணவர்களைக் கவர்றதுக்கு அதை விட்டா வேறே விஷயம் இல்லையே?

ஆசிரியர் : லைட்டுன்னா என்ன? ஜொள்ளுன்னா என்ன?

உ.ஆ 1 : பாத்தீங்களா? உங்களுக்கே அதைத் தெரிஞ்சுக்கணும்னு ஆர்வம் வருது. திருந்த ஆரம்பிச்சுட்டீங்க....

உ.ஆ 2 : 'A' ஜோக்ஸ் ரெண்டு பக்கமாவது வரணும்.

ஆசிரியர் : சேச்சே... நீங்க சொல்றதையெல்லாம் பார்த்தா பத்திரிகையை ரகசியமாத்தான் படிக்க வேண்டியிருக்கும்னு நினைக்கிறேன்.

உ.ஆ 3 : ஆரம்பத்திலே ரகசியமாப் படிப்பாங்க. அப்புறம், எல்லாரும் படிக்கும்போது நமக்கு மட்டும் என்ன கூச்சம்னு வெளிப்படையாவே படிப்பாங்க.

ஆசிரியர் : குற்றாலீஸ்வரன் நீச்சல்லே சாதனை பண்ணியிருக்கான். அவனைப் பத்தி எழுதினா....

உ.ஆ 1 : அதுவும் நல்ல ஐடியாதான். நீச்சல் உடையிலே ஏழெட்டு நடிகைகளோட போட்டோக்களைப் போட்டு, நீச்சலடிப்பது எப்படின்னு வாசகர்களுக்கு அவங்க சொல்லிக் கொடுக்கிற மாதிரி மேட்டர் பண்ணா எல்லாரும் விழுந்தடிச்சுக்கிட்டுப் படிப்பாங்க.

ஆசிரியர் : ரொம்பப் பேத்தலான ஐடியாவா இருக்கே....

உ.ஆ 2 : அப்ப நல்லா வொர்க் அவுட் ஆகும்.

உ.ஆ 1 : அரசியல்வாதிகளை நாம சரியாப் பயன்படுத்திக்கிறதில்லை ஸார். நாற்பது கோடி சுருட்டிட்டாரு ஐம்பது கோடி சுருட்டிட்டாருன்னு மந்திரிகளைப் பத்தி எழுதினாத்தான் பரபரப்பு கிடைக்கும்.

ஆசிரியர் : அப்படியெல்லாம் எழுதறதுக்கு ஆதாரம் வேண்டாமா?

உ.ஆ 2 : ஆதாரம் எப்படி கிடைக்கும்? ஆதாரத்தை வெச்சுகிட்டா கொள்ளையடிப்பாங்க?

ஆசிரியர் : பின்னே எந்த அடிப்படையிலே எழுதறது? அவங்க கேஸ் போடமாட்டாங்களா?

உ.ஆ 2 : போடமாட்டாங்க. நம்ம கிட்டே ஏதாவது ஆதாரம் சிக்கியிருக்குமோன்னு அவங்க பயப்படுவாங்க.

ஆசிரியர் : ஒரு வேளை அவங்க ஊழலே செய்யாம இருந்திருந்தா....?

உ.ஆ 1 : அப்படியிருந்தா முதல்வர் அவங்க மேலே நடவடிக்கை எடுத்திருப்பாங்களே....

ஆசிரியர் : சே....! தலையைச் சுத்துது.

உ.ஆ 2 : உரக்க சொல்லாதீங்க சார், அப்புறம் வாரச் சுடர்ல போட்டுடுவாங்க.

ஆசிரியர் : என்னத்தய்யா போடுவாங்க...?

உ.ஆ 2 : உங்களுக்குத் தலை சுத்துச்சின்ற விஷயத்தைத்தான் சார்....

ஆசிரியர் : சே! இதெல்லாம் ஒரு செய்தியாய்யா?

உ.ஆ 1 : இந்த மாதிரி, செய்திகளைப் போட்டே மூணாவது இடத்துலேர்ந்து சர்குலேஷன்ல முதல் இடத்துக்குக் கொண்டு வந்திருக்காங்க வாரச் சுடரை....

உ.ஆ 3 : ஆமாம் சார்! "கோ'பாக்கத்தில் உள்ள வார இதழின் நான்காவது அவதார ஆசிரியர் சர்குலேஷன் சரிவினால் கவலை தாளாமல் தாமும் மயங்கிச் சரிந்தார்!" அப்படின்னு எழுதுவாங்க.

(ஆசிரியர் நரசிம்மன் நிஜமாகவே மயங்கிச் சரிய, உதவி ஆசிரியர்கள் அவரைத் தாங்கிக் கொள்ளப் பாய்கிறார்கள்.)

இரை

பாலம்

பார்வையற்ற மாணவர்கள் படித்துக் காண்பிப்போர் இன்றி மிகவும் அல்லல்படுகின்றனர். படித்துக் காட்டி உதவ விரும்புவோர் தங்கள் முகவரி, தொலைபேசி எண், வசதியான நேரம், நாள் முதலிய விவரங்களை எழுதவும்.

- பொதுச் செயலாளர்,
பார்வையற்றோர் தேசிய இணையம்,
100/5, ஆவடி ரோடு,
கரையான்சாவடி, சென்னை - 56.

கீழே குறிக்கப்பட்டுள்ள சட்டப் புத்தகங்கள் தேவை. உதவக் கூடியவர்கள் உடன் விலை விவரம் முதலியன தெரியப் படுத்தி எழுதவும். 1. The Law of Speaking Orders, A.S. Misra, 1993 Edition. 2. Judicial Officers Protection Act, 1850 (Case - law, Commentaries, Notes by Eminent Author)

- இரா. பரமேஸ்வரன்,
18, ஒன்பதாம் குறுக்குத் தெரு,
வானவில் நகர் விரிவாக்கம்,
பாண்டிச்சேரி - 605 011.

நான் துணி வாங்கி, சல்வார், கரிதார் முதலியன தைத்து விற்க எண்ணியுள்ளேன். இதற்குரிய ஆலோசனைகள் அனுபவஸ்தர்கள் கூற வேண்டுகிறேன்.

- பு. ஆனந்தி,
42, ஆலந்தூர் சுப்பிரமணிய ஆச்சாரி தெரு,
சூளை, சென்னை - 600 112.

ஆதிசங்கரரின் சௌந்தர்யலஹரிக்கு ஸம்ஸ்கிருத வியாக்கியானம் லக்ஷ்மிதரர் எழுதியிருக்கிறார். இதன் தமிழ் மொழி பெயர்ப்பு ஜி. வி. கணேசன் எழுதியது தேவை.

- ஆர். வைத்தியநாதன்,
6-2-220, New Bhoiguda,
(Upstairs) Secunderabad - 500 003.

வீணை கற்றுக் கொள்கிறேன். வீட்டில் பயிற்சி செய்ய நல்ல நிலையில் உள்ள பழைய வீணை தேவை. விற்க விரும்புவோர் தகவல் தெரிவிக்கவும்.

- இந்திராணி சண்முகம்,
32-கே, பைபாஸ் ரோடு,
திருவண்ணாமலை - 606 602.

தமிழக அரசால் வெளியிடப்பட்ட உயர்கணக்கியல் பாகம் - I, குமரராசா எழுதியது தேவை.

ஆர். வேங்கடராமன்,
D-15, ஜாகிர் உசேன் சாலை,
வட்டம் - 3, நெய்வேலி - 1.

தங்கள் கவிதை இதழ்களில் பிரசுர மாகவில்லையே என்ற கவலையில் உள்ள இளம் கவிஞர்களுக்கு உதவ இருக்கிறேன். உங்கள் கவிதைகளை என் முகவரிக்கு அனுப்புக. தேர்ந்தெடுத்து சிறந்த தொகுப் பாக வெளியிடுகிறேன்.

- நா. விசுவநாதன், அரசூர்,
அம்மன்பேட்டை, தஞ்சாவூர் - 613 205.

என்னிடம் தட்டெழுத்துப் பயிற்சிப் பள்ளி (இன்ஸ்டிடியூட்) ஆரம்பிப்பதற்குத் தேவையான எல்லா பொருட்களும் உள்ளன. ஆர்வம் உள்ளவர்கள் அணுகவும். பொருளா தாரத்தில் பின்தங்கியவர்களுக்குக் குறைந்த விலைக்குக் கொடுக்கவும் தயார்.

- வி. கோமதி,
775, 29-ம் தெரு,
கொரட்டூர், சென்னை - 80.

உ. வே. சுவாமிநாத அய்யர் எழுதிய 1. என் சரித்திரம், 2. மகாவைத்தியநாத அய்யர் வாழ்க்கை வரலாறு இரண்டும் தேவை. விற்ப தற்குத் தயாராக உள்ளவர்கள் தெரிவிக்கவும். ஜெராக்ஸ் எடுத்துக் கொண்டு திருப்பித் தரவும் தயார்.

- கே. பி. ராமகிருஷ்ணன்.
C/o Suraj & Co. Compound,
Warriam Rd., Pallimukku,
Ernakulam - 682 016.

இதுவரை யாராலும் தயாரிக்கப்படாத மிகவும் பிரபலமடையக்கூடிய தொலைக் காட்சி புராணத் தொடர் தயாரிப்பில் பங்குதாரராகி முதலீடு செய்ய விருப்பம் உள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

— R. T. Films, 7, A.G.'s Colony
2nd Phase, Sabari Nagar Extn.,
Porur, Madras - 600 116.

(பாலம் மூலம் இணையும் கல்கி வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி நிறுவனம் பொறுப்பு ஏற்க இயலாது. - ஆர்.)

பெங்களூரின் முதல்
முதலில் க்ரைஸில் மதிப்பு
பெற்ற ஒரே நிதி
நிறுவனம்
FA+



உங்கள் குழந்தையை சம்பாதிக்கத் துவங்கும் முன்பே லட்சாதிபதி ஆக்குவது எப்படி என்பதைக் கண்டறியுங்கள்

ப்ரகாஷ் லீஸிங்-ன் 'லக்பதி' திட்டம் உங்கள் முதலீட்டுக்கு அதிகபட்ச வருமானம் தருவதற்கென்றே உருவாக்கப்பட்டது. இன்று ரூ 13000/- முதலீடு செய்தால் உங்கள் குழந்தை 15 வருடங்களில் லட்சாதிபதி ஆகலாம். ஆம், வருடத்துக்கு 20.12% வரை வருமானம்!

எங்கள் பலம் :

- FA + க்ரைஸில் மதிப்பீடு
- ரூ 2,000 லட்சங்களுக்கும் மேலான நிதியிருப்பு பலம்
- ரூ 450 லட்சங்களுக்கும் அதிகமான மூலதனம் மற்றும் ரிசர்வ்கள்
- 15,000 க்கும் அதிகமான முதலீட்டாளர்

எங்கள் செயல்பாடு :

- கடந்த வருடத்தில் டெபாசிட்டுகள் 200% க்கும் கூடுதல் அதிகரிப்பு
- நிதித் தொகையில் 200% குமுலெடிவ் அதிகரிப்பு
- 200% க்கும் மேலாக குமுலெடிவ் டிவிடென்டுகள் வழங்கப்பட்டன.
- ரூ 8,000 லட்சத்திற்கும் அதிகமாக குமுலெடிவ் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

மிக அதிக செயல் திறனுள்ள எங்கள் முதலீட்டுத் திட்டங்கள் பற்றிய கூடுதல் விவரங்களுக்கு இந்த கூப்பனை இன்றே அஞ்சலில் அனுப்பவும். அல்லது தொலைபேசியில் அழைக்கவும்.

---

prakash
leasing limited

2 வது மாடி
ஸ்பென்சர் டவர்ஸ்
770. A, மவுண்ட் ரோடு.
சென்னை - 600 002.
போன் : 8520286.

வலுவானது நிலையானது ஆதரவுதருவது

- ஒவ்வொரு 5 வருடங்களுக்கும் புதுப்பித்தலுக்கு உட்பட்டது.
- வட்டி விகிதங்கள் ரிசர்வ் வங்கி வரைமுறைகளுக்கு உட்பட்டவை.

இங்கு கத்திரிக்கவும்

ஆம், என் குழந்தை லட்சாதிபதி ஆக வேண்டும்.

☐ லக்பதி திட்டம் பற்றி கூடுதல் விவரம் அனுப்பவும்.
☐ உங்கள் மற்ற திட்டங்கள் பற்றிய விவரங்களை அனுப்பவும்
☐ உங்கள் பிரதிநிதியை என்னைக் காண அனுப்பவும்.

(தேவையான இடத்தில் ✓ செய்யவும்)

பெயர்: ....

முகவரி: ....

தொலைபேசி: அலுவலகம்...... வீடு: ....


Absolute/PLL

Kartik Fine Arts (Regd.)

39 Bheemanna Garden Street, Madras 600 018 Ph: 4997788

20th YEAR ART FESTIVAL - '94

(9th Dec. to 25th Dec.'94)



INAUGURATION on 9.12. 94

at **MUSIC ACADEMY HALL**
Madras

4.35 p.m. 'Mangala Isai' by
Seshampatti T. Sivalingam

Kum. **Alarmel Valli** lights the Kuthuvilakku

Hon'ble Justice Sri **K.A. Swami,** Chief Justice of Madras High Court
inaugurates and confers the title
'ISAI PEROLI' on 'Kalaimamani' **E. Gaayathri**

Sri **C. Subramaniam**, former Governor of Maharashtra
presides

'Sangeetha Kalanidhi' **M.S. Subbulakshmi**
'Padma Bhushan' **Lalgudi G. Jayaraman**
&
Sri **R. Subramanian,** Managing Director, (Sterling Holiday Resorts(I) Ltd.)
will felicitate

7.30 p.m. Bharathanatyam by **Urmila Sathya Narayanan**
(Disciple of Guru 'Kalaimamani' K.J. Sarasa)

A.V.S. RAJA PRESIDENT	**T.V. VENKATRAMAN I.A.S(Retd.)** CHAIRMAN-FESTIVAL COMMITTEE	**R.RAJAGOPAL** **M.R.KRISHNAMURTHY** SECRETARIES

EFFICIENT

Festival Co-Sponsored by: • Ashok Leyland Finance • Balaji Group • Chettinad Cement Corporation • ESSAR Group • G.R. Thanga Maligai • Indian Bank • India Cements • Indian Oil Corporation • IOB • IHFD • ITC • Kumbakonam City Union Bank • Lakshmi Trade Credits • Lalitha Jewellery Mart • Larsen & Toubro Ltd • Mohan Breweries • MRF • MRL • Nalli • Ponds (India) Ltd • Readymoney • Sakthi Group • Shriram Group • State Bank of India • Sterling Holiday Resorts • TAFE • Tamilnadu Petro Products • United India Insurance • Vigneswara Jewellers (Coimbatore)

Courtesy: **Tamilnadu Petroproducts Limited**
Regd. Off : 6, Nungambakkam High Road, Madras – 600 034
Tel : 8254545 Telex : 041-7533 Telefax : 8255798





ஜோதிர்லதா கிரிஜா

மணிக்கொடி


ராஜாராமன் அதிர்ந்தார்.

"ஏம்ப்பா? எதுக்கு இப்ப கல் கத்தா?"

"ஆமா, சார். எங்க ஆர்களை சேஷன்ல நாங்க செய்ய வேண்டிய காரியங்கள் இன்னும் எத்தனையோ இருக்கு. எப்படியும் எனக்குத் தூக்குத் தண்டனை நிச்சயம். போலீஸில் சிக்குவதற்கு முன் திட்டமிட்ட சில காரியங்களை நிறைவேற்றுமாறு தலைவரின் ஆணை."

'எப்படியும் எனக்குத் தூக்குத் தண்டனை நிச்சயம்' என்ற சொற்கள் அமராவதியின் செவிகளை முற்றுகை இட்டன. அவள் விழிகள் உடனே நிறைந்துவிட, அவள் தலையைக் குனித்து கொண்டாள்.

ராஜாராமனின் உணர்ச்சிகளும் பொங்கின. மகன் பற்றிய அதிர்ச்சியான சேதியைச் சுமந்து கொண்டு அழமுடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்த அவருக்கு இப்போது ஒரு வடிகால் கிடைக்க, தம் இரு கைகளையும் அவனை நோக்கி நீட்டினார். நரேந்திரநாத் பாய்ந்து எழுந்து வந்து அவர் கைகளுள்



அடைக்கலமானான்.

"என் அன்பு மகனே! நீ கட்டாயம் போய்த்தான் ஆகவேண்டுமா? உன் பங்குக்கு நீ இரண்டு அராஜக வெள்ளையர்களைத் தண்டித்தாகிவிட்டது. இன்னும் என்னப்பா? வேண்டாம். போகாதே. மறுத்துவிடு..." என்றவாறு குரல் தழுதழுக்கக் கூறிய அவர், அவனை இறுக அணைத்துக் கொண்டு கண்ணீர் பெருக்கினார். அமராவதியும் அஞ்சனாவும் அவரது உணர்ச்சி பொங்கிய நிலை கண்டு ஸ்தம்பித்துப் போனார்கள்.

அப்போது அங்கு வந்த பாமாவும் மலைத்துப் போனாள். இன்னதென்று விளக்க முடியாத துயரத்தின் பிடியில் சிக்கிப் போன அவளும் சோபாவில் உட்கார்ந்து கொண்டு அழலானாள்.

அன்றிரவு முழுவதும் அமராவதி ஒரு காரணத்தாலும் ராஜாராமன் வேறொரு காரணத்தாலும் உறங்க முடியாது தவித்தார்கள்....

கெடியாரத்தில் மணி இரண்டு அடித்ததும், அமராவதி மெல்ல எழுந்தாள். நரேந்திரநாத்தின் அறையை நோக்கி நடந்தாள்.

நரேந்திரநாத் பானர்ஜி மறுநாட்காலை எல்லாரிடமிருந்தும் பிரியாவிடை பெற்றுப் புறப்பட்டான்.

அன்று ஞாயிற்றுக் கிழமையாதலால் அமராவதி கல்லூரிக்குச் செல்லவில்லை. ஆக, எல்லாருமே வீட்டில் இருந்தார்கள்.

பிற்பகலில் பாமா குட்டித்தூக்கம் போட்டுக் கொண்டிருந்த நேரத்தில் அஞ்சனாவுக்கும் அமராவதிக்கும் மட்டும் வாயில் விரல் வைத்து ராஜாராமன் சமிக்ஞை செய்ததும் இருவரும் அவரது அறைக்குச் சென்றார்கள். ராஜாராமன் கதவைச் சாத்தித் தாழிட்டு விட்டுக் கட்டிலில் உட்கார்ந்து ஒரு சின்னக் குழந்தையைப் போல் குலுங்கிக் குலுங்கி அழத் தொடங்கினார். இரு பெண்களும் அவருக்கு இரு புறங்களிலும் உட்கார்ந்து, "அப்பா, அப்பா! என்னப்பா ஆச்சு? எதுக்குப்பா அழறேள்?.., உங்க மூஞ்சி நேத்துலேர்ந்தே சரியாவே இல்லே. என்னப்பா? அருணுக்கு ஏதாவதா?" என்று மாற்றி மாற்றி வினவ, அவர் தமது கோட்டில் உட்புறப் பையிலிருந்து லண்டன் நாளிதழின் அந்தப் பக்கத்தை அவர்களிடம் கொடுத்தார்.

"முத்துசாமின்னு என்னோட ப்ரண்டும்மா, நேத்து லண்டன்லேர்ந்து வந்தான். எனக்காக ஓவல்டின் பிஸ்கட் பொட்டலம் வாங்கிண்டு வந்தான். பாக்கெட்டோட வெளிப்புறம் தெரிய வேணாம்னுட்டு அதை லண்டன் நியூஸ் பேப்பர்ல - ஆறுமாசத்துக்கு முந்தின பேப்பர்ம்மா இது - வெச்சு சுத்திக் கொண்டு வந்து குடுத்தான். அவனும் கவனிக்கல்லேன்னு நினைக்கிறேன். அதைப் பிரிச்சதும்... அருணோட படத்தை அதுல பார்த்ததும்...." - மேலே பேச முடியாமல் அவர் துண்டை வாயில் வைத்துப் பொத்திக் கொண்டு அழத் தொடங்கிய நேரத்தில் இருவரும் செய்தியைப் பார்த்து விட்டுத் தாங்களும் அழ ஆரம்பித்திருந்தார்கள்.

'இந்தப் புகைப்படத்தில் இருக்கும் அருணாசலம் இந்தியன். பார்-அட்-லாவுக்கு லண்டனில் இந்தியா ஹவுசில் தங்கிப் படித்துக் கொண்டிருந்தவன். அடுத்த ஆண்டில் இந்தியாவுக்குச் செல்ல இருக்கும் மன்னர் ஐந்தாம் ஜார்ஜுக்குக் கறுப்புக் கொடி காட்டும் பாவனையில் அப்போதே இயன்றால் துப்பாக்கியால் அவரைச் சுட்டு விடவும் திட்டம் தீட்டிய குற்றத்துக்காகப் பிடிபட்டுக் கப்பலில் அவனுக்குச் சொல்லப் படாத இடத்துக்கு அழைத்துச் செல்லப் பட்ட போது தப்பி ஓட முயன்று துப்பாக்கியால் சுடப்பட்டுக் கடலில் மூழ்கி இறந்தான். இவனைப் போன்றவர்கள் பற்றிய தகவல்களை இங்கிலாந்து அரசுக்குக் கொடுப்பவர்க்குத் தக்க சம்மானம் வழங்கப்படும்.

மூவரின் மவுனமான அழுகையில் கன

மான சில நிமிடங்கள் கழிந்த பிறகு, "அம்மாவுக்கு இது தெரியவே கூடாது..." என்றார் ராஜாராமன்.

"நிரந்தரமா எப்படிப்பா மறைக்க முடியும்? அம்மாவுக்கு இல்லாத பொல்லாத சந்தேகமெல்லாம் வருமேப்பா?" என்றாள் அமராவதி.

"அது வரச்சே வரட்டும். அது வரைக்கும் நாம பொய் சொல்லிச் சமாளிச்சிண்டிருக்க வேண்டியதுதான்."

இரண்டு நாட்கள் சென்றன. பாமாவுக்குப் பொழுது போகவில்லை. பழைய தமிழ்க் கதைப் புத்தகம் ஏதாவது கிடைக்கிறதா என்று தேடி, விக்கிரமாதித்தன் கதைப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு கூடத்துக்குப் போய்ச் சுவரில் சாய்ந்து உட்கார்ந்து கால்களை நீட்டிக் கொண்டு அதைப் பிரித்தாள். பிரிந்து கொண்ட பக்கத்தில் இருந்து அந்த லண்டன் ஆங்கில நாளிதழின் கத்தரித்து மடிக்கப்பட்ட பக்கம் விழுந்தது.

'அட, அருண் மாதிரி இருக்கானே இந்தப் பையன்?" என்று வாய் விட்டுச் சொல்லிக் கொண்டே புகைப்படத்தின் கீழே அச்சாகி இருந்த செய்தியை எழுத்துக் கூட்டிப் படித்தாள்.

பாமாவுக்குள் ஒரு படபடப்புத் தோன்றி அதன் தீவிரம் வினாடிக்கு வினாடி அதிகரித்துக் கொண்டே போயிற்று. மண்டைக்குள் சுருசுருவென்று ஒரு குடைச்சல் உண்டாயிற்று. வேர்க்கவும் தொடங்கிற்று.

'அருண், அருண்! என் கண்ணே... என் தங்கமே...' என்று அரற்றத் தொடங்கிய அடுத்த நொடியில் பாமாவின் தலை சரிந்தது. அவள் கையில் பற்றியிருந்த லண்டன் நாளிதழ் நழுவியது.

33

இரண்டு மாதங்களில் ராஜாராமன் பாதி உடம்பாகி விட்டிருந்தார். வேலைக்காரி தங்கம் தம்மோடு தொலை பேசி தொடர்பு கொண்டு பாமா விழுந்து கிடப்பது பற்றிய தகவலைச் சொன்னது; வீடு திரும்பிய தாம் அவளது மயக்கத்துக்கான காரணத்தை அறிந்தது; பிறகு மனநிலை முற்றும் சரி இல்லாது போய்விட்ட அவளை மனநல மருத்துவ விடுதியில் சேர்த்தது... எல்லாம் வரிசையாக அவர் நினைவில் நிழற்படங்களாய் வந்தன.

நல்ல வேளையாக அமராவதிக்குத் தேர்வு முடிந்து கல்லூரி மூடப்பட்டிருந்தது. இதனால் வீட்டை நிர்வகிப்பதில் அஞ்சனாவும் அவளும் பங்கேற்க முடிந்தது. வாரந்தோறும் மூவரும் ஞாயிற்றுக் கிழமைகளில் மருத்துவ விடுதிக்குப் போய் பாமாவைப் பார்த்து வந்தார்கள். நாளுக்கு நாள் அவளது சிரிப்பும் அழுகையும் அதிகமாகிக் கொண்டிருந்தனவே தவிர, முன்னேற்றத்துக்கான எந்த அறிகுறியும் இல்லை. 'தெளிவது ரொம்பக் கஷ்டம்' என்று சொல்லிவிட்டார்கள்.

அந்த வீடே களை இழந்து விட்டிருந்தது. மூவரும் நடைப்பிணங்களாய் வளையவந்தனர்.

ஒரு நாள் இரவில், "அஞ்சனா! உங்கிட்ட ஒரு விஷயம் சொல்லணும். ஆனா எப்படி வாய்விட்டுச் சொல்றதுன்னு தெரியல்லே. அதனால இந்த லெட்டர்ல எல்லாத்தையும் எழுதி வெச்சிருக்கேன். படிச்சுப் பாரு...." என்ற அமராவதி தன் தலையணைக்கு அடியிலிருந்து நான்காக மடிக்கப்பட்டிருந்த காகிதம் ஒன்றை எடுத்து அவளிடம் கொடுத்தாள்.

அஞ்சனா திகைப்புடன் அதைப் பெற்றுக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள்.

"என் எதிர்ல படிக்காதே. உன் ரூமுக்குப் போய்ப்படி...."

அஞ்சனா எழுந்து போனாள்.

"அன்புள்ள அஞ்சனா,


"இந்தக் கடிதத்தை எப்படித் தொடங்குவது என்றே தெரியவில்லை. அம்மாவுக்குப் பைத்தியம் பிடித்து அவர் மருத்துவ விடுதியில் நிரந்தரமாக இருக்க நேர்ந்துள்ளது என்னால் அவளுக்கு விளைவதற்கு இருந்த துன்பத்திலிருந்து ஒரு தப்புதலாக இருக்கப் போகிறது என்பதை நினைக்கும் போது ஒரு வகையில் ஆறுதலாகத்தான் இருக்கிறது. அஞ்சனா! எனது நிலையை எப்படி உனக்கு விளக்குவதென்றே தெரியவில்லை.

"தொகுதியைச் சுற்றிப் பார்த்திட்டு வந்த நம்ம அமைச்சர், மக்கள் கொடுத்த மனுக்களை உடனே பைசல் பண்ணிட்டார்!"

"ஆச்சர்யமாயிருக்கே! எப்படி சாதிச்சார்?"


"மனுக்களை பழைய பேப்பர்க்காரன் கிட்ட போட்டுட்டார்!"

— சோம. முத்துக்குமார்



இலவசம்!

பக்தி புத்தகங்கள்



இலவச பக்திப் புத்தகங்கள் எங்களிடம் ஒரே தடவை-யில் ரூ.300-க்கு மேற்பட்ட ஸ்வீட், காரம் வாங்குபவர்களுக்கு வாங்கும் தொகையை அனுசரித்து பக்திப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படும்.

கல்யாண வைபவங்களுக்கு: சீர் முறுக்கு, சீர் முள்ளுத் தேன் குழல், தேன் குழல், அதிரசம், திரட்டுப்பால், அப்பம், பருப்புத் தேங்காய் வகைகள் முதலியவை செய்துத் தரப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2-வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு,
சென்னை-600 020.
போன்: 412557

வார்த்தைகளுக்காகத் திண்டாடுகிறேன். ஒரே வரியில் சொல்ல வேண்டுமாயின், நான் இப்போது கர்ப்பமாக இருக்கிறேன்...."

அஞ்சனா சவுக்கடி வாங்கியவள் மாதிரி நிமிர்ந்து உட்கார்ந்து நிலைகுத்திப் போனாள். அவளுக்குப் புரிந்து போயிற்று. ஆவலுடனும் கவலையுடனும் மேற்கொண்டு படித்தாள் :

"தப்பு என் மேல்தான். நரேன் புறப்படுவதற்கிருந்த நாளுக்கு முந்திய இரவில் அவருடன் தனிமையில் இருக்க விரும்பி நான் அவரது அறைக்குப் போனேன்.

"பிரிவாற்றாமையால் குமுறி அழுத என்னைச் சமாதானப்படுத்தும் முயற்சியில் அவர் என்னைத் தொட நேர்ந்தது. அந்த நெகிழ்ச்சியில் நாங்கள் மனம், அறிவு இரண்டுக்குமிடையிலான போராட்டமே இன்றி ஒருவரை மற்றவர்க்கு இழந்தோம் என்பதே உண்மை. உண்மை எதுவானாலும், தவறு என்பதாய் இதனை மதிப்பிட்டால், அதன் முழுப் பொறுப்பும் என்னுடையதே.

"எப்படியோ, நேரக்கூடாதது, தப்பானது என்றெல்லாம் இந்த உலகம் நெறிப்படுத்தி வைத்திருப்பது நிகழ்ந்து விட்டது. அதை உலகுக்குத் தெரியாமல் அழிக்க நான் விரும்பவில்லை. நரேனின் குழந்தையைச் சுமக்க நேர்ந்ததைப் பெறற்கரிய பேறாகவே நான் கருதுகிறேன் - உலகம் என்ன சொன்னாலும் சரி. மேலும், இது தவறு என்பதன் கீழ் வந்தாலும், அந்தத் தவறுக்கு எந்த வகையிலும் சம்பந்தப்படாத ஓர் இளங்குருத்தை அபவாதத்திலிருந்து நான் தப்புவதன் பொருட்டு அழிப்பது எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் நியாயமானதாக எனக்குப் படவில்லை...."

அஞ்சனா சிலிர்த்துக் கொண்டாள்.

"எனது அடுத்த பிரச்னை அப்பாவிடம் இதை எப்படிச் சொல்லப் போகிறேன் என்பதே. அப்பா எப்படி இதை எடுத்துக் கொள்ளுவார் என்பதோ எந்த அளவுக்குப் பாதிக்கப்படுவார் என்பதோ எனது ஊகிக்கும் திறனுக்கு அப்பாற்பட்டதாக உள்ளது. அந்தப் பொறுப்பை உன்னிடமே விடலாம் என நினைக்கிறேன்.

"என்னைப் பற்றி நீ இழிவாக நினைக்க மாட்டாய் என்றே நம்புகிறேன். உன் உதவி கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கிறேன். உன் எண்ணங்களை நீ மனம் விட்டு என்னிடம் கூறலாம். என்னை நீ கண்டித்தாலும் நான் தவறாக எண்ண மாட்டேன். ஆனால் எனது முடிவில் மட்டும் எந்த மாற்றமும் இராது...."

கடிதத்தை அஞ்சனா திரும்பவும் ஒரு முறை படித்தாள். படித்து முடித்ததும் அன்றொரு நாள் ஒரு பள்ளிக்கூடத்தில் அறைக்குள் இருட்டில் கதவு தாழிடப்பட்ட நிலையில் ராமசாமியும் தானும் அமர்ந்திருந்த காட்சி அவளது நினைவுத் திரையில் நகர்ந்தது. 'ஒரு வேளை அமராவதி மாதிரியோ அல்லது வேறு வகையிலோ நான் தவறி இருந்தால், இருட்டின் துணையில், தனிமையின் பலவீனத்தில் அவரும் தவறிழைத்திருப்பாரோ?' என்ற கேள்வி அவளுள் எழுந்தது. ஆனால் அக்கேள்வி எழுந்த மறுகணமே அவள், 'ராமசாமி அப்படிப்பட்டவரே இல்லை. அதற்காக நரேன் குறையுள்ளவன் என்று ஆகாது. அவர்கள் இருவரும் காதலர்கள். பிரியப்போகிற தருணத்தின் மனச்சுமையில் இருந்த நேரத்தில் அப்படி நடந்து விட்டது. அதையும் இதையும் ஒப்பிடுவதே தவறு. மேலும் ராமசாமி மணமானவர்....' என்று எண்ணி சமாதானமடைந்தாள்.

அவள் திரும்பி வந்து அமராவதியின் அருகே படுத்துக் கொண்டாள்.

"எல்லாம் நான் பார்த்துக்கறேன். நீ கவலைப்படாதே, அமராவதி..."

இருவரும் வெகு நேரம் வரையில் உறங்கவில்லை. பேசிக் கொள்ளவும் இல்லை. ஆனாலும் மனங்கள் விழித்திருந்த நிலையில் தத்தமக்குள் பேசிக் கொண்டிருந்தன.

மறுநாளே அஞ்சனா ராஜாராமனைத் தனியாகச் சந்தித்தாள்.

"அப்பா! உங்ககிட்ட ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும். கொஞ்சம் அதிர்ச்சியான விஷயம்..."

"இனிமே எந்த அதிர்ச்சியும் என்னை எதுவும் பண்ணாதும்மா. சொல்லு. மலையையே முழுங்கிட்டு உக்காந்துண்டிருக்கேன். கடப்பாரை ஒரு பெரிய விஷயமா என்ன?" என்று கேட்டு விட்டு ராஜாராமன் கைப்புடன் சிரித்தார்.

அஞ்சனா சில நொடிகளுக்கு மௌனமாக இருந்தாள்.

(தொடரும்)

● விஞ்ஞான மேதையான தாமஸ் ஆல்வா எடிசனின் மனைவி, "நீங்கள் ஓய்வு ஒழிவு இல்லாமல் வேலை பார்த்து விட்டீர்கள். எந்த இடத்திலிருந்தால் இந்த உலகத்தையே மறந்துவிட முடியுமோ அங்கே நாம் போகலாம்" என்றாள். "சரி, நாளை போகலாம்" என்றார் எடிசன்.

மறுநாள் காலை அவர் தமது ரசாயன சாலைக்கே திரும்பிவிட்டார்.

'ஹா... ஹா... ஹா...' நூலிலிருந்து

— ஆர். பிரகாசம்

டிரஸ்ட் ப்ளஸ்



INVITES DEPOSITS

Fixed Deposits will be accepted at the following rates of interest and subject to the terms and conditions as indicated in the form of application of deposit available at the administrative Office and other branch offices of the Company.

DEPOSIT SCHEMES

CUMULATIVE DEPOSIT SCHEME			FIXED DEPOSIT SCHEME	
Period in Months	For Rs. 1000 Deposit Amount Payable on Maturity	Effective Annual Yield	Period in Months	Rate of Interest per annum Monthly Quarterly
12 Months & 1 Day	Rs. 1150/-	15.00%	12 Months & 1 Day	
24 Months & 1 Day	Rs. 1321/-	16.05%	24Months & 1 Day	
36 Months	Rs. 1518/-	17.27%	36 Months	
48 Months	Rs. 1743/-	18.60%	48 Months	14% 14.16%
60 Months	Rs. 2006/-	20.12%	60 Months	

RECURRING DEPOSIT SCHEME (Minimum Rs. 500/-)			
Period in Months	Rate of Interest Per Annum	Maturity Value (for Rs. 500)	For Every Additional Rs. 100/-
12 Months & 1 Day	14%	Rs. 6480/-	Rs. 1296/-
24 Months & 1 Day		Rs. 13915/-	Rs. 2783/-
36 Months		Rs. 22470/-	Rs. 4494/-

1. Interest warrants payable at par at all branches of SBI.

Information required to be specified as per Non-Banking Financial Companies (Reserve Bank) Direction, 1977 and Non Banking Financial Companies and Miscellaneous Non-Banking Financial Companies (Advertisement) Rules, 1977, are given below.

A. Name of the Company : The Investment Trust of India Ltd.

B. Date of Incorporation : 2nd August 1946

C. Business carried on by the Company and its subsidiaries with details of branches or units, if any :

Business : Hire Purchase Financing, Investments, Leasing, Industrial Financing, Mortgage Financing etc.

Subsidiary : I.T.I. Pioneer AMC Ltd. And I.T.I. Capital Markets Ltd.

Branches : Refer to Head Office.

D. Brief Particulars of the Management of the Company.

The Company is managed by the Managing Director under the supervision, direction and control of the Board of Directors.

E. Name, address & occupation of the Directors.

Mr. B.H. KOTHARI, Chairman & Managing Director, "Kothari Bagh", 11, Nungambakkam High Road, Madras-600034, Industrialist. Mr. A.L. MUDALIAR, "Avanti", 858, Poonamallee High Road, Kilpauk, Madras -600010, Business Executive & Management Consultant. Mr. G.K. SUNDARAM, "Rasakondalu" Circuit House Road, Coimbatore 641 018, Industrialist. Mr. G. CHIDAMBAR, 101-A, Janakpuri, 2nd St. Off : Velachery Road, Madras-600 032, Former Managing Director-LIC. Mr. N. SRINIVASAN, T-18, Sixth Avenue, Besant Nagar, Madras-600 090, Chartered Accountant. Mr. RAM GANAPATHI, No. 27, "Ashok Crescent", D.L.F. Kudap Enclave, Phase-1, Gurgaon, Haryana - 122 001. Former Chairman of BIFR. Mr. C.R. RAMAKRISHNAN, "Meenakshi", No.4, Sir P.S. Sivasamy Road, Mylapore, Madras 600 004, Former Joint Managing Director of Larsen & Toubro Ltd. Mr. M.R. SHAH, A-23/24, Woodlands Apartments, Peddar Road, Bombay 400 026, Business.

(F) Profit of the Company before and after making provisions for tax for the three financial years immediately preceding the date of advertisement. (G) Dividend declared by the Company in respect of the said year. (Rupees in lakhs percentage).

	Profit before depreciation & taxation	Profit before taxation	Profit after taxation	Amount (Rs. in lakhs)	Percentage
	(Rupees. in lakhs)				
31-3-94	752.74	434.91	411.91	76.27	35
31-3-93	474.37	307.08	291.08	76.27	35
31-3-92	312.81	187.44	183.19	56.10	28

(H) Summarised financial position of the Company as appearing in the two latest Audited Balance Sheets.

LIABILITIES	31-3-94 (Rs. in lakhs)	31-3-93	ASSETS	31-3-94 (Rs. in lakhs)	31-3-93
Share Capital	217.88	217.67	Fixed Assets	3239.01	2438.88
Reserves & Surplus	1233.31	897.35	Investments	741.13	215.66
Secured Loans	3229.69	2766.40	Current Assets, Loans & Advances	8671.19	6066.06
Unsecured Loans	5290.77	2802.41	Miscellaneous Expenditure	14.79	16.22
Current Liabilities	2535.08	1916.60			
Provisions	159.39	136.39			
	17666.12	8736.82		17666.12	8736.82

Note : Contingent Liabilities not provided for

(i) On partly paid Shares and Debentures. Rs. 3.08 lakhs.
(ii) Sales tax on lease contracts under writ petitions Rs. 22.35 lakhs.

I. The amount which the company can raise by way of deposit under Reserve Bank of India directions Rs. 143.64 crores.
Aggregate of deposits actually held on the last day of the immediately preceding financial year, viz 31-3-94 Rs. 37.88 crores.

J. The Company has no over due deposits other than unclaimed deposits.

K. It is hereby declared that :-
(i) The company has complied with the applicable provisions of the directions.
(ii) The compliance with the directions does not imply that the repayment of deposits is guaranteed by the Reserve Bank of India.
(iii) The deposits accepted by the Company are unsecured and rank pari passu with other unsecured liabilities.

The above text of this advertisement has been approved by the Board of Directors on 27-5-94

(By order of the Board)
For The Investment Trust of India Limited

P.S. Balasubramanian
Chief Executive and Secretary.

Note : A copy of this text duly signed by a majority of the Directors of the Company has been filed with the Reserve Bank of India, Bangalore.





ஜர்

சேகர் கடற்கரையில் உட்கார்ந்திருந்தான். பக்கத்தில் இருக்க தள்ளுவண்டி கடையில் இருந்து அந்தப் பாட்டு காதில் விழுந்தது.

'பசுமை நிறைந்த நினைவுகளே, பாடித் திரிந்த பறவைகளே, பழகித் திரிந்த தோழர்களே, பறந்து செல்கின்றோம்.'

பாட்டு காதில் விழ, நிமிர்ந்து உட்கார்ந்தான். சிரித்த முகத்தோடு அஷ்ரப் ஞாபகத்திற்கு வந்தான். கல்லூரி ஃபைனல் டே அன்று அவன் பாடியது இதே பாட்டு. எல்லோரும் கைதட்டினார்கள். பாடிவிட்டு, அஷ்ரப் இறங்கி வந்தான். முகத்தில் சந்தோஷம் இருந்தது. அதையும் மீறி ஒரு இனம் புரியாத சோகம் தெரிந்தது. அவர்கள் ஐந்து பேர் நின்றிருந்தனர். அனைவரும் ஒன்றும் பேசவில்லை.

"நீ எப்படா ஊர் போறே?"

"இன்னும் மெஸ், அங்கே இங்கே என்று வாங்கிய கடன் எல்லாம் இருக்கு. அதைக் கொடுத்து விட்டு நாளைக்குப் போயிட வேண்டியதுதான்."

"டேய் சேகர் நீ?"

"தெரியலை."

"என்னடா சொல்றே?"

"பிடிக்கலைடா. இதை விட்டுட்டு, உங்களை எல்லாம் விட்டுட்டுப் போகப் பிடிக்கல்லே."

அஷ்ரப் ஆயாசமாகப் பெருமூச்சு விட்டான்.

"சரி, நாம விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் நடப்பது எல்லாம் நடந்துதான் தீரும்."

அங்கே மௌனம் நிலவியது. அந்த மௌனத்தை மூர்த்தி கலைத்தான்.

இந்தியக் கனவு

நாகூர் அன்வர்

"ஊருக்குப் போன பிறகு என்னடா பண்ணப் போறீங்க?"

"யாருக்குத் தெரியும்?"

"என்னடா இப்படி விட்டேத்தியா பேசறீங்க. உங்க யாருக்கும் ஒரு லட்சியமே கிடையாதா?"

"உண்டே."

"அஷ்ரப் நிமிர்ந்தான்.

"எதிர்காலத்தில் எஸ்.பி.பி. மாதிரி வரணும்டா."

"வெரிகுட்."

"கிருஷ்ணா நீ?"

"வக்கீல். அடுத்து பி.எல். படிக்கப் போகிறேன்."

"நீ?"

"நான் டாக்டர்."

"நீ?"

"எனக்கு எந்த எழவும் கிடையாது. கிராமத்திலே எங்கப்பா ஏராளமா சொத்துக்கள் சேர்த்து வைச்சிருக்கார். அதைப் பார்த்தாலே போதும்."

"டேய் ஆல்பர்ட், உன் லட்சியம்?"

அவன் திரும்பி எல்லோர் முகத்தையும் ஊடுருவிப் பார்த்தான்.

"சொல்லுடா."

சிறிது தயக்கத்துடன் சொன்னான். "சினிமாவுலே சேர்ந்து ஒரு சூப்பர் ஸ்டார் ஆக வேண்டும் என்பதுதான் என் லட்சியம்."

எல்லோரும் கொல்லெனச் சிரித்தனர்.





மூர்த்தி கடுப்பாகப் பார்த்தான்.

"ஏண்டா சிரிக்கறீங்க? இவனெல்லாம் ஆக முடியாதா?"

"அப்படி இல்லை. சரி விடு. சேகர், நீ?"

"..........."

"சொல்லுடா."

சேகர் மெதுவாக, பயமாக ஆரம்பித்தான். "எனக்கு ஒன்றும் பெரிய கனவோ, மனக்கோட்டையோ கிடையாது. எனக்கு ஏதாவது ஒரு ஆபீஸ்ல மாதம் இரண்டாயிரும் வர்ற மாதிரி ஒரு வேலை கிடைத்ததென்றாலே போதும் . . .

...அப்புறம்..."

"சொல்லிடு, அப்புறம் என்ன?"

சேகர் சிரித்தான். "அப்புறம் என்ன, பின்னால் வந்து கட்டிப் பிடிக்கிற ஒரு மனைவி, எதற்கும் அழாத குழந்தை, ஒரு சின்ன சைஸ் வீடு, அதுல டீ.வி., பிரிட்ஜ், ஸ்கூட்டர் போன்ற அடிப்படை வசதிகள் அவ்வளவு தான்."

சேகர் சொல்லி முடிக்க, எல்லோரும் அமைதியாக இருந்தனர்.

"டேய் சேகர், யாருடைய லட்சியம் நிறைவேறுதோ, இல்லையோ ஆனால் உன் லட்சியம் நிச்சயம் நிறைவேறும்டா.."

"ஏன் அப்படிச் சொல்றே?"

"உன் லட்சியம், சிந்தனை யதார்த்தமானதுடா.

போட்டிக் கதை - 14



யதார்த்தம், உண்மை என்றைக்கும் ஜெயிக்கும்."

கிருஷ்ணன் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. 'யதார்த்தமான சிந்தனை'. ஒருமுறை உச்சரித்துப் பார்த்தான். அந்த யதார்த்தம் தான் அவனை ஐந்து வருஷமாகத் தெருத் தெருவாக அலைய விட்டிருக்கிறது. ஒவ்வொரு இரவையும், ஒவ்வொரு கவளம் உணவையும் வேதனையோடு விழுங்க வைத்திருக்கிறது. என் எண்ணங்கள் என்றுமே ஈடேறாதா? நான் இப்படித்தான் காலையில் எழுந்து காப்பி குடித்து விட்டு, அன்றைய தினசரியை வரி விடாமல் படித்து விட்டு, பகலுக்கு, கிடைப்பதைச் சாப்பிட்டு விட்டு, மாலை நான்கு மணிக்குக் கடற்கரைக்கோ, லைப்ரரிக்கோ போய் உட்கார்ந்து விட்டு, இருட்டினதும் வீட்டில் போய்ப் படுப்பது தான் என் வேலையா...? என் வாழ்க்கையா? இதற்குத்தான் பிறந்து இருக்கிறேனா? கைகள் இருக்கு, கால்கள் இருக்கு, படித்த அறிவு இருக்கு, உழைக்க வழி இல்லையே எங்கே போய் முட்டுவது? யாரிடம் போய் கேட்பது? எங்கே போனாலும் வேலை காலி இல்லை! அப்படியே இருந்தாலும், "பணம் தர்றியா இருபத்தைந்தாயிரம்?"

அரண்டு போனான். கையில் பணமும் இல்லை. வேலையும் இல்லை. வாழ்க்கை கேள்விக்குறியானது.

சேகருக்கு உட்கார்ந்து இருக்க, இருக்க அசதி தட்டிற்று. அப்படியே கையை விரித்து மல்லாக்கப் படுத்துக் கொண்டான். கண்ணை அழுத்தமாக மூடிக் கொண்டான். கண்ணில் ஒரு பெண் வந்தாள். அவள் வீட்டு வாசலில் கோலம் போட்டாள். காலைச் சூரியன் எழுந்தும், எழாத நிலை, பிள்ளை தத்தி, தத்தி அம்மாவிடம் வந்தது. "யேய் உன்னை யாரு வாசலுக்கு வரச் சொன்னா?" அவள் பிள்ளையைத் தூக்கிக் கொண்டு உள்ளே போனாள். அவன், அவளைத் தாவிப் பிடித்து, இழுத்து அணைத்து அலாக்காகத் தூக்கினான்.

"ஐயோ என்னங்க இது காலங்கார்த்தாலே!"

பளிச்சென்று அவள் கன்னத்தில் முத்தம் கொடுத்தான்.

"ஐயே!" அவள் பொய்க் கோபத்தோடு அவனை முறைத்தாள்.

சேகர் கண்ணைத் திறந்தான்.

கண்ணை மூடினால் கண்ணுக்குள் படம் ஓடுகிறது. ஆழ்மன சிந்தனையா? உள்மன ஆசையா? எண்ணத்தை இப்படி வெளிப்படுத்துகிறதா? இந்த எண்ணம் என்றுமே நிறைவேறாதா? கோலம் போடும் மனைவியும், தவழ்ந்து வரும் குழந்தையும் - இது மாதிரி கனவுதானா, வெறும், வெறும், வெறும் கனவுதானா?

சேகர் எழுந்தான். வீட்டை நோக்கி அசுவாரசியமாக நடந்தான்.



''எழுத்துத் துறையில் இரண்டு சதவிதம் வளர்ந்து இருக்கீங்கன்னு எப்படி அவ்வளவு துல்லியமாச் சொல்றீங்க?''

தெரு முனையில் "சேகர்" என்று குரல் கேட்டது.

கூப்பிட்டவன் வெள்ளைச் சட்டை, வெள்ளை வேட்டியில் இருந்தான். தோளில் கட்சித் துண்டு.

"என்ன சிவராக அண்ணே?" - சேகர் அவனை யோசனையோடு பார்த்தான்.

"இப்ப நீ என்ன செய்து கொண்டிருக்கே?"

"சும்மாதான் அண்ணே இருக்கேன்."

"அப்ப எங்க கூட மெட்ராஸ் வர்றியா, உனக்கு ஐம்பது ரூபாய் வாங்கித் தர்றேன்."

"வந்து என்னண்ணே பண்றது?"

"நீ ஒண்ணும் பண்ண வேண்டாம். நாளைக்கு நம்ம முதல்வருக்குப் பிறந்த நாள். அதனாலே மெரினாவுலே கூட்டம் ஏற்பாடு பண்ணி இருக்காங்க. அங்கேதான் நாம போறோம். அங்கே போய் கூட்டத்தோடு கூட்டமா நிற்க வேண்டும். அப்புறம் தலைவர் வந்தவுடன், தலைவர் பெயரைச் சொல்லி வாழ்க, வாழ்க என்று கத்தணும். தலைவர் பேச ஆரம்பித்ததும் வார்த்தைக்கு வார்த்தை கைதட்டணும். அவ்வளவுதான்."

சேகர் யோசித்தான். அவனுக்கு அரசியல் அறவே பிடிக்காது. ஆனால் போனால் ஐம்பது ரூபாய் கிடைக்கும். ஹிண்டுவில் விளம்பரம் பார்த்து இன்னும் அப்ளை பண்ண



"பத்திரிகைகளுக்கு நூறு ஜோக் அனுப்பி வைச்சா முன்னெல்லாம் நூறும் திரும்பிடும்; இப்பல்லாம் தொண்ணூத்தெட்டுதான் திரும்பி வருது!"

- வி. ஆர். ராணி.

லாம். அம்மாவுக்குக் காசு கொடுக்கலாம். சிகரெட் பாக்கியை அடைக்கலாம்.

"சரி அண்ணே வர்றேன்."

"அப்ப வீட்ல சொல்லிட்டு வா. பத்து மணிக்கு நாம் எல்லாம் போறோம். இரண்டு லாரி ஏற்பாடு பண்ணி இருக்கேன்."

சேகர் வீட்டுக்கு வந்தான். கொடுத்ததைச் சாப்பிட்டான்.

"மெட்ராஸ்ல நாளைக்கு ஒரு இன்டர்வ்யூ இருக்கும்மா" என்று பொய் சொன்னான். வந்து லாரியில் கூட்டத்தோடு கூட்டமாக ஏறினான்.

சென்னை வந்து காலையில் மெரீனாவில் இறக்கி விட்டார்கள். கடற்கரை களை கட்டி இருந்தது. திரும்பிய திசையெல்லாம் தோரணம் தொங்கியது. ஒரு மணிக்கு ஒழுங்காகச் சாப்பாடு கொடுத்தார்கள். சாயங்காலம் நான்கு மணிக்கு ஜேஜே என்று கூட்டம் கூட ஆரம்பித்தது. சேகருக்கு அங்கே நிற்கவே அவமானமாக இருந்தது. அதுவும் சட்டையில் அந்தக் கட்சிச் சின்னம் பொருந்திய லேபிளைப் பொருத்தி இருந்தார்கள். சேகர் அவமானத்தால் கூசி குறுகிப் போனான். காசுக்கு ஆசைப்பட்டு சாக்கடையில் கால் வைத்து விட்டோமோ?

யாருக்கு "வாழ்க" போடுவதற்கு நான் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறேன்? நானே நன்றாக வாழவில்லையே? வாழ முடியவில்லையே? ஏன்? இந்தத் தலைவர்கள் தானே, இவர்களின் சுயநலம்தானே!

"தலைவர் கிளம்பிட்டாராம். எல்லாம் ரெடியா இருக்காயா?" ஆளாளுக்கு அதிகாரம் செய்தார்கள். படபடவென்று அலைந்தார்கள். எல்லார் முகத்திலும் பரபரப்பு. போலீஸ், பெண்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்த சிரமப்பட்டது. விதவிதமான ஹாரன் ஒலிகளோடு முதல்வர் கார் வந்து நின்றது. கூட்டம் மொத்தமும் அவரைத் திரும்பிப் பார்த்தது. முதல்வர் இறங்கினார். பாதையெங்கும் மாணவிகள் வரிசையாக நின்று மலர் தூவினர்.

கூட்டம் உற்சாகமாகக் கத்தியது.

"தங்கத் தலைவன்..."

"வாழ்க!" - சேகர் சுரத்தே இல்லாமல் சொன்னான்.

"தாய்க்குலத்தின் கண்ணீர் துடைத்த காவல் தெய்வம்..."

"வாழ்க, வாழ்க, வாழ்க!"

பட்டென்று ஒருவன் கூட்டத்துப் பக்கம் திரும்பி வன்மையான குரலில் திட்டினான். "டேய் பன்னாடைகளா, காசு மட்டும் வாங்கறீங்களே. கொஞ்சம் சத்தமாகத்தான் கத்துங்களேண்டா."

சேகர் இணைறிப் போனான். இந்த முறை அவன் சொன்னதற்கேற்ப கூட்டம் குரலெடுத்துக் கத்தியது.

"வாழ்க, வாழ்க!"

சேகரும் பயத்தினால் அவர்களோடு சேர்ந்து வேகமாகக் கத்தினான். அவனுக்குத் தொண்டை அடைத்துக் கொண்டு துக்கம் எழுந்தது.

"வாழ்க, வாழ்க, வாழ்க!"

ஆபீஸில் உட்கார்ந்து லெட்ஜர் எழுதுவது போல் கண்ட கனவு கசந்து போனது. லெட்ஜர் மூடப்பட்டது.

"வாழ்க, வாழ்க, வாழ்க!"

கோலம் போடும் மனைவி பின்னோக்கிச் சென்று கதவைத் தாழ் போட்டுக் கொண்டாள்.

"வாழ்க, வாழ்க, வாழ்க!"

குழந்தை தத்தி, தத்தி, அவனிடம் வராமல் நின்று பாவமாகப் பார்த்தது.

"வாழ்க, வாழ்க, வாழ்க!"

சேகரால் அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை. சட்டையில் மாட்டி இருந்த கட்சி லேபிளை பிய்த்து எறிந்தான். துக்கம் தொண்டையை அடைத்தது. அவனை அறியாமலேயே கண்ணீர் கண்களிலிருந்து வழிந்தது. சேகர் கூட்டத்தை விட்டு ஒதுங்கிப் போனான். அங்கே தள்ளி இருந்த சிமெண்ட் பெஞ்சில் உட்கார்ந்து, முகம் பொத்தி, தேம்பி, மெதுவாக, மிக மெதுவாக அழ ஆரம்பித்தான்.


கூட்டம் எதைப் பற்றியும் கவலைப்படாமல் உற்சாகமாகச் சொன்னது.

"வாழ்க, வாழ்க, வாழ்க!"

TREASURE HUNT!
புதையல் வேட்டை!

மதுரைக்கு மிக அருகில்!!

ஆம்!
மிகச்சிறிய
முதலீட்டில்



ரூ.25,000/-
அல்லது
ரூ.250 X 100
மாதங்கள்
முதலீட்டில்

20 ஆண்டுகளில் ரூ.40,00,000/- மதிப்புள்ள சொத்துக்கள்! புதையல்தானே?

25 செண்ட் நிலம் (10,000 ச.அ.) 25 தேக்கு மரம் 5 புளிய மரம் (உயர் ரகம்)

மிகச்சிறந்த நீர், மண் வளம் மிக முன்னேறிய வேளாண் தொழில் நுட்பம்.

25 செண்ட் நிலம் (10,000 ச.அ.) 20 ஆண்டுகளுக்குள் சங்கம் வளர்த்த
மதுரை மாநகருடன் இது சங்கமமாகிவிடும்.

மேலும் ரூ.50/- வீதம் 30 மாதங்கள் செலுத்தி, லட்சாதிபதி ஆகும்
பிற திட்டங்களும் உள்ளன.

Shree

GIL **ESWAR GROW-TEK LTD** AGRI

H.O., 287, West Masi Street, MADURAI - 625 001. Ph:35843, FAX: 0452-34654 TELEX:0445-478 AGRI-IN

பார்த்திபன் கனவு

1. சிவனடியார்

பொழுது புலர இன்னும் அரை ஜாமப் பொழுது இருக்கும். கீழ்வானத்தில் காலைப் பிறையும் விடிவெள்ளியும் அருகருகே ஒளிர்ந்து கொண்டிருந்தன. உச்சிவானத்தில் வைரங்களை வாரி இறைத்தது போல் நட்சத்திரங்கள் பிரகாசித்தன. வடக்கே ஸப்த ரிஷி மண்டலம் அலங்காரக் கோலம் போட்டது போல் காட்சியளித்தது. தெற்கு மூலையில் சுவாதி நட்சத்திரம் விசேஷ சோபையுடன் தனி அரசு புரிந்தது.

அந்த மனோகரமான அதிகாலை நேரத்தில், காவேரி பிரவாகத்தின் 'ஹோ' என்ற சப்தத்தைத் தவிர வேறு சப்தம் ஒன்றுமேயில்லை. திடீரென்று அத்தகைய அமைதியைக் கலைத்துக் கொண்டு 'டக் டக் டக்' என்ற குதிரையின் காலடிச் சப்தம் கேட்கலாயிற்று. ஆமாம்; இதோ ஒரு கம்பீரமான உயர்ந்த ஜாதிக் குதிரை காவேரி நதிக்கரைச் சாலை வழியாகக் கிழக்கேயிருந்து மேற்கு நோக்கி வருகிறது. அது விரைந்து ஓடி வரவில்லை; சாதாரண நடையில்தான் வருகிறது. அந்தக் குதிரை மீது ஆஜானுபாகுவான ஒரு வீரன் அமர்ந்திருக்கிறான். போதிய வெளிச்சமில்லாமையால், அவன் யார், எப்படிப்பட்டவன் என்று அறிந்து கொள்ளும்படி அங்க அடையாளங்கள் ஒன்றும் தெரியவில்லை. நெடுந்தூரம் விரைந்து ஓடி வந்த அக்குதிரையை இனிமேலும் விரட்ட வேண்டாமென்று அவ்வீரன் அதை மெதுவாக நடத்தி வந்ததாகத் தோன்றியது. அவன் தான் சேர வேண்டிய இடத்துக்குக் கிட்டத்தட்ட வந்து விட்டதாகவும் காணப்பட்டது.

அவனுக்கு வலதுகைப் புறத்தில் காவேரி நதியின் பிரவாகம். இடது புறத்திலோ அடர்ந்த மரங்களும் புதர்களும் நிறைந்த காடாகத் தோன்றியது. வீரன், இடதுபுறத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டு வந்தான். ஓரிடத்துக்கு வந்ததும் குதிரையை இடதுபுறமாகத் திருப்பினான். குதிரையும் அந்த இடத்தில் திரும்பிப் பழக்கப்பட்டது போல் அநாயாசமாகச் செடி கொடிகள் அடர்ந்த காட்டுக்குள் புகுந்து சென்றது. கவனித்துப் பார்த்தால் அந்த இடத்தில் ஒரு குறுகிய ஒற்றையடிப் பாதை போவது தெரியவரும்.


அந்தப் பாதை வழியாகக் குதிரை மிகவும் சிரமப்பட்டுக் கொண்டுதான் சென்றது. இரண்டு பக்கங்களிலும் நெருங்கி

அமரர் கல்கி



பாகம் 2





"வரவர டாக்டருக்கு ஞாபகமறதி அதிகமாயிடுச்சு!"

"எப்படிச் சொல்றே...?"

"பாரேன். பேஷண்டுக்கு இன்ஜெக்ஷனைப் போட்டுட்டு அப்புறம் நிதானமா சிரிஞ்சை உருவி அதுல டெம்ப்ரேச்சர் பார்த்துக்கிட்டு இருக்காரே?"

- கே. ஜி. எஸ். கோவிந்தன்

வளர்ந்திருந்த புதர்களும், கொடிகளும், மேலே கவிந்திருந்த மரக் கிளைகளும் குதிரை எளிதில் போக முடியாதபடி செய்தன. குதிரை மீதிருந்த வீரனோ அடிக்கடி குனிந்தும், வளைந்து கொடுத்தும், சில சமயம் குதிரையின் முதுகோடு முதுகாய்ப் படுத்துக் கொண்டும் மரக்கிளைகளினால் கீழே தள்ளப்படாமல் தப்பிக்க வேண்டியிருந்தது. இத்தகைய பாதை வழியாகக் கொஞ்ச தூரம் சென்ற பிறகு திடீரென்று சிறிது இடைவெளியும் ஒரு சிறு கோயிலும் தென்பட்டன. கோயிலுக்கெதிரே பிரம்மாண்டமான யானை, குதிரை முதலிய வாகனங்கள் நின்றதைப் பார்த்தால், அது ஐயனார் கோயிலாயிருக்க வேண்டுமென்று ஊகிக்கலாம். வேண்டுதலுக்காக பக்தர்கள் செய்து வைத்த அந்த மண் யானை - குதிரைகளில் சில வெகு பழமையானவை; சில புத்தம் புதியவை. அவற்றின் மீது பூசிய வர்ணம் இன்னும் புதுமை அழியாமலிருந்தது. பலிபீடம், துவஜஸ்தம்பம் முதலியவையும் அங்கு காணப்பட்டன.

கீழ்வானம் வெளுத்துப் பலபலவென்று பொழுது விடியும் சமயத்தில் மேற்சொன்ன வீரன் குதிரையின் மீது அங்கே வந்து சேர்ந்தான். வீரன் குதிரையிலிருந்து கீழே குதித்து அவசர அவசரமாகச் சில அதிசயமான காரியங்களைச் செய்யத் தொடங்கினான். மண் யானைகளுக்கும் மண் குதிரைகளுக்கும் மத்தியில் தான் ஏறி வந்த குதிரையை நிறுத்தினான். குதிரை மீது கட்டியிருந்த ஒரு மூட்டையை எடுத்து அவிழ்த்தான். அதற்குள் இருந்த புலித்தோல், ருத்திராட்சம், பொய் ஜடாமுடி முதலியவைகளை எடுத்துத் தரித்துக் கொள்ளத் தொடங்கினான். சற்று நேரத்தில் பழைய போர் வீரன் உருவம் அடியோடு மாறி, திவ்ய தேஜஸுடன் கூடிய சிவயோகியாகத் தோற்றம் கொண்டான்.

ஆம்; வெண்ணாற்றங்கரையில் ரணகளத்தில் பார்த்திபனுக்கு வரமளித்த சிவனடியார் தான் இவர்.

தம்முடைய பழைய உடைகளையும், ஆபரணங்களையும், ஆயுதங்களையும் மூட்டையாகக் கட்டி, உடைந்து விழுந்திருந்த மண் யானை ஒன்றின் பின்னால் வைத்தார் அந்தச் சிவயோகி. குதிரையை ஒரு தடவை அன்புடன் தடவிக் கொடுத்தார். குதிரையும் அந்தச் சமிக்ஞையைத் தெரிந்து கொண்டது போல் மெதுவான குரலில் கனைத்தது.

பிறகு அங்கிருந்து அச் சிவனடியார் கிளம்பி ஒற்றையடிப் பாதை வழியாகத் திரும்பிச் சென்று காவேரிக் கரையை அடைந்தார். மறுபடியும் மேற்கு நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

ஒரு நாழிகை வழி நடந்த பிறகு சூரியன் உதயமாகும் தருணத்தில், இந்தச் சரித்திரத்தின் ஆரம்ப அத்தியாயத்தில் நாம் பார்த்திருக்கும் தோணித் துறைக்கு வந்து சேர்ந்தார். அங்கே படகோட்டி பொன்னனுடைய குடிசைக்கு அருகில் வந்து நின்று, "பொன்னா!" என்று கூப்பிட்டார்.

உள்ளிருந்து, "சாமியார் வந்திருக்கிறார். வள்ளி!" என்று குரல் கேட்டது. அடுத்த விநாடி பொன்னன் குடிசைக்கு வெளியில் வந்து சிவனடியார் காலில் விழுந்தான். அவன் பின்னோடு வள்ளியும் வந்து வணங்கினாள். பிறகு மூவரும் உள்ளே போனார்கள். வள்ளி பயபக்தியுடன் எடுத்துப் போட்ட மணையில் சிவனடியார் அமர்ந்தார். "பொன்னா! மகாராணியும் இளவரசரும் வஸந்த மாளிகையில்தானே இருக்கிறார்கள்?" என்று அவர் கேட்டார்.

"ஆம் சுவாமி! இன்னும் கொஞ்ச நாளில் நமது இளவரசரையும் 'மகாராஜா' என்று எல்லோரும் அழைப்பார்களல்லவா?"

"ஆமாம்; எல்லாம் சரியாக நடந்தால். நீ உடனே போய் அவர்களை அழைத்துக் கொண்டு வா!" என்றார் சிவனடியார்.

"இதோ போகிறேன். வள்ளி, சுவாமியாரைக் கவனித்துக் கொள்!" என்று சொல்லி விட்டுப் பொன்னன் வெளியேறினான். சிறிது நேரத்துக்கெல்லாம் படகு தண்ணீரில் போகும் சலசலப்புச் சப்தம் கேட்கத் தொடங்கியது.

2. வம்புக்கார வள்ளி

பொன்னன் போனதும், வள்ளி சிவனடியாருக்கு மிகுந்த சிரத்தையுடன் பணிவிடைகள் செய்யத் தொடங்கினாள். அவருடைய காலை அனுஷ்டானங்கள் முடிவடைந்ததும், அடுப்பில் சுட்டுக் கொண்டிருந்த கம்பு அடையைச் சுடச்சுடக் கொண்டு

வந்து சிவனடியார் முன்பு வைத்தாள். அவர் மிக்க ருசியுடன் அதைச் சாப்பிட்டுக் கொண்டே வள்ளியுடன் பேச்சுக் கொடுத்தார்.

"வள்ளி! ராணி எப்படி இருக்கிறாள், தெரியுமா?" என்று கேட்டார் சிவனடியார்.

"இளவரசர் பக்கத்தில் இருக்கும்போதெல்லாம் தேவி தைரியமாகத்தான் இருக்கிறார். அவர் அப்பால் போனால் கண்ணீர் விடத் தொடங்கி விடுகிறார்" என்றாள் வள்ளி.

பிறகு, "சுவாமி! இதெல்லாம் எப்படித்தான் முடியும்? இளவரசர் நிஜமாக மகாராஜா ஆகிவிடுவாரா? அவருக்கு ஏதாவது நேர்ந்து விட்டால், ராணி பொறுக்க மாட்டார்; உயிரையே விட்டு விடுவார்" என்றாள்.

"எனக்கென்ன தெரியும் அம்மா! கடவுளுடைய சித்தம் எப்படியோ அப்படித்தான் நடக்கும். உனக்குத் தெரிந்தவரை ஜனங்கள் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்?"

"ஜனங்கள் எல்லோரும் இளவரசர் பக்கந்தான் இருக்கிறார்கள். பல்லவ அதிகாரம் ஒழிய வேண்டுமென்றுதான் ஆசைப்படுகிறார்கள். பார்த்திப மகாராஜாவின் வீர மரணத்தைப் பற்றித் தெரியாத குஞ்சு குழந்தை கூடக் கிடையாது. சுவாமி! அந்தச் செய்தியைத் தாங்கள் தானே ஆறு வருஷத்துக்கு முன்னால் எங்களுக்கு வந்து சொன்னீர்கள்? அதை நானும் ஓடக்காரரும் இதுவரையில் லட்சம் ஜனங்களுக்காவது சொல்லியிருப்போம்" என்றாள்.

"நானும் இன்னும் எத்தனையோ பேரிடம் சொல்லியிருக்கிறேன். இருக்கட்டும்; மாரப்ப பூபதி எப்படியிருக்கிறான்? இப்போது உன் பாட்டனிடம் ஜோஸியம் கேட்க அவன் வருவதுண்டா?" என்று கேட்டார் சிவனடியார்.

"ஆகா! அடிக்கடி வந்து கொண்டு தானிருக்கிறான்" என்றாள் வள்ளி. உடனே, எதையோ நினைத்துக் கொண்டவள் போல் இடிஇடி என்று சிரித்தாள்.

சிவனடியார், "என்னத்தைக் கண்டு, அம்மா, இப்படிச் சிரிக்கிறாய்? என்னுடைய மூஞ்சியைப் பார்த்தா?" என்றார்.

"இல்லை, சுவாமி! இல்லை. மாரப்ப பூபதியின் ஆசை இன்னதென்று உங்களுக்குத் தெரியுமா? காஞ்சி சக்கரவர்த்தியின் மகளை இவன் கட்டிக் கொள்ளப் போகிறானாம்! கல்யாணத்துக்கு முகூர்த்தம் வைக்க வேண்டியதுதான் பாக்கி" என்றாள்.

சிவனடியாரின் முகத்தில் ஒரு விநாடி நேரம் இருண்ட மேகம் படர்ந்தது போல் தோன்றியது. உடனே அவர் புன்னகையை வருவித்துக் கொண்டு, "ஆமாம்; உனக்கென்ன அதில் அவ்வளவு சிரிப்பு?" என்று கேட்டார்.

"சக்கரவர்த்தியின் மகள் எங்கே? இந்தப் பேதை மாரப்பன் எங்கே? உலகத்தில் அப்படி ஆண் பிள்ளைகளே அற்றுப் போய் விடவில்லையே, நரசிம்ம பல்லவரின் மகளை இந்தக் கோழை பயங்காளிக்குக் கொடுப்பதற்கு?" என்றாள் வள்ளி.

"ஆனால், உன் பாட்டன்தானே மாரப்பனை இப்படிப் பைத்தியமாய் அடித்தது வள்ளி, இல்லாத பொல்லாத பொய் ஜோசியங்களையெல்லாம் சொல்லி?" என்றார் சிவனடியார்.

"அப்படிச் சொல்லியிராவிட்டால், அந்தப் பாவி என் பிராணனை வாங்கியிருப்பான், சுவாமி! - போகட்டும்; சக்கரவர்த்தியின் குமாரி ரொம்ப அழகாமே, நிஜந்தானா! நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?" என்று வள்ளி ஆவலுடன் கேட்டாள்.

"சிவனடியார் புன்னகையுடன், பார்த்திருக்கிறேன், அம்மா, பார்த்திருக்கிறேன். ஆனால், அழகைப் பற்றி எனக்கு என்ன தெரியும்? நான் துறவி!" என்றார்.

"எங்கள் ராணியை விட அழகாயிருப்பாளா? சொல்லுங்கள்."

"உங்கள் ராணி அவ்வளவு அழகா என்ன?"

"எங்கள் ராணியா? இல்லை, இல்லை! எங்கள் ராணி அழகேயில்லை, சுத்த அவலட்சணம், உங்கள் சக்கரவர்த்தி மகள்தான் ரதி...."

"என்ன வள்ளி, இப்படிக் கோபித்துக் கொள்கிறாய்?"


"பின்னே என்ன? எங்கள் ராணியை நீங்கள் எத்தனையோ தடவை பார்த்திருந்தும் இப்படிக் கேட்கிறீர்களே? அருள்மொழித் தேவியைப் போல் அழகானவர் இந்த ஈரேழு பதினாலு உலகிலும் கிடையாது...."

"நான்தான் சொன்னேனே, அம்மா! ஆண்டியாகிய எனக்கு அழகு என்ன தெரியும், அவலட்சணந்தான் என்ன தெரியும்?"

"உன் வீட்டுக்காரர் ஆபீஸ்ல இருந்து வந்ததும் எதுக்கு சட்டையை சமையலறையில கொண்டு போய் மாட்டி வைக்கிறார்?"

"மத்த அறையில வெச்சா நான் பர்சை எடுத்துடுவேனாம்!"

- கொங்கணாபுரம் வே. செந்தில்



"உங்களுக்குத் தெரியாது என்றுதான் தெரிகிறதே! ஆனால் காஞ்சி சக்கரவர்த்தியை எப்போதாவது பார்த்தால் கேளுங்கள்; அவர் சொல்லுவார். அருள்மொழித் தேவிக்கும் பார்த்திப மகாராஜாவுக்கும் கலியாணம் ஆவதற்கு முன்னால் நடந்த செய்தி உங்களுக்குத் தெரியுமா? அருள்மொழித் தேவியின் அழகைப் பற்றி நரசிம்மவர்மர் கேள்விப்பட்டு, 'அருள்மொழியைக் கலியாணம் செய்து கொண்டால் செய்து கொள்வேன்; இல்லாவிட்டால் தலையை மொட்டையடித்துக் கொண்டு புத்த சந்நியாசியாகப் போய் விடுவேன்' என்று பிடிவாதம் பிடித்தார். ஆனால் அருள்மொழித் தேவிக்கு அதற்கு முன்னே பார்த்திப மகாராஜாவுடன் கலியாணம் நிச்சயமாகி விட்டது. இன்னொரு புருஷனை மனதினால் கூட நினைக்க மாட்டேன் என்று கண்டிப்பாய்ச் சொல்லி, கடைசியில் பார்த்திப மகாராஜாவையே கலியாணம் செய்து கொண்டார்."

சிவனடியார் முகத்தில் மந்தகாசம் தவழ, "ஆமாம் அம்மா! நரசிம்மவர்மர் அப்புறம் என்ன செய்தார்? தலையை மொட்டை அடித்துக் கொண்டு பௌத்த பிக்ஷு ஆகிவிட்டாரா?" என்று கேட்டார்.

"ஆண் பிள்ளைகள் சமாசாரம் கேட்க வேண்டுமா, சுவாமி! அதிலும் ராஜாக்கள், சக்கரவர்த்திகள் என்றால் மனது ஒரே நிலையில் நிற்குமா? அப்புறம் அவர் பாண்டிய ராஜகுமாரியைக் கலியாணம் செய்து கொண்டார். இன்னும் எத்தனை பேரோ, யார் கண்டது?.... நான் மட்டும் ராஜகுமாரியாய்ப் பிறந்திருந்தால் எந்த ராஜாவையும் கலியாணம் செய்து கொள்ள மாட்டேன். அரண்மனையில் பத்து சக்களத்திகளோடு இருப்பதைக் காட்டிலும், கூரைக் குடிசையில் ஒருத்தியாயிருப்பது மேலில்லையா?"

சிவனடியார் கலகலவென்று நகைத்தார். "நீ சொல்வது நிஜந்தான், அம்மா! ஆனால் நரசிம்மவர்மன் நீ நினைப்பது போல் அவ்வளவு பொல்லாதவனல்ல...." என்றார்.




"இருக்கட்டும் சுவாமி! அவர் நல்லவராகவே இருக்கட்டும். அவர்தான் உங்களுக்கு ரொம்ப வேண்டியவர் போலிருக்கிறதே! ஒரு காரியம் செய்யுங்களேன்? சக்கரவர்த்தியின் மகளை எங்கள் இளவரசருக்குக் கலியாணம் செய்து வைத்து விடுங்களேன்! சண்டை, சச்சரவு எல்லாம் தீர்ந்து சமாதானம் ஆகி விடட்டுமே."

"நல்ல யோசனைதான், வள்ளி! ஆனால், என்னால் நடக்கக் கூடிய காரியம் அல்ல. நீ வேண்டுமானால் சக்கரவர்த்தியைப் பார்த்துச் சொல்லேன்..."

"நான் சக்கரவர்த்தியை எப்போதாவது பார்த்தால் நிச்சயமாய்ச் சொல்லத்தான் போகிறேன். எனக்கு என்ன பயம்?" என்றாள்.

அச்சமயத்தில், படகு கரைக்கு வந்து சேர்ந்த சப்தம் கேட்டது.

வள்ளி, "படகு வந்து விட்டது" என்று சொல்லிக் கொண்டு குடிசைக்கு வெளியே வந்தாள்.



3. சதியாலோசனை

சற்று நேரத்துக்கெல்லாம் அருள்மொழித் தேவியும் இளவரசர் விக்கிரமனும் குடிசைக்குள் வந்து "சுவாமி!" என்று சொல்லி சிவனடியாரின் பாதத்தில் வணங்கினார்கள். சிவனடியார் விக்கிரமனைத் தூக்கி எடுத்து அணைத்துக் கொண்டு ஆசீர்வதித்தார்.

ஆறு வருஷத்துக்கு முன் அறியாப் பாலகனாயிருந்த விக்கிரமன் இப்போது, இளங்காளைப் பருவத்தை அடைந்து ஆஜானுபாகுவாக விளங்கினான். அவன் முகத்தில் வீரக்களை திகழ்ந்தது. உள்ளத்தில் பொங்கிய ஆர்வத்தின் வேகம் கண்களில் அலையெறிந்தது. படபடவென்று பேசத் தொடங்கினான் : "சுவாமி! நேற்றிரவு கனவில் என் தந்தை வந்தார். என்னை அழைத்துக் கொண்டு சிராப்பள்ளி மலைக்குப் போனார். அங்கே உச்சியில் பறந்து கொண்டிருந்த பல்லவர்களின் சிங்கக் கொடியைக் காட்டினார்... சுவாமி! இனிமேல் என்னால் பொறுத்திருக்க முடியாது. நீங்கள் என்னை ஆசீர்வதிக்க வேண்டும்'' என்றான்.

''என்னுடைய ஆசீர்வாதம் உனக்கு எப்போதும் இருக்கிறது, விக்கிரமா! சரியான காலம் வரையில் காத்திருக்கும்படிதானே சொன்னேன்? இப்போது காலம் வந்து விட்டது. நீ என்ன செய்ய உத்தேசித்திருக்கிறாய், சொல்லு. வெறும் பதட்டத்தினால் மட்டும் காரியம் ஒன்றும் ஆகி விடாது. தீர யோசித்து ஒரு காரியத்தில் இறங்க வேண்டும். உன் தந்தை உனக்குக் கொடுத்து விட்டுப் போன குறள் நூலில் தெய்வப் புலவர் என்ன சொல்லியிருக்கிறார்?

> **'எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்**
> **எண்ணுவம் என்ப(து) இழுக்கு'**

- இதை நீ எப்போதும் ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும்."

"ஆம், சுவாமி! எண்ணித்தான் துணிந்திருக்கிறேன். வரப் போகும் புரட்டாசிப் பௌர்ணமியன்று சிராப்பள்ளி மலை மீது பறக்கும் பல்லவர் கொடியை எடுத்தெறிந்து விட்டு அங்கே புலிக்கொடியைப் பறக்க விடப் போகிறேன். யார் என்ன சொன்ன போதிலும் இந்தத் தீர்மானத்தை நான் மாற்றிக் கொள்ளப் போவதில்லை.''

"மிக்க சந்தோஷம், விக்கிரமா! உன் தீர்மானத்தை மாற்றிக் கொள்ளும்படி நானும் சொல்லப் போவதில்லை. இந்த நாள் எப்போது வரப் போகிறதென்றுதான் நான் காத்துக் கொண்டிருந்தேன். ஆனால் உன் தீர்மானத்தைக் காரியத்தில் நிறைவேற்ற என்ன ஏற்பாடு செய்திருக்கிறாய்? அதைத் தெரிந்து கொள்ள மட்டும் விரும்புகிறேன். புலிக்கொடியைப் பறக்க விட்டு விட்டால் போதுமா? அதைக் காத்து நிற்கப் படைகள் வேண்டாமா? பல்லவ தளபதி அச்சுதவர்மன் சும்மா பார்த்துக் கொண்டிருப்பானா?...''

"சுவாமி! அந்தக் கவலை தங்களுக்கு வேண்டவே வேண்டாம். சோழநாட்டு மக்கள் எல்லோரும் சித்தமாயிருக்கிறார்கள். பொன்னனைக் கேளுங்கள், சொல்லுவான். புரட்டாசிப் பௌர்ணமியில் வீரர்கள் பலர் உறையூரில் வந்து கூடுவார்கள். புலிக்கொடி உயர்ந்ததும் அவர்கள் என்னுடைய படையில் பகிரங்கமாய்ச் சேர்ந்து விடுவார்கள். உறையூரிலுள்ள பல்லவ சைன்யத்தைச் சின்னாபின்னம் செய்து அச்சுதவர்மனையும் சிறைப்படுத்தி விடுவோம்...!''

''இந்த அபாயகரமான முயற்சியில் உனக்கு யார் ஒத்தாசை செய்கிறார்கள்? யார் உனக்காகப் படை திரட்டுகிறார்கள்? நீயோ வசந்த மாளிகையை விட்டு வெளியே போவது கிடையாதே...''

"என் சித்தப்பா மாரப்ப பூபதிதான் எல்லா ஏற்பாடுகளும் செய்கிறார். அவர் இரகசியமாக ஒரு பெரிய படை திரட்டி வைத்திருக்கிறார்...''

மாரப்ப பூபதி என்றதுமே சிவனடியாரின் முகம் கறுத்தது. அவர் விக்கிரமனை நடுவில் நிறுத்தி, "யார்? மாரப்ப பூபதியா இதெல்லாம் செய்கிறான்; அவனிடம் உன் உத்தேசத்தை எப்போது சொன்னாய்?'' என்று கேட்டார்.

"சித்தப்பா முன்மாதிரி இல்லை! நீங்கள் கவலைப்பட வேண்டாம். அடியோடு புது மனிதர் ஆகி விட்டார். என் தகப்பனார் விஷயத்தில் நடந்து கொண்டதற்காக மிகவும் பச்சாதாபப்படுகிறார். அதற்குப் பரிகாரமாக இப்போது சோழ நாட்டின் விடுதலைக்கு உயிரையும் கொடுக்கச் சித்தமாயிருக்கிறார்'' என்றான் விக்கிரமன்.

சிவனடியார், அருள்மொழியைப் பார்த்து, "தேவி! இது நிஜந்தானா?'' என்று கேட்டார்.

"ஆம், சுவாமி! மாரப்ப பூபதி மனந்திருந்தியவராகத்தான் காணப்படுகிறார்'' என்றாள்

அருள்வாக்கு

நமஸ்காரம் என்றால் என்ன? உடம்பினாலே தண்டால் போடுகிற மாதிரி காரியமா? இல்லை. இங்கே காரியம் இரண்டாம் பக்ஷம். பாவம்தான் முக்யம். பக்தி பாவத்தைப் பலவிதமாகத் தெரிவிக்கத் தோன்றுகிறது. அப்போது பகவானுக்கு முன்னால் நான் ஒன்னுமே இல்லை என்று மிக எளிமையோடு விழுந்து கிடப்பதைக் காட்டவே நமஸ்காரம் என்ற க்ரியை. ஆக, நமஸ்காரம் என்ற க்ரியையைச் சொன்னாலும் அது பக்தி என்ற உணர்ச்சியைக் குறிப்பதுதான். எவருக்குச் செய்கிற



நமஸ்காரமும் ஒரே பரம்பொருளான கேசவனுக்குப் போய்ச் சேரும் என்று சொன்னால், எவரிடம் செலுத்தும் பக்தியும் பரமாத்மா என்ற ஒருவனுக்கே அர்ப்பணமாகும் என்றே அர்த்தம்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

அருள்மொழி.

"மெத்த சந்தோஷம், விக்கிரமா! உன்னுடைய முயற்சி நிறைவேறட்டும். தேவ சேனாதிபதியான கார்த்திகேயர் உன்னைக் காத்து நிற்கட்டும். உன் தோளுக்கும் வாளுக்கும் பராசக்தி பலம் அளிக்கட்டும். அவசியமான சமயத்தில் மறுபடியும் வருவேன். இப்போது போய் வருகிறேன்" என்று எழுந்தார் சிவனடியார்.

"சுவாமி! என் சித்தப்பா இப்போது வருவதாகச் சொல்லியிருக்கிறாரே; அவர் தங்களைப் பார்க்க மிகவும் ஆவலாயிருக்கிறார். தாங்கள் கொஞ்சம் இருந்து போக வேண்டும்" என்றான் விக்கிரமன்.

"இல்லை, விக்கிரமா! எனக்கு இருக்க நேரமில்லை. எது எப்படியானாலும் நீ உன் உறுதியைக் கைவிடாதே. உன் தந்தை வாக்கை மறந்து விடாதே" என்றார்.

அருள்மொழித் தேவி அப்போது பொன்னனைப் பார்த்து, "பொன்னா! இளவரசரை அழைத்துக் கொண்டு நீ படகுக்குப் போ; இதோ நான் வந்து விடுகிறேன்" என்று சொல்ல, பொன்னனும் விக்கிரமனும் உடனே வெளியேறினார்கள்.

அருள்மொழித் தேவி அப்போது சிவனடியார் பாதத்தில் நமஸ்கரித்து, அந்தப் பாதங்களைப் பிடித்துக் கொண்டவண்ணம் சொல்வாள் :-

"சுவாமி! தாங்கள் யாரோ எனக்குத் தெரியாது. என்னவெல்லாமோ தங்களைப் பற்றி நான் சந்தேகித்தது உண்டு. ஆனால், தாங்கள் எங்கள் நன்மையை நாடுகிறவர் என்பதில் சந்தேகப்பட்டதே இல்லை; அதனால் தங்களை யாரென்று தெரிந்து கொள்ளவும் நான் ஆசைப்படவில்லை. தாங்கள் யாராயிருந்தபோதிலும் சரி, அடியாளுக்கு ஒரு வரந்தர வேண்டும். எனக்குத் தங்களைத் தவிர வேறு கதி கிடையாது."

சிவனடியாரின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

"என்னால் முடிகிற காரியமாயிருந்தால் கட்டாயம் செய்கிறேன், அம்மா! கேள்" என்றார்.

"தாங்கள் மகான். தங்களால் முடியாத காரியம் ஒன்றுமே இருக்க முடியாது. வேறென்ன நான் கேட்கப் போகிறேன்? என் பிள்ளையின் உயிரைத் தாங்கள் காப்பாற்றித் தர வேண்டும் சுவாமி! இவன் இப்போது செய்யப் போகிற காரியம் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை எனக்கில்லை. மகா சக்தி வாய்ந்த பல்லவ சக்கரவர்த்தியை எதிர்த்து இளம் பிள்ளையால் என்ன செய்ய முடியும்? எல்லாம் தெரிந்த தாங்களும் இந்தக் காரியத்தில் இவனை ஏவி விட்டிருக்கிறீர்கள். தங்களுடைய நோக்கம் என்னவோ தெரியாது, சுவாமி! என்னவாயிருந்தாலும், அவனுடைய உயிரைக் காப்பாற்றிக் கொடுக்கும் பொறுப்பு தங்களுடையது" என்று ராணி தழுதழுத்த குரலில் கூறினாள்.

"உயிரைக் காப்பாற்றும் சக்தி வாய்ந்தவர் கடவுள் ஒருவர்தான், அம்மா! ஆனாலும் ஒரு உறுதி சொல்லுகிறேன். விக்கிரமனுடைய வீரத் தந்தையின் ஆத்மா அவன் பக்கத்திலிருந்து அவனைக் காப்பாற்றும். நீ கவலைப்படாதே, எழுந்திரு!" என்றார்.

அச்சமயம் மேற்குத் திசையில் தூரத்தில் குதிரையின் குளம்படிச் சப்தம் கேட்கவே, சிவனடியார் விரைவாக விடை பெற்றுக் கொண்டு கிழக்குத் திசையை நோக்கிச் சென்றார்.


சிவனடியார் சென்ற சற்று நேரத்திற்கெல்லாம் மாரப்ப பூபதி குதிரை மீது வந்து இறங்கினான். உடனே, "விக்கிரமா! சிவனடியார் வரப் போகிறாரென்று சொன்னாயே? வந்து விட்டாரா?" என்று கேட்டான்.

"இப்போதுதான் போனார், சித்தப்பா! போய்ச் சில விநாடி நேரங் கூட ஆகவில்லை. சற்று முன்னால் வந்திருக்கப்படாதா!" என்று விக்கிரமன் சொல்லிச் சிவனடியார் போன திசையை நோக்கினான்.

அதைப் பார்த்த மாரப்பன், "இந்தச் சாலை வழியாகத்தானே போனார்? இதோ அவர் முகத்தைப் பார்த்து விட்டு வந்து விடுகிறேன்" என்று கூறி, மறுபடியும் குதிரை மேலேறி விரைந்து சென்றான்.

ஆனால், அவன் அந்த நதிக்கரைச் சாலையோடு வெகு தூரம் குதிரையை விரட்டிக் கொண்டு போயும் சிவனடியார் தென்படவில்லை. அவர் மாயமாய் மறைந்து விட்டார்.

(தொடரும்)





இது சர்வதேச போன் கால். அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்கள். எம் & ஏ. யு.எஸ்.ஏ.

ரேடியோ நாயக்கர்

கிருஷ்ணா



வெளியே கிளம்புகையில் கைக்கடிகாரத்தை அனிச்சையாய் எடுத்து அணியும் போதுதான் அது நேற்று கீழே விழுந்து உடைந்து விட்ட ஞாபகம் வந்தது. பழைய கடிகாரம். கிட்டத்தட்ட இருபத்தைந்து வருடம் உழைத்து விட்டது. கடிகாரம் பார்த்துச் செய்ய வேண்டிய வேலை என்று ஒன்றுமில்லை எனக்கும். அமைதியான ரிடையர்டு லைஃப். இருந்தாலும், கடிகாரம் கட்டியே பழக்கப்பட்டுப் போன மணிக்கட்டுக்கு அந்தச் சுமை தேவையாயிருந்தது.

எடுத்து கட்டிக் கொண்டேன், ஓடாத கடிகாரத்தை. செருப்பை மாட்டிக் கொண்டு கிளம்பினேன்.

''என்னப்பா, நேர்த்திக் கடனா?'' என்றாள் என் மகள்.

எனக்கு நாயக்கர் ஞாபகம் வந்தது.

பெரிய ஆகிருதியான உருவம். பெரிய நெற்றியில் நாமம் போட்டிருப்பார் பனிச்சென. கதர் சட்டை, வேட்டி. கிட்டத்தட்ட என் சம வயது ஆள். கடைத் தெருவில் ரேடியோ ரிப்பேர் கடை வைத்திருக்கிறார். கடைக்குள் நுழையும்போதே பழைமை வாசனையடிக்கும். அந்தக் காலத்து வால்வு ரேடியோக்கள் கடை முழுதும் பரந்து, விரிந்து கிடக்கும். நான் பார்த்தவரை வியாபாரம் 'டல்'தான்.

என் அம்மாவின் ஞாபகார்த்தமான வால்வு ரேடியோ பரணில் தூங்கிக் கொண்டிருந்ததை யதேச்சையாகப் பார்த்தேன். எதையோ தேட, இது அகப்பட்டது ஆறு மாதம் முன்பு.

> இப்போது அம்மாவின் ஞாபகங்கள் மட்டும் இருக்கையில், இந்த ரேடியோ யதேச்சையாய்க் கண்ணில் பட, அம்மாவையே கண்ட ஆனந்தம் எனக்குள்.

அம்மாவின் பத்தாவது திருமண நாளுக்கு அப்பா கொடுத்த பரிசு என்று ஆசை பொங்க அம்மா அடிக்கடி சொல்வாள். திருகினைத் திருகி 'ஆன்' செய்ததும் 'கொர்' என்ற ரீங்காரத்துடன் தொடங்கி பிறகு அதன் வழியே குரல் வருவது சிறு வயது ஆச்சரியம் எனக்கு.

அப்பா அதற்குள்ளேயே காதை வைத்துக் கொண்டு கிரிக்கெட் கமெண்ட்ரி கேட்பார்.

அம்மாவின் கடைசிக் காலத்தில் ஏதோ ரிப்பேராகி விட்டது ரேடியோ. இதற்கு இப்போதெல்லாம் ஸ்பேர் பார்ட்ஸ் கிடைப்பது கஷ்டம் என்று பரணில் தூக்கிப் போட்டதுதான் அப்போது.

அம்மா நாலைந்து முறை சொல்லிப் பார்த்தாள் சரிசெய்யும்படி. அப்போதிருந்த வீடு,



- ஆர். ரகோத்தமன்

ஆபீஸ், சம்பளப் பற்றாக்குறை, பஸ் பிடிக்கும் அவசரம், பசங்களுக்கு ஸ்கூல், காலேஜ் பீஸ் கட்டும் டென்ஷன்களில் அம்மாவின் ஆசை அவ்வளவு முக்கியமாகப்படவில்லை.

இப்போது அம்மாவின் ஞாபகங்கள் மட்டும் இருக்கையில் இந்த ரேடியோ யதேச்சையாய்க் கண்ணில் பட, அம்மாவையே கண்ட ஆனந்தம் எனக்குள்.

உடனே, இதை ரிப்பேர் செய்து பாட வைக்க வேண்டும் என்ற ஆசையும் எழுந்தது.

விசாரித்ததில் நாயக்கர் கடையைக் காட்டினார்கள். ரிப்பேர் செய்யக் கொடுத்து ஐந்து மாதத்துக்கும் மேல் ஆகி விட்டது. நாயக்கரும், இதோ அதோ என்று நாளைக் கடத்துகிறார்.

அவரின் தாமதம் முதலிலெல்லாம் கோபத்தை ஏற்படுத்தியது.

"முடியாவிட்டால் திருப்பிக் கொடுத்திடுங்க." என்று கூடக் கோபமாய் இரண்டு, மூன்று முறை கேட்டேன்.

"இந்த வயசுல கோபமெல்லாம் கூடாது சாமி" என்று கனிவாய்ச் சிரித்தபடி சொல்லுவார். அதற்கு மேலும் கோபப்பட முடியாதபடியான மாற்றம் என்னுள் நிகழும்.

கொஞ்ச நாளில், "வாங்க ரேடியோ சாமி" என்றே அழைக்க ஆரம்பித்து விட்டார். சமவயது என்பதால் எங்களுக்குள் இயல்பான தோழமை எளிதாய் முளைத்து, வளர்ந்து விட்டது.

இருந்தாலும், அம்மாவின் நினைப்பு சில சமயம் ரேடியோ பற்றி கேட்க வைத்து விடும்.

இன்று நாயக்கரைக் கேட்டு விட வேண்டியதுதான். வேண்டுமென்றே என்னை இழுத்தடிப்பது போல மனத்துக்குப் பட்டது. அம்மாவுக்குப் பிரியமானதால் எனக்கும் பிரியமாகிப் போன ரேடியோ, அவருக்கு வேண்டுமானால் சாதாரண ஜடப் பொருளாய்ப்படலாம். எனக்கு அப்படி அல்ல.

மனத்தில் தீர்மானத்துடன் நடந்தேன். கடைத் தெரு வழக்கமான ஓசைகளுடன் கலகலத்தது. வலது பக்கம் ஆறாவது கடை. நல்ல இடம். நாயக்கரின் சொந்த இடம் அது.

என்னது இது? 'நாயக்கர் ரேடியோ ரிப்பேர் சென்டர்' என்ற பெயிண்ட் உதிர்ந்த பழைய போர்டை முகப்பில் காணோம்?

"வாங்க ரேடியோ சாமி" என்று முகமெங்கும் சிரிப்புடன் வரவேற்றார்.

பழைய ரேடியோ எதையும் கடையில் காணோம். அப்போது என்னுடையது? பதற்றத்துடன் நாயக்கரைப் பார்த்தேன்.

"உட்காருங்க" என்று ஸ்டூலைக் காட்டினார்.

"என்ன நாயக்கரே இது?" என்றேன். ஒரு வாரம் நான் ஊரில்லாத நேரத்தில் நடந்த மாற்றம்.

கடையே காலியாக இருந்தது.

"ஓ– இதுவா?" என்றார். குரலில் சோகம் எட்டிப் பார்த்தது.

"என் முப்பது வருஷ வியாபாரத்தை... ஹூம்!" என்று பெருமூச்சு விட்டார்.

புரியாமல் அவரைப் பார்த்தேன்.

"என் அக்கா பையன் கேட்டான். மளிகைக் கடை வரப் போகுது இங்கே. ப்ச், ரேடியோ போய் மளிகை வருது" என்றார்

சோகம் விலகாமல்.

"என்ன திடீர்னு?" என்றேன் பச்சாதாபத் துடன்.

"ஒரு வீம்புக்காக இத்தனை நாளாய்க் கடை நடத்தினேன். வியாபாரமே சுத்தமாய் இல்லேன்னு தெரிஞ்சும் மனசு அரிப்புக்காக ரேடியோ ரிப்பேர் கடை நடத்தினேன். விஞ் ஞான முன்னேற்றத்துக்குத் தகுந்த மாதிரி மாற முடியலே என்னாலே. வயசும் ஆகிப் போச்சா. இந்தக் காலத்துல பழைய ரேடி யோப் பொட்டிகளை யாரு வைச்சிருக்கான்? அப்படி இருந்தாலும், 'வித்துடுங்க நாயக் கரே, இதனால பிரயோஜனம் இல்லே, ஒரு ரூபாய் வந்தாலும் லாபம்தான்னு' கொடுத் துடறாங்க'' என்றவரை பரிதாபமாய்ப் பார்த்தேன்.

அவர் சொல்வது உண்மைதான். ஐ.சி. யுகம் இது. பழைய வால்வு ரேடியோ காலம் மலையேறி விட்டது.

"என்னை மன்னிச்சுடுங்க சாமி" என் றார் திடீரென.

"என்னது இது... பெரிய வார்த்தையெல் லாம்?" என்றேன் சங்கடமாய். கூடவே என் ரேடியோ நினைப்பும் கூட.

"அக்கா பையன் வற்புறுத்தி என்னை இதுக்குச் சம்மதிக்க வைச்சுட்டான்!" என் றார் வெளியே வெறித்தபடி.

நான் அவரையே கவனித்தபடி அமர்ந் திருந்தேன்.

"உங்களைத்தான் தினசரி அலைய வைச் சுட்டேன்" என்றபடி எழுந்தார்.

மூலையிலிருந்த அலமாரியிலிருந்து ரேடி யோவை எடுத்தார். பிளக்கைப் பொருத்தி, திருகினை 'ஆன்' செய்தார்.

எனக்குள் சிலிர்த்தது. ரேடியோவிலிருந்து பெண்குரல் பாடியது. என் அம்மாவின் குர லையே கேட்டது போன்ற பரவசம்.

''ரெண்டு மாசத்துக்கு முன்னாடியே இதைச் சரி பண்ணிட்டேன். வாடிக்கையாள ரான உங்களை இழக்க விரும்பாமல்தான் இழுத்தடிச்சேன். என் கடைக்கும் ஆள் வரு துங்கற கௌரவத்துக்காக... மன்னிச்சுடுங்க சாமி'' என்று ரேடியோவை என்னிடம் நீட்டினார்.

அவரைப் பற்றிய வியப்புடனும், பரி தாபத்துடனும் ரேடியோவை வாங்கிக் கொண்டேன்.

"எவ்வளவு பணம் நாயக்கரே?" என்ற தற்குப் புன்னகைத்தார்.

"கூலி... உங்களை நடக்க வைச்சேனே தினசரி. போதாதா?"

"இனிமே என்ன செய்யப் போறீங்க?" என்றேன் ரேடியோவை இறுக அணைத்த படி.

"வாட்ச் ரிப்பேர் கொஞ்சம் தெரியும் எனக்கு வாசலில் பார்க்கலே? சின்ன தடுப்பு. மூணுக்கு மூணு இடம். அக்கா பையன் வேற இந்த இடத்துக்கு வாடகை தருவான். காலம் ஓடிடும். பொழுது போவதற்கு வாட்ச் ரிப்பேர் கடை. காசுக்கு வாடகை. போதாதா?" என்று யதார்த்தமாய்ச் சொன்னார்.

சட்டென ரேடியோவைக் கீழே வைத் தேன். மணிக்கட்டில் உறுத்திய கைக்கடி காரத்தைக் கழற்றினேன்.

"நாயக்கரே, உங்க புது பிஸினஸுக்கு நான் தான் முதல் வாடிக்கையாளன். பிடிங்க!"

ஒரே ஒரு ஊரிலே...

'எங்க ஊர்ல...' என்று ஆரம்பித்துச் சிலர் பேசினால் கேட்டுக் கொண்டே யிருக்கலாம். இப்போது வாசகர்களை அவ ரவர் ஊர் பற்றி எழுத அழைக்கிறோம். கிராமம், குக்கிராமம், எதுவானாலும் சரி, உங்கள் சொந்த ஊராக அது இருக்க வேண்டும் - அந்த ஊரில் இப்போது நீங்கள் குடியிருக்க வேண்டும் என்று அவசிய மில்லை. வேறு ஊரில் இருந்தபடியும் எழுதலாம்.

ஊர் பெரிசுகளின் பெருமை, சிறிசு களின் சாகசம், ஊர் சிறப்பு, ஊர் சிரிப்பு, வினோத பழக்கம், வியத்தகு சாதனை என எதுவாயினும் இருக்கலாம்....


 இல் மட்டுமே எழுதுங்கள்.

 வைக்காமல் எழுத வேண்டும்.



தேதிக்குள் எங்களுக்குக் கிடைக்க வேண்டும்.

 வை எடுங்கள் பார்க்கலாம்!

சிறந்த செய்திகளுக்கு  உண்டு!

எங்கள் தீர்ப்பே இறுதி.

- ஆர்

தேசபக்த வியாபாரிகள்

24

அபூர்வா, வனிதா தன்னை வந்து எழுப்புவாள் என்று எதிர்பார்க்க வில்லை.

அவ்வளவு நேரமாகிவிட்டதா?

திரைச்சீலை ஊடே, வெளியிலும் இருள் கவிந்திருந்ததென்று அவளுக்குத் தெரிந்தது.

அருகிலிருந்த கடிகாரம், நேரம் நாலரை என்பதை அறிவிக்க, பச்சையாய் ஒளிர்ந்தது.

அபூர்வா எழுந்து உட்கார்ந்தாள்.

"அவரு வந்திருக்காருங்க..." என்றாள் வனிதா.

"நஞ்சுண்டனா?"

"எதுக்கு இந்த நேரத்திலே?"

"தெரியலீங்க. அவசரங்கிறாரு."

அபூர்வா 'ட்ரெஸ்ஸிங் கவுன்' நாடாவை இறுக முடிந்து கொண்டு 'ஹாலு'க்குள் வந்தாள்.

"என்ன இந்த நேரத்திலே?" என்று கேட்டாள் அபூர்வா.

நஞ்சுண்டன், 'பான்ட்', 'டீ ஷர்ட்டி'லிருந்தான். அவன் உடையில் மிகுந்த அக்கறை காட்டுபவன். முழுக்கைச் சட்டை, டை, 'பான்ட்'தான் அவனுடைய அலுவலக உடை. அவனும் மிக அவசரமாகப் புறப்பட்டு வந்திருக்கிறான் என்பதை அவன் 'டீ ஷர்ட்' காட்டியது.

"இந்திரபிரஸ்தத்திலே ஆட்சி மாற்றம்... சந்ததி ஆட்சியைச் சேர்ந்தவங்க பதவிக்கு வந்துட்டாங்க. ஒரு ஆட்சிக் கவிழ்ப்பு மாதிரி. ராணுவம், சந்ததி ஆட்சிக்காரங்க பக்கம்..." என்றான் நஞ்சுண்டன் பதற்றக் குரலில்.

"இது நம்மைப் பாதிக்குதா?" என்றாள் அபூர்வா.

"அங்கே ஆட்சிக்கு வந்திருப்பவங்க பெண். குடியாட்சி முறை போய், அங்கே முடியாட்சின்னு அறிவிச்சாச்சு...."

"மை காட்!"

"அதனாலே நம்ம தலைவரும் ஒரு முடிவு எடுத்து, நிறைவேத்திட்டாரு!"

"என்ன முடிவு? நம் நாட்டிலும் முடியாட்சியா? நம் நாட்டிலே பெயரளவில் இல்லாட்டாலும், நடைமுறையிலே எப்போதுமே முடியாட்சிதானே?"

"நம்ம தலைவர் வாயு சமாதி அடைஞ்சாச்சு..."

"வாயு சமாதியா?"

"ஆமாம்... அப்படியே காத்திலே கலந்து போறது. உடம்பு மறைஞ்சுடும்... ஆத்மா மட்டு மிருக்கும்..."

அபூர்வா சிரித்துக் கொண்டே கேட்டாள் : "எங்கே இருக்கும்?"

"உங்க உடம்பிலே, உங்க ஆத்மாவோட இணைஞ்சுடும்... இப்போ நீங்கதான் எங்க தலைவர்..."

"என்ன ஆயிடுத்து உங்களுக்கு நஞ்சுண்டன்? ஆர் யு கிரேஸி?"

"இதுதான் எங்க நாட்டு மரபு, நம்பிக்கை. பதவி ஏற்பு உடனே நடந்தாகணும். தலைவரோட விருப்பமும் அதுதான். அதோடு மட்டுமல்ல, நம் நாட்டிலும் முடியாட்சிதான்னு



தலைவர் சொல்லிட்டாரு..."

"மை காட்! என்ன சொல்றீங்க நஞ்சுண்டன், நான் ராணியாகணுங் கிறீங்களா?"

"நான் சொல்லலே. தலைவர் விருப்பம்."

"தலைவர் விருப்பம்னு நீங்க சொல்றீங்க. இதை எப்படி நம்ப முடியும்?"

"வாயு சமாதி அடைவதற்கு முன்னாலே அவர் எழுதி வைச்சிருக்கிற கடிதம் இதோ இருக்குது..." என்று கூறிக் கொண்டே ஒரு கடிதத்தை அவளிடம் நீட்டினான் நஞ்சுண்டன்.

அபூர்வா படித்தாள்.

'என்னருமை வேதபுரத்துக் குடிமக்களே, என் ஆத்மாவைத் தரிக்க என் வாரிசு வந்தாகிவிட்டது.

நான் இறுதி முடிவாக வாயு சமாதியைத் தேர்ந்தெடுத்துள்ளேன்.

காற்றில் கலந்து விடுவேன்.

வேதபுரத்துத் தலைவர்கள் மடிவதில்லை. ஆத்மா இடம் பெயர்கின்றது. அவ்வளவுதான். இனி, பேருக்கு ஜனநாயகம், குடியாட்சி என்றெல்லாம் சொல்லி நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை.

அபூர்வாவுக்கு முடி சூட்டிவிடுங்கள்; இந்திர பிரஸ்தத்திலும் முடியாட்சி என்று அறிவித்திருக் கிறார்கள்.

எனக்கு சமக்கடன் என்று எதுவும் செய்யக் கூடாது. அவ்வாறு செய்தால், நான் இறந்துவிட்டதாக நீங்கள் நினைக்கிறீர்களென்று அர்த்தம்.

நான் சாகவில்லை.

நான்தான் அபூர்வா,

இப்படிக்கு...
அபூர்வா.

அபூர்வா உரக்க வாய்விட்டுச் சிரித்தாள், கடிதத்தைப் படித்து முடித்தவுடன்.

"என்ன சிரிக்கிறீங்க?" என்றான் நஞ்சுண்டன்

இந்திரா பார்த்தசாரதி

சிறிது கோபத்துடன்.

"குட் ஜோக்...! இல்லையா?"

"எது ஜோக்?"

"இந்தக் கடிதம், உங்க தலைவர், முடியாட்சி... எல்லாமே..."

"நீங்க இந்த நாட்டு ராணி. நான் உங்களை மறுத்து ஒண்ணும் சொல்ல முடியாது..."

"மறுபடியும் கேக்கறேன், ஆர் யு க்ரேஸி?"

"இன்று மாலை ஐந்து மணிக்கு நகர்ப் பேரரங்கில், பொதுமக்கள் முன்னிலையில் உங்கள் முடி சூட்டு விழா ஏற்பாடாகியிருக்கிறது. ஞானச் செல்வர் சிங்காரம் அடிகளார் முடிசூட்டு விழாவை நடத்தி வைப்பார்..."

"நான் தயாராக இல்லை, முடி சூட்டிக் கொள்ள."

"இது தெய்வக் கட்டளை, யுவர் மெஜஸ்டி."

"ப்ளீஸ்... 'யுவர் மெஜஸ்டி'ங்கிற ஒரு புண்ணாக்கும் வேணாம். நான் திரும்பிப் போயிடலாம்னு பார்க்கிறேன், என் நாட்டுக்கு..."

"அது சாத்தியமில்லை, யுவர் மெஜஸ்டி. உங்களுக்கும் இந்திரபிரஸ்தத்து அரசியாருக்கும் ஓர் ஒற்றுமை, யுவர் மெஜஸ்டி."

"என்ன?"

"இருவரும் பூர்வீகத்தில் வேற்று நாட்டைச் சேர்ந்தவர்கள். இருந்தாலும் நீங்கள் குடியேறிய நாட்டு

'பகுத்தறிவிலிருந்து விடுமுறை பெற்று, நம்பிக்கையின்மையை விரும்பிப் புறக்கணித்தால்தான், மனித வாழ்க்கை சுவாரஸ்யமாக இருக்கும்.'

(வேதபுரத்துத் தலைவர் கட்டுரைகள் : பக். 1337 - 1339)



இன்றைய சூழ்நிலையில் இவர்கள் ஹீரோ, ஹீரோயினாக நடித்தால் படத்திற்குப் பொருத்தமான பெயர் இப்படி இருக்குமோ?



''புன்னகை மன்னன்''



''பிள்ளைக்காக''



''உச்ச கட்டம்''



''எனக்கு நானே நீதிபதி''



''சுப்பிரமணிய சுவாமி''



''என் கேள்விக்கென்ன பதில்''



''சட்டம் என் கையில்!''

- சம்பத்குமாரி

மக்கள் உங்களிடம் காட்டும் அபிமானமும் விசுவாசமும் சொல்லை விஞ்சி...''

அபூர்வா குறுக்கிட்டாள்: ''தலைவர் காத்திலே மறைஞ்சு போயிட்டார்னா இந்த நாட்டு மக்கள் நம்புவாங்கன்னு எதிர்பார்க்கிறீங்களா?''

''வேதபுரத்து மக்கள் எதையும் நம்புவார்கள், யுவர் மெஜஸ்டி.''

''கண்ணுக்குத் தெரியாத ஒரு தலைவருக்கு 'கட்-அவுட்' வச்சு வழிபட்டவங்க, அவர் மறைஞ்சுட்டார்னாலும் நம்பக் கூடியவங்கதான்!'' என்றாள் அபூர்வா.

நஞ்சுகண்டன் மௌனமாக, முகத்தில் எந்த விதமான சலனமுமின்றி நின்று கொண்டிருந்தான்.

''திரைப்படத்திலிருந்த நடிகர் ஒருவர், வெகுஜன ஆதரவிலே தலைவரானார்... ஓ.கே... ஆனா அவர் இப்பொத்தான் காத்திலே மறைஞ்சாரா, இல்லாட்டா முன்னாலேயே மறைஞ்சவர்தானா, மிஸ்டர் நஞ்சுகண்டன்?'' என்றாள் அபூர்வா.

''நீங்கள் என்னைச் சந்தேகிக்கிறீர்கள், யுவர் மெஜஸ்டி...''

''சந்தேகமேயில்லே.. தலைவர் எப்போவோ போயிட்டாரு... தலைவர் பேரைச் சொல்லி ஒரு 'சிஸ்டத்'தை உருவாக்கினவங்க, அந்த 'ஸிஸ்டம்' மூலமா செத்துப் போன தலைவரை இவ்வளவு நாளா வாழ வைச்சுக்கிட்டு வந்திருக்கீங்க. இப்போ உங்களோட என்ன சௌகர்யத்துக்காக அவர் 'வாயு சமாதி' அடைஞ்சுட்டார்னு சொல்றீங்கன்னு எனக்குத் தெரியலே. அது கிடக்கட்டும், எனக்கு எதுக்காக இந்தப் பட்டாபிஷேகம் மிஸ்டர் நஞ்சுகண்டன்?''

நஞ்சுகண்டன் பதில் கூறாமல் மௌனமாக நின்றான். அவள் சொன்னதை அவன் ஏற்றுக் கொண்டானா, இல்லையா என்று அவன் முகத்தினின்றும் எதுவும் புலனாகவில்லை.

சலனமற்றிருந்தது அவன் முகம்.

''ஏன் பேசாமலிருக்கீங்க? நான் சொல்றது சரிதானே?''

''உரிய சமயத்தில் என்னால் எல்லாவற்றையும் விளக்கமாகக் கூற முடியும். இப்பொழுது என்னை எந்தக் கேள்வியும் கேட்காமல், நான் சொல்வதைக் கேளுங்கள், அபூர்வா.''

அவன் 'அபூர்வா' என்று அழைத்தது அவளுக்குச் சிறிது ஆச்சரியத்தைத் தந்தது. கண்களைச் சற்று இடுக்கி, முகத்தில் லேசாகப் புன்னகை படர, அவனை அவள் நோக்கினாள்.

அவன் முகத்திலும் புன்னகை நிழலிடுவது போல அவளுக்குப் பட்டது.

''நீங்க சொல்லப் போறது அபூர்வாவுக்கு, நாட்டை ஆளப் போற அரசிக்கல்ல, அப்படித்தானே?''

நஞ்சுகண்டன் புன்னகை செய்தான்.

''எதுக்கு சிரிக்கிறீங்க?''

''நீங்களும் 'சரி'ன்னு சொல்லியாச்சு... நன்றி...''

''எதுக்குச் 'சரி'ன்னு சொல்லியாச்சு...?''

'''நாட்டை ஆளப் போற'ன்னு சொன்னீங்களே?''

''மன்னிக்கவும்.. 'நாட்டை ஆளப் போறதா நீங்க நினைச்சுக்கிட்டிருக்கிற'ன்னு சொல்லணுமில்லியா?''

''வேதபுரம் பூரா இன்னி பேப்பர்லேயும், டீ.வி.யிலும், ரேடியோவிலும் இந்த அற்புதத்தைப் பற்றிச் செய்தி வரப் போறது. சொல்லப் போனா, வந்தாச்சு.. நீங்க யாருங்கிறதைப் பத்தி வரலாற்றுச் செய்திகள், நீங்க அதைக் கட்டுக் கதைன்னு சொல்லலாம்... நீங்க பகுத்தறிவு, பகுத்தறிவுன்னு பிரசாரம் செய்யலாம். ஆனா, சாதாரண ஜனங்க விரும்பறது, பகுத்தறிவிலேயிருந்து விடுமுறை, 'நம்பிக்கையின்மையை விரும்பிப் புறக்கணித்தல்'ங்கிறது வேதபுரத்திலேதான் சாத்தியம்...'' என்றான் நஞ்சுகண்டன்.

'''நான் யாருங்கிற வரலாற்றுச் செய்தி'... அப்படின்னா புரியலே...''

''டீ.வி. பாருங்க, பேப்பர் படியுங்க, ரேடியோ கேளுங்க... வரேன்... சாயந்திரம் நாலு மணிக்குத் தயாரா இருங்க. அஞ்சு மணிக்கு முடிசூட்டு விழா... வரேன்.''

அவன் பதிலுக்குக் கூடக் காத்திராமல் போய்விட்டான்.

வனிதா முகமெல்லாம் பிரகாசமாய்ச் சொன்னாள். ''எனக்குச் சந்தோஷமாயிருக்கு.

ஸ்ரீராம் டிரஸ்ட்

SHRIRAM GROUP COMPANIES
MADRAS

நிர்வாக அலுவலகம் : த.பெ. 5043, 145, லிங்கிச் செட்டி தெரு.
சென்னை - 600 001. தொலைபேசி : 5228545 / 510535.

* * * * * *

அன்புடையீர்,

வணக்கம். 47 ஆண்டுகளாகத் தொடர்ந்து சிறப்பாக வெளிவரும் 'அமுதசுரபி' குடும்ப இலக்கிய மாத இதழ் வெளியீட்டாளர்கள் புதிய சந்தா முதலீட்டுத் திட்டத்தை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறார்கள்.

இந்தத் திட்டத்தில் ரூ. 5000 டெபாசிட் செய்தால் ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்தவுடன் இருமடங்காக ரூ. 10,000 திரும்பப் பெறலாம். அத்துடன், சிறந்த மாத இதழ் 'அமுதசுரபி', மாதந்தோறும் தங்கள் இல்லத்திற்கு இலவசமாக அனுப்பப்படும். எல்லோராலும் பாராட்டப்படும்' அமுதசுரபி' தீபாவளிமலர் ஐந்து ஆண்டுகளுக்குப் பதிவுத் தபாலில் தங்கள் வீடு வந்தடையும். (இடையே விலை ஏற்றம் ஏற்பட்டாலும்)

இந்த அரிய திட்டத்தில் சேர்பவர்களுக்கு 1995 ஆம் ஆண்டு ஸ்ரீராமர் பட்டாபிஷேக (பல வண்ண)தினசரிக் காலண்டர், ஸ்ரீஜகத்குரு காவியம் (மஹாசமாதி அடைந்த பெரியவாள் சரித்திரம்) ரூ. 25 விலையுள்ளது. காப்பியப் போட்டியில் இந்தியன் வங்கியின் பரிசு பெற்றது அன்பளிப்பாக வழங்கப்படும்.

இதுபோன்று 5 ஆண்டுகளில் இருமடங்காக அளிக்கப்படும் திட்டம் மற்ற எந்த நிதி நிறுவனங்களிலும் இல்லையாதலால் இந்த திட்டத்திற்கு உங்களது முழு ஆதரவை நாடுகிறோம்.

உங்களது இலக்கிய நண்பர்கட்கும் இந்த திட்டம் பற்றித் தெரிவிப்பின் மிக்க நன்றி.

10-1-1995க்குள் சேர்பவர்களுக்கு மட்டுமே 1995 ஆம் ஆண்டு தினசரி காலண்டர் அனுப்பப்படும்.

தங்கள் ஆதரவை என்றும் விரும்பும்

பின்குறிப்பு-

இத்திட்டத்தில் சேர்த்துவிடும் ஸ்ரீராம் டெபாஸிட்தாரர்களுக்கு 1995 ஆம் வருட ஸ்ரீராமர பட்டாபிஷேக [வண்ண] காலண்டர், ஸ்ரீஜகத்குரு காவியம் அன்பளிப்பாக அவர்கள் வீட்டிற்கு அனுப்பப்படும்.

ஸ்ரீராம் டிரஸ்டுக்காக
AVSRaj
[ஏ.வி.எஸ். ராஜா]
மானேஜிங் டிரஸ்டி.

சந்தா முதலீட்டுத் திட்ட விண்ணப்பம்

தேதி : ____________

அன்புடையீர்,

நான் இத்துடன் சந்தா முதலீட்டுத் திட்டத்தில் சேருவதற்கு - ரூ. 5,000/- செக் / டிராப்ட் எண். ____________ அனுப்பியுள்ளேன்/ ளோம்.

இந்தத் தொகையை 5 ஆண்டு முடிவடைந்த பிறகே ரூ. 10,000 ஆக திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்.

1. முழுப்பெயர் : திரு/திருமதி/ செல்வி. ____________
2. கூட்டாக இடப்பட்டால் அவர்கள் பெயர் : ____________
3. முகவரி : ____________
4. வாரிசுதார் பெயர் / உறவு ____________
5. 'அமுதசுரபி' இதழ்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி ____________

அன்புள்ள

அறிமுகப்படுத்தும் ஸ்ரீராம் டெபாசிட்தாரர்கள் முகவரி (டெபாசிட் எண் குறிப்பிடவும்)

டெபாஸிட்டர் கையொப்பம்

நான் ராணியோட அந்தரங்கத் தோழி."

"துணைத் தலைவரோட தோழியாயிருக்கிறப்போவே இவ்வளவு வரும்படி வந்தா, ராணியோட தோழிக்கு எத்தனை வருங்கிறது தான் உன் கணக்கு, இல்லையா?" என்றாள் அபூர்வா.

"சத்தியமா இல்லீங்க.... நீங்க ராணிங்கிறதே எனக்குச் சந்தோஷங்க..."

அபூர்வா 'மீடியா'வில் வந்த அவனுடைய 'வரலாற்றுச் செய்தியை'ப் பார்த்துத் திடுக்கிட்டாள்.

'நாற்பது நூற்றாண்டுகளுக்கு முன்பு வேதபுரத்தை ஆண்ட ஒரு மாமன்னனின் அருமை மகள், போர்க் கோலம் பூண்டு, பல நாடுகளை வெற்றி கொண்டு, ஒரு சாம்ராஜ்யத்தை நிறுவத் தந்தைக்கு உதவினாள். அந்த இளவரசிதான் இன்றைய அபூர்வா.'


இச்செய்தி எப்படித் தெரிய வந்தது?

'மருத்துவக்குடி என்ற சிறிய கிராமத்தில் மரத்தடி ஜோஸ்யர் ஞானச் செல்வர் சிங்கார அடிகளுடைய கிளி, திடீரென்று யாருக்கும் விளங்காத ஒரு புதிய பாஷை பேசத் தொடங்கியது. அது என்ன மொழி என்பதைக் கண்டுபிடித்துச் சொன்னவன் ஜோஸ்யருடைய மகன். அவன் கனவிலே அது என்ன மொழி என்ற செய்தி வந்ததோடு மட்டுமல்லாமல், தொடர்ந்து நிகழ்ந்த கனவுகளில் அவனுக்கு அந்த மொழி அத்துப்படியாயிற்று. கிளி சொன்ன விவரம் இதுதான்: அபூர்வா, அந்த வேதபுரத்து மாமன்னரின் மகள், அந்த மாமன்னர்தாம் வாயு சமாதியுற்ற நம் அரும் பெரும் தலைவர். கிளியின் மொழியை உலகுக்கு எடுத்து அறிவுறுத்திய ஞானச் செல்வர் சிங்காரம் அடிகளுடைய மகனையும் கிளியையும் இன்று முடிசூட்டு வைபவத்தின்போது மஹாராணி அவர்கள் தம் பொற்கையால் சால்வை அணிவித்துக் கௌரவிக்கப் போகிறார்கள். ஞானச் செல்வர் முடிசூட்டு விழாவை நடத்துவார்.'

"என்ன இது? டி.வி.யிலே செய்தி வாசித்துக் கொண்டிருந்த பெண் திடீர்னு எழுந்து போறா...?"

"அவதான் என் மருமக; அவளுக்கு என்னைக் கண்டாலே பிடிக்காது!"

– சோம. முத்துக்குமார்



இதுதான் செய்தி. அபூர்வாவுக்கு அழுவதா சிரிப்பதா என்று புரியவில்லை. நஞ்கண்டன் சொன்னது அவள் நினைவுக்கு வந்தது.

'நம்பிக்கையின்மையை விரும்பிப் புறக்கணித்தல்' இவ்வாறு செய்தால்தான் வேதபுரத்தில் வாழலாமென்று தோன்றுகிறது. இந்திரபிரஸ்தத்தில் பழைய தலைவர் பதவியிழந்து, முடியாட்சி அறிவிக்கப்பட்டுவிட்டபடியால், வேதபுரத்துக்கும் முடியாட்சி என்று தீர்மானமாகிவிட்டது. இதனால் வேதபுரம் ஒரு சுதந்திரமான தனி நாடு என்று பிரகடனப்படுத்திவிடலாமென்பதும் நோக்கமாக இருக்கலாம்.

இந்திரபிரஸ்தத்திலும் சரி, வேதபுரத்திலும் சரி, மக்கள் மனப்பான்மை ஒன்றுதான். அவர்கள் குடியாட்சியையோ, ஜனநாயகத்தையோ விரும்பவில்லை, மன்னராட்சியைத்தான் அவர்கள் விரும்புகிறார்கள். அதனால்தான் திரைப்படங்களிலே மன்னர்களாக வருகின்றவர்களையே நாட்டை ஆளவும் அவர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். அத்தலைவர்களை நிஜ மன்னர்களாகவே ஆக்கிவிட்டால்?

திரைப்படத்தில் நிழலுருவாயிருந்த ஓர் அரசர், அரசியல் பிரவேசம் செய்து, ஆட்சியைப் பிடித்து, மக்கள் கற்பனையையும் கவர்ந்தார். ஆனால் அவர் மக்கள் கண்ணுக்குப் புலனாகவேயில்லை. அவர் தலைமையின் பேரில் ஓரமைப்பு உருவாகி, மக்கள், அரசரை முன்னிட்ட அவ்வமைப்பை வழிபடும் அடிமைகளாகிவிட்டனர். இது பிரமிட் அமைப்பு, அமைப்பின் வெவ்வேறு தளத்திலிருந்தவர்கள், இருந்த தளத்துக்கேற்றாற்போல், மக்களிடமிருந்து காணிக்கை பெறும் பூசாரிகளாயினர். 'தலைவர்' என்ற கோட்பாடு பிரமிட் உச்சியில். அவர் தலைவராக இருக்கலாம், அரசராக இருக்கலாம். ஒருருவும், ஒரு நாமமுமில்லாதானை எப்பெயரிட்டு அழைத்தால் என்ன?

தலைவரை அரசராக்கிவிடுவதில் ஒரு சௌகர்யமுண்டு.

வரலாற்றுக் காலண்டரைப் பின்னோக்கி கிழித்து, கடந்த பொற்காலத்தை மீண்டும் கொண்டு வந்து விட்டாற்போல், மக்களுக்கு ஒரு ஜால வித்தை காட்டலாம்...

வருவதை ஏற்றுக் கொள்வதுதான் விவேகம். இது ஓர் அனுபவம்.

அபூர்வா மாலை நான்கு மணிக்குத் தயாராக இருந்தாள்.

நான்கு மணிக்கு அவளை அழைத்துப் போக வந்த நஞ்சுகண்டன், அவளைப் பார்த்ததும் திடுக்கிட்டு நின்றான்.

அவள் உடையில் ஒரு மாற்றம். வேதபுரத்து சரித்திரக் காலத்து இளவரசியின் தோற்றம்.

(தொடரும்)

அலாதீன்

உலக சினிமா, தொழில் நுட்ப வானத்தின் விளிம்பைத் தொட்டுக் கொண்டிருக்கிறது. இந்தப் படம் அதற்கான அக்மார்க் சாட்சி.

உலகம் அறிந்த 'அற்புத விளக்கு' கதைதான். அரை டிராயர்கள் மட்டுமல்ல; 'இன்டலெக்சுவல் டைப்பு'களும் வியந்து விழி உயர்த்தச்செய்யும் வகையில் ஒன்றரை மணிநேரம் கட்டிப் போட்டு விடுகிறார்கள். கம்ப்யூட்டர் உதவியுடன் வித்தை காட்டியிருக்கிறார்கள்.

அரேபிய அரண்மனைகளும் கோட்டை கொத்தளங்களும் பாலைவனமும் ஒட்டக அணி வகுப்பும் மந்திர குகையும் ராட்சஸ உயிரினமும்... செட் அல்ல வாத்யாரே! கம்ப்யூட்டர் செட்டப்.

அந்த பூதத்தின் அசைவுகளைக் காட்ட ஏராளமாக உழைத்திருக்கிறார்கள். ஒரு கட்டத்தில் இது ஒரு



கார்ட்டூன் படம் என்பதே மறந்துபோய், உண்மையிலேயே பூதம் வந்து விட்டதோ என எண்ணும்படி effect சேர்த்திருக்கிறார்கள்.

அப்புறம் அலாதீனுக்கும் அரசகுமாரிக்கும் இடையே உருவாகும் காதல்... கடவுளே, இத்தனை மென்மையான உணர்ச்சி வெளிப்பாடு எப்படி கார்ட்டூன்களுக்கு மட்டும் சாத்தியமாயிற்று. டைரக்ஷன் குழுவுக்குத் தனியாகப் பாராட்டு விழா நடத்தலாம்.

வால்ட் டிஸ்னியின் ஆங்கில வடிவத்தை நேர்த்தியாகத் தமிழ்ப்படுத்தியிருப்பவர் ஜ. ரா. சுந்தரேசன். அப்புசாமியில் வெளிப்படும் அதே நகைச்சுவை; அதே டைமிங் காமெடி. தமிழ் சினிமா ஏன் இவரைக் கவனிக்கவில்லை?

பிறிதொரு பாராட்டுக்குரிய நபர் ஜீனி பூதத்திற்குக் குரல் கொடுத்திருக்கிற ஒய். ஜி. மகேந்திரன். என்ன ஒரு வேகம், குழைவு, தோரணை...! ஹேட்ஸ் ஆஃப்!

டிசம்பர் கடைசியில் ரிலீஸ் ஆகிறது. தவறாமல் உங்கள் குழந்தைகளைக் கூட்டிப் போங்கள். அந்தப் பிஞ்சு முகங்களில் பொங்கி வழியப் போகிற உற்சாகத்தையும் சந்தோஷத்தையும் நீங்கள் இதுவரை பார்த்திருக்கமாட்டீர்கள்!

— ஆர். பி. ஆர்.





பணத்தின் அருமை தெரிந்தவர்கள் நாங்கள்.



• சுஷ்மா

பாரதிராஜாவுக்கே தெரியாத விஷயம்?

சுஷ்மா. குஜராத்திலிருந்து தமிழுக்கு இறக்குமதியானவர். 'அலெக் மருது'வில் ராம்கியின் ஜோடியாக நடிக்கிறார். தமிழ் மண்ணில் இறங்கியதுமே இவர் கொடுத்த பேட்டி என்ன தெரியுமா? ''கதைக்குத் தேவைப்பட்டால் நான் கவர்ச்சியாக நடிப்பதற்குத் தயங்க மாட்டேன்!'' அடேயப்பா, தமிழ்ப் படவுலகத்தைப் பற்றி எவ்வளவு நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறார்!

'பாட்ஷா' பட செட்டுகளில் பத்திரிகையாளர்களுக்கு அனுமதியில்லை. காரணம்? ஜெ. கட் அவுட் வைத்து ஒரு சீன் எடுக்கப்பட்டதைக் கண்ட பத்திரிகையாளர் ஒருவர், 'ஜெ. கட் அவுட் இருக்கக் கூடாது (படப்பிடிப்பில் தான்!); எனக்கு அது பிடிக்காத விஷயம்' என்று ரஜினி சொன்னதாகச் செய்தி போட்டு விட்டதால் வந்த தடை இது. உண்மையில், 'காட்சிக்கு அவசியம் என்று கருதினால் ஜெ. கட் அவுட் வைப்பதில் தவறில்லை!' என்றுதான் ரஜினி சொன்னாராம்.

'ஸ்னேகா' யாருன்னு தெரியுமா? 'சின்னத் தங்கம்' படத்தில் ஆம்னிக்குத் தோழியாக கெஸ்ட் ரோல் செய்திருக்கிறார் அவர். இன்னும் தெரியவில்லையா? அவர்தான் பாரதிராஜாவின் 'கருத்தம்மா' - அதாவது ராஜஸ்ரீ. இதிலொரு விஷயம் என்னவென்றால் சின்னத் தங்கம் படத்தில் ராஜஸ்ரீ நடித்திருக்கிறார் என்பதே பாரதிராஜாவுக்குத் தெரியாதாம்.

டைரக்ஷன் செய்யும் ஆசைக்கு எஸ்.எஸ். சந்திரனும் அப்பாற்பட்டவரல்லர் என்பதற்குப் 'பொம்பளை சிரிச்சா போச்சு' படமே சாட்சி. "எனக்குப் பிறகு நடிக்க வந்தவர்கள் கூட டைரக்ட் செய்யும் போது, நான் மட்டும் ஏன் செய்யக் கூடாது என்று தோன்றியது. அதனால் செயலிலும் இறங்கிவிட்டேன்!" என்கிறார். மற்றவர்களுக்கு எதற்காக ரிஸ்க் என்பதாலோ என்னவோ தயாரிப்பையும் அவரே செய்கிறார்.

எத்தனை கேரக்டர்களில் நடித்தாலும் திருப்தி வந்து விடாது என்பதற்கு கே.ஆர். விஜயா ஓர் உதாரணம். "பத்மினி அம்மாவைப் போல் டான்சராக நடிக்க தில்லானா மோகனாம்பாள் மாதிரி ஒரு படம் கிடைக்காமல் போனதில் இன்னும் எனக்கு வருத்தம் தான்!" என்கிறார் அவர்.

ஆரம்பத்தில் 'சதிலீலாவதி'யில் சும்மா நான்கைந்து சீன்களில் மட்டுமே நடிப்பதாக இருந்தாராம் கமல். பாலு மகேந்திராவின் வித்தியாசமான கதையின் போக்காலும் வளர்ச்சியாலும் கவரப்பட்டதால்தான் கமலும் ஒரு முக்கிய ரோலில் நடிக்கிறாராம்.

'கடை விரித்தேன் கொள்வாரில்லை' என்பதை இராமலிங்க அடிகளார் எத்தனை வருத்தத்தோடு பாடினாரோ நமக்குத் தெரியாது. அந்த வருத்தத்தைப் போக்குவதற்காகவோ என்னவோ 'வள்ளலார்' என்கிற பெயரில் இராமலிங்க அடிகளாரைப் பற்றி ஒரு டீவி. சீரியலை இயக்குகிறார் எஸ்.பி. முத்துராமன். சீரியலைப் பலர் ஏற்றுக் கொள்ளலாம்; ராமலிங்க அடிகளாரின் கொள்கைகளை...?

— ராம்கம்பர்

எழுந்து நில், போராடு!



நம்முடைய ஒவ்வொரு செயலுக்கும் விளைவு உண்டு என்பதைப் பெரியவர்கள் சொல்லிக் கேட்டிருக்கிறோம். விளைவுகள் முற்றிப் பயனாக - அதாவது நற்செயல்கள் புண்ணியமாகவும் தீச் செயல்கள் பாவமாகவும் - நமக்கு வந்து சேரும். செயலின் தன்மையைப் பொறுத்து முற்றிப் பயன் அளிக்கும் காலம் மட்டும் வேறுபடும். கற்பனை கூட செய்ய முடியாத காலம் தொடங்கி, விதவிதமான பிறவிகள் எடுத்து நாம் மமதையுடன் செயல்புரிந்து வந்திருக்கிறோம். அச் செயல்களின் விளைவாகக் கோடானுகோடி தடங்கள் நம் உள்ளத்தில் பதிந்து உள்ளன. ஒன்று... இவற்றை வாழ்ந்து தீர்க்க வேண்டும். அல்லது துடைத்து அழித்து எறிய வேண்டும்.

ஞானம் தீயாகக் கொழுந்து விட்டு எரிவதால் அதில் கர்மங்கள் சாம்பலாகி விடுகின்றன. செயலின் எதிர்விளைவாகிய பாவ புண்ணியங்கள் என்ற பந்தத்தில் இருந்து விடுதலை கிடைக்கிறது.

''யாகசாலையில் எரியும் நெருப்பில் பொருட்களைப் பெய்து செய்யப்படும் திரவிய யக்ஞத்தை விட, வாழ்வையே ஒரு யாகமாக நிகழ்த்தும் ஞானியின் ஞானயக்ஞம் மேலானது'' என்பது கீதையின் தீர்மானம். (அத்-4-சுலோ 33).

வினைக் குப்பைகளை ஞானாக்னியில் எரிக்கும் வேலையே ஞானியின் வேலை. ஆனால் ஒன்று. வினைக்குப்பை சேரும் என்பதற்காகச் செயல் புரியாமல் இருந்து விட முடியுமா? சமையல் செய்தால் பாத்திரங்கள் கறைபடியும் என்று எந்தத் தாயாவது சமையலைத் தவிர்க்க முடியுமா?

நல்ல உடை உடுத்திக் கொண்டு வெளியில் போய் வந்தால் உடை அழுக்காகி விடும். என்றாலும் உடையும் உடுத்திக் கொண்டு அழுக்கும் ஆகாமல் நாம் பார்த்துக் கொள்ள முயற்சி செய்வ தில்லையா? அது போலத் தான். வாழ்ந்தும் தீர வேண்டும். ஆன்மாவில் அழுக்குபடியாதபடி பார்த்துக் கொள்ளவும் வேண்டும்.

நம்மில் பலருக்குத் 'தான்' என்னும் அகங்காரம் நிறையவே உண்டு. ஆனால் தான் என்னும் அறிவு எத்தனை பேருக்கு உண்டு? உண்மையாகத் 'தான்' என்பது எது? பலர் தங்கள் பதவிகளையே 'தான்' என எண்ணி விடுகிறார்கள். தொலைபேசியை எடுத்து ''நான் கமிஷனர் பேசுகிறேன். இளார்க் எங்கே போயிட்டார்?'' என்று பதவிகளாகவே தங்களை இனம்காணுகிறார்கள். இன்னும் உடம்பையே தான் என்று எண்ணுவர். ''நான் யாருன்னு இப்ப புரிஞ்சுக்க'' என்று வசனம் பேசியபடி எதிரில் இருப்பவரை ஓர் அறையில் வீழ்த்துவர்! உடம்பின் பலமே அவரது பலம். அதாவது உடம்புதான் அவருடைய 'தான்'.

ஆனால் இவையெல்லாம் உண்மையான 'தான்' அன்று. தேங்காயின் மீது கடினமான ஓடும், நார்க்குப்பையும் உண்டு. அவற்றைத் தோலுரித்த பிறகே உண்மையான தேங்காய் அகப்படும். அது போல எவை எவற்றை 'தான்' என்று எண்ணுகிறோமோ அவை அவற்றைத் தோலுரித்துப் பார்க்க வேண்டும்.

என்னுடைய 'நான்' எது என்பதை 'நான்தான்' தேடியாக வேண்டும். காரணம் இந்தச் சிக்கலை உண்டாக்கிக் கொண்டதும் நான். எனவே நான்தான் விடுவிக்க முடியும். என்னுடைய உண்மையான நான் - எனக்குள்ளேயே தொலைந்து போய் விட்டது. எங்கு தொலைந்ததோ அங்குதானே தேட வேண்டும்.

'நான்' என்ற அகந்தையில், 'நான்' என்ற ஆன்மாவை, 'நானே' தொலைத்த காரணத்தால் நான் மட்டுமே தேடிக் கண்டுபிடித்தாக வேண்டும்.

பகவான் ரமணரிடம் பக்தர் ஒருவர் கேட்டார். ''நான் யார் என்ற கேள்வியை எழுப்பி விடைகாணுவதே ஞானம் என்கிறார்களே... உண்மையா?'' ''ஆம்'' என்றார் ரமணர். ''தங்களுக்கு விடை கிடைத்ததா?'' என்றார் பக்தர். ''ஆம்'' என்றார் ரமணர்.

சுகிசிவம்



"அப்படியானால் நான் யார் என்பதை அறிந்து கொள்ள விழைகிறேன். எனக்குச் சொல்லுங்களேன்..." என்றார் பக்தர். "நீ யார் என்று என்னைக் கேட்காதே. உன்னைக் கேள். நீ.. யார் என்பது என்னை விட உனக் கல்லவா நன்கு தெரியும். உன்னைக் கேட்க வேண்டிய கேள்வியை என்னைக் கேட்கி றாயே..." என்றார் ரமணர்.

பதவியோ, சரீரமோ, மனமோ - 'நான்' அல்ல. அவை அழியக்கூடியவை. அழிவற்ற ஆன்மாவே நான். பல ஜன்மமாக விளைந்த பதிவுகளில், எண்ணக் குழப்பங்களில் அது புதையுண்டு கிடக்கிறது. ஆன்மாவைச் சூழ்ந்து புதைத்துள்ள வினைக்குப்பை களை ஞானக் கனலில் எரித்து முடிப்பதே யோகி யின் பணி.

அகங்காரமாக 'நான், நான்' என்று முந்திக் கொள்பவர்களை "ஏன் இப்படி முந் திரிக் கொட்டை மாதிரி முன்னால் நிற்கி றாய்?" என்று பேசுவோம். எல்லா விதை களும் பழத்துள் இருக்கும். முந்திரிக் கொட்டை பழத்துக்கு வெளியே நீட்டிக் கொண்டிருக் கும். அது மட்டும் அல்ல. முந்திரிக் கொட்டையைச் சுற்றிச் சூழ்ந்துள்ள கனத்த தோலைச் சுட்டுச் சாம்பல் ஆக்கிய பிறகு அமுதமயமான முந்திரி கிடைப்பது போல, ஆன்மாவைச் சூழ்ந்துள்ள வினைக்குப்பைகளைச் சுட்டுச் சாம்பலாக்கினால் கறை குறையற்ற ஒளிவீசும் ஆன்மாவை உணர முடியும். இதையே 'சுடர் விட் டெரியும் தீயானது விறகுகளைச் சுட்டுச் சாம்பலாக்குவது போல், அர்ஜுனா... ஞானக் கனல், கர்மங்களை எல்லாம் சாம்ப லாக்குகிறது' என்கிறது கீதை (அத்- 4 சுலோ 37).

இந்த ஞானத்தை நாமே தேட வேண்டும். "யோகசித்தன் காலக்ர மத்தில் (காலேன) தானே (ஸ்வயம்) அந்த ஞானத்தைப் பெறுகிறான் (தத்விக்ததி)" என்கிறது 37-ம் சுலோகம்.

'தானே' என்பது மிக முக் கியம். என் நோய்க்கு நான்தான் மருந்துண்ண வேண்டும். என் பசிக்கு நான்தான் விருந்துண்ண வேண்டும். என் அறியாமையை என் அறிவால் நானேதான் எரித் தாக வேண்டும். குருபீடங்கள் வழிகாட்டுமே ஒழிய, வாழ்ந்து காட்ட வேண்டியவர் நாம்தான். குருமார்கள் ஞானப் புதையலைத் தொட்டுக் காட்டுவார்களே ஒழிய, தோண்டி எடுத்துத் தர மாட்டார்கள். எந்தக் குருவும் தன் சீடனின் மண்டை ஓட்டுக்குள் துவாரம் விளைத்து ஞானத்தை உட்புகுத்த முடியாது.

"அந்தகு ஞானத்தை, சிரத்தை உடைய வன், (அக்கறை) பரத்தைச் சார்ந்திருப்பவன், புலன்களை வென்று அடைகிறான். அந்த மெய்ஞானம் அவனுள் மேலான சாந்தம் விளைவிக்கிறது. சிரத்தையற்றவன், ஐயம் அடைபவன், அழிவு பெறுகிறான். ஐயம் கொள்பவனுக்கு இம்மை, மறுமை இரண்டி லும் நிறைவு கிட்டாது. இந்த வித்தையின் மீதும் அதைப் புகட்டும் குருவின் மீதும் நம் பிக்கையோடு போராட்டத்தைத் தொடங்கு. அர்ஜுனா, எழுந்து நில்..! போராடு!" என்று (சுலோகம் 37, முதல் 42 வரை) கட்டளை இடுகிறார் கண்ண பெருமான்.

குருக்ஷேத்திரத்தில் யுத்தகளத்தில் நிற்கும் அர்ச்சுனனுக்கு மட்டு மல்ல, வாழ்க்கைப் போராட்டத்தில் இறங் கும் எவருக்குமே இந்த மந்திரச் சொல் பயன் படும்.

நீங்கள் கேட்டவை - தராசு

● புளியரை கணேசன், சென்னை.

? "ஆசிரியர்கள் சொந்தப் பிரச்னைகளை ஒதுக்கி வைத்து விட்டு மாணவர்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்ட வேண்டும்" என்று ஆளுனர் கூறியிருக்கிறாரே!

! ஆமாமாம்! ஆளுனர்களும் முதல்வர்களும் கூட சொந்த ஈகோ பிரச்னைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, அரசுப் பணிகளின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டினால் தேவலாம்!

● மேலை பழ நாகப்பன், சென்னை.

? அதிகம் எதிர்பார்க்கப்பட்ட "பம்பாய்" பட கேசட்டில் ரகுமான் இசை...?

! ஆங்காங்கே கேட்டதையே மீண்டும் கேட்பது போல் ஒலித்தாலும் கஜல் பாடகர் ஹரிஹரனின் புதுக்குரல் வித்தியாசம். Deep sonorous voice. அற்புதமான fusion சில இடங்களில் பிரகாசிக்கிறது. ஆனால் பாடல் வரிகள்.... கூச வைக்கின்றன!

● கே. ஆர். சுந்தரராஜன், கும்பகோணம்.

? சென்னை தொலைக்காட்சியின் அதிரடி நடவடிக்கை எப்படி?

! அவ்வப்போது அசத்தி விடுகிறார்கள் என்பதை ஒப்புக் கொண்டே ஆக வேண்டும். ஆனாலும் சில நிகழ்ச்சிகளில் இன்னும் அந்தப் பழைமை வாடை....

● எஸ். நாகராஜன், மேலப்பாதி.

? கபில்தேவின் இடத்தை ஸ்ரீநாத் பிடிப்பாரா?


! அறுபது ரன்களும் நாலு விக்கெட்டுகளும் ஆரம்ப அறிகுறிகள். தொடர வேண்டுமே!

● இ. ராதாகிருஷ்ணன், பட்டுக்கோட்டை.

? முதல்வர் அவை உள்ளே வரும்போது சபாநாயகர் எழுந்து மரியாதை செலுத்த வேண்டுமா?

! தேவையில்லைதான்; ஆனால் நமது சபாநாயகர், முதல்வர் அமர நாற்காலியையே விட்டுக் கொடுத்தவர் ஆச்சே!

• 'பம்பாய்' இசை



● கே. ஆர். சைமன், குலசேகரன்பட்டினம்.


? மற்ற கேப்டன்களைக் காட்டிலும் அசாரின் பணி எப்படி?

! வெற்றி மேல் வெற்றி குவிகிறது எனில், வெறும் அதிர்ஷ்டம் மட்டுமாக இருக்காது. சக ஆட்டக்காரர்களுடன் அனுசரித்தும் போகிறார்; கண்டிக்க வேண்டிய சமயத்தில் தயங்குவதும் இல்லை. "டீம் ஸ்பிரிட்டை" நிச்சயம் வளர்த்திருக்கிறார். ஆனால் திட்டமிடுதல் போதாது என்பது 'எக்ஸ்பர்ட் கமெண்ட்'.

லட்சம் லட்சமாக 'ஜெ'யிடம்



• இவர் இடத்தை...



• ... இவர் பிடிப்பாரா?




• உள்ளத்தின் அழகு...



• தாய்மையே சிறப்பு...



• பணி எப்படி?



• அடுக்கடுக்காய் அஞ்சலி!

● எம். இராஜேந்திரன், லால்குடி.

? லட்சம் லட்சமாக எம்.எல்.ஏக்களும் மந்திரிகளும் 'ஜெ'யிடம் கொடுக்கிறார்களே, எப்படி?

! அப்படித்தான்! இது கூடவா தெரியாது!

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி.

? மறைந்த மால்கம் ஆதிசேஷய்யா பற்றி...?

! "யுனெஸ்கோ" என்ற ஐ.நா. சபையின் ஓர் அங்கத்தில் இரண்டாம் இடத்தில் சிறப்புப் பணியாற்றி, பெரும் புகழோடு ஓய்வு பெற்ற சிறந்த கல்வியாளர், பொருளாதார நிபுணர். சென்னை பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக விளங்கியவர். அபிவிருத்திப் பணிகளை ஆய்வதற்கென்று சென்னையில் ஓர் அமைப்பை உருவாக்கி, அதற்காகத் தமது வீட்டையும் யுனெஸ்கோ பென்ஷனையும் வழங்கிய வள்ளல். தமிழக திட்டக் கமிஷன் அங்கத்தினராக இருந்தவர். இவை எல்லாவற்றையும் அடுக்கி அஞ்சலி செலுத்தும் தலைவர்கள், எந்த அளவுக்கு அவரது யோசனைகளை ஏற்று நடந்தார்கள், நடக்கிறார்கள் என்பதுதான் கேள்விக்குறி!

● க. கிருஷ்ணமூர்த்தி, தம்மம்பட்டி.

? லேட்டஸ்ட் பரபரப்பான செய்தி?

! 'சர்க்கரை இறக்குமதி ஊழலில் ஒரு தமிழக நிறுவனத்துக்கும் தொடர்பு உண்டு' என்றும்; 'தமிழகத்தில் தோன்றியுள்ள ஒரு திடீர் செல்வந்தர் - தொழிலதிபரின் பின்னணி பற்றியும் அவருக்கு ஆட்சியில் உள்ளோர் கொடுக்கிற ஆதரவு பற்றியும் ஸி.பி.ஐ. விசாரிக்க வேண்டும்' என்றும் சு. சுவாமி ஒரு குண்டைத் தூக்கிப் போட்டிருப்பதுதான். நெருப்பின்றி புகையுமோ?

● அம்பி தம்பி, சென்னை - 48.

? வணிகர் நடத்தும் மூன்று நாள் கதவடைப்பு தேவைதானா?

! ஒரு நாள் கதவடைப்பு என்பது பிரச்னையில் கவனத்தை ஈர்ப்பதாகும். மூன்று நாள் கதவடைப்பு 'பிளாக் மெய்ல்' என்று கருதப்படக்கூடிய வாய்ப்பு உண்டு. மக்களுக்குச் சொல்லொணாக் கஷ்டம். அதிலும் ஹோட்டல்களை நம்பி வாழும் தனிநபர்கள் நகரங்களில் ஏராளம் என்னும்போது ஓட்டல்களையுமா மூன்று நாட்களுக்கு மூடுவது? திறந்து கிடப்பன மருந்து கடைகளும் மதுக் கடைகளுமே! இதற்கு மறுபுறமாக, மூன்று நாள் கதவடைப்பு என்ற நிர்பந்த நிலைக்குத்

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
எல். எம். அபிதாட்சயா,
26, ஜவகர் 5-வது தெரு,
மதுரை- 16.

? சட்டம் என்பது எதற்காக?

! அதிகாரத்தில் உள்ளவர்கள் அலட்சியப்படுத்த; வசதி உள்ளவர்கள் வளைக்க; ஏழைகள் மாட்டிக் கொண்டு முழிக்க! லால்குடி ராஜேந்திரன் கவனிக்க!

லிக் கிரீடம் அணிந்தவர் இரண்டாமவர். அழகுடன் அறிவையும் உணர்த்தி இந்தியாவுக்குப் பெருமை சேர்த்தார்கள். அழகை இனி ஆபாச விளம்பரங்களுக்காக விலை பேசாமலிருந்தால் நம் மதிப்பிலே மேலும் உயர்வார்கள்.

● ஆர். காஞ்சனா, நெய்வேலி.

? மகாராஷ்டிர சட்டசபை முன்பு கோரிக்கைகளை வலியுறுத்தி ஊர்வலமாகச் சென்ற ஆதிவாசிகள் மீது துப்பாக்கி சூடு செய்தது பற்றி...?

! நடந்தது தடியடி பிரயோகம்தான். அதற்கே பயந்து அந்த ஆதிவாசிகள் மிரண்டு ஓட,

மந்திரிகள் கொடுக்கிறார்களே, எப்படி?



• முன்னேற்றத்தில் அக்கறை

தள்ளப்படும் அளவுக்கு அரசும் வணிகர்களைச் சோதித்திருக்கக் கூடாது. முன்கூட்டியே அழைத்துப் பேசி, நல்ல முடிவுக்கு வந்திருக்கலாம். மூன்று நாள் நஷ்டத்தை ஏற்கும் அளவுக்கு வணிகர்களின் கஷ்டம் அதிகரித்துள்ளது என்பதை அரசு உணர வேண்டும்.

● கே. ஆர். வேலுச்சாமி, வடக்கலூர்.

? சமீபத்தில் தங்கள் மனத்தை மிகவும் பாதித்த துயரச் சம்பவம்?

! சிவகாசி வெடி விபத்து. பன்னிரண்டு பேர் உயிரிழப்பு. முன் அனுபவங்கள் கூட பாடமாக அமையவில்லையே என்பது துயரை அதிகரிக்கச் செய்கிறது. மரணங்கள் சம்பவிப்பதும், உடனே முதல்வர் 'தலா பத்தாயிரம்' என்று அறிவிப்பதும் வாடிக்கையாகி விட்டன. ஆனால் பட்டாசு வெடி மருந்துகளின் கண்காணிப்பில் இந்தச் சுறுசுறுப்பை அதிகாரிகள் காட்டுவதில்லையே!

● எஸ். மகேஷ், கர்னால்.

? சுஷ்மிதா சென் - ஐஸ்வர்யா ராய்?

! "பெண்மையின் சிறப்பு தாய்மையே" என்று கூறி முடிசூட்டிக் கொண்டார் ஒருவர்; "உள்ளத்தின் அழகே உயர் அழகு" என்று சொல்

ஒருவர் மீது ஒருவர் மிதித்து நசுங்கி, 113 பேர் மரணம். ஒரு சொட்டு ரத்தம் சிந்தவில்லையாம். பரிதாபம். இறந்த ஒவ்வொருவருக்கும் ஒரு லட்சம்; காயமடைந்தவருக்கு ஐயாயிரம்; மந்திரி ராஜினாமா - எல்லாம் போன உயிர்களைத் திருப்பிக் கொணரப் போவதில்லை. வருமுன் காப்பது என்பது ஆட்சித் திறனின் முக்கிய அம்சம். இன்னும் நாலு நாள், ஒரு வாரத்துக்குப் பின் நடக்க திட்டமிடப்படுகிற விஷயங்கள் குறித்து அமைச்சர்கள் இன்றே தகவல் பெற்று, ஆராய்ந்து பார்த்து, விபரீதங்கள் நிகழ்வதைத் தவிர்க்க வேண்டும். ஒரு போராட்டத்துக்குப் பிறகுதான் பிரச்னைகளைக் கவனிப்பது என்ற நிலை மாறினால் இத்தகைய கொடுமைகள் நிகழாது.

● ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்.

? "உலகத் தமிழ் மாநாட்டு விளம்பரங்களில் பிழைகள் உள்ளன" என குமரி அனந்தன் கூறியுள்ளது...?

! அவர் தமிழறிஞர்; சரியாகத்தான் சொல்லியிருக்கிறார். "கேளிர்" என்பதைக் "கேளீர்" என்று அச்சடித்து விட்டு பிறகு, "படிப்பவர்கள் கண்களிலே கோளாறு" என்று வீம்புடன் வாதாடுகிற அமைச்சர்கள் இருக்கும்போது எத்தனை தவறுகள்தாம் நடக்காது!

நினைவு

MORE THAN MEN, EVENTS INFLUENCE ME.

— ஓர் இத்தாலிய இயக்குனர்



சிதம்பரம் அண்ணாமலை சர்வ கலாசாலையில் நான் சேர்ந்து ஹாஸ்டலில் தங்கி மேல் படிப்பைத் தொடர்ந்து வந்த நாட்கள் மிக மிக வண்ணமயமான நாட்கள். விடுதியில் எனக்கென்று ஒரு தனியறை, தனி படுக்கை, தனி டிரங்க் பெட்டி, தனி சோப் பாக்ஸ், மாதம் முழுவதும் செலவு செய்து கொள்ள கையில் 5, 6 ரூபாய் பாக்கெட் மணி. இவையனைத்தும் எனக்குப் பள்ளி நாட்களில் கிடைக்காத ஒரு Luxury. பள்ளி நாட்களில் ஒரு திரைப்படம் பார்ப்பது என்பது கூட எப்போதாவது கிடைக்கக் கூடிய ஒரு அதிர்ஷ்டம்.

ஆனால் அண்ணாமலை நகர் வந்தவுடன் அடிக்கடி சினிமா பார்க்கும் வாய்ப்புகள் கிடைத்தன; ஹாஸ்டலில் பர்மிஷன் வாங்கிக் கொண்டு அவ்வப்பொழுது சிதம்பரம் போய் சினிமா பார்ப்பது; ஜமா சேர்த்துக் கொண்டு இரவு காம்பவுண்ட் சுவரை ஏறிக் குதித்து நான்கு மைல் நடந்து சென்று சிதம்பரம் டூரிங் டாக்கீஸில் 'நைட் ஷோ' பார்த்து விட்டு, பார்த்த படத்தை அக்கு வேறு ஆணிவேறாக டிஸ்கஸ் பண்ணிக் கொண்டே ஹாஸ்டலுக்குத் திரும்பி வருவது - இவையெல்லாம் அந்த வயதில் எனக்கு மாபெரும் சுகானுபவம். அப்படி நான் ஏழெட்டு முறை பார்த்து ரசித்த சினிமா ஜெமினியின் 'மிஸ் மாலினி'.

அந்தக் காலங்களில் படிப்பைத் தவிரவும் பல்வேறு நிகழ்ச்சிகளில் மாணவர்கள் பங்கு கொள்கின்ற மாதிரி, debates, கலந்துரையாடல், தமிழ்ப் பேரவை, ஆங்கிலப் பேரவைக் கூட்டங்கள், கலை நிகழ்ச்சிகள், Mock Parliament, Mock Assembly போன்ற பல்வேறு சுவையான நிகழ்ச்சிகளை மாணவர்கள் தங்களுக்குத் தாங்களே நடத்திக் கொள்கின்ற வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்து, (Extra Curricular Activities) இவைகளில் ஆக்கபூர்வமான ஊக்கத்தை ஏற்படுத்திக் கொடுக்கின்ற வகையிலே கல்லூரி நிர்வாகம் செயல்படும். கலை, இலக்கிய உணர்வுகளாகட்டும், அரசியலாகட்டும், அல்லது பொது அறிவுத் துறைகளிலும் கூட சென்னை நகரக் கல்லூரிகளிலே படிப்பவர்களுக்குத்தான் நல்ல ஈடுபாடும் அதற்கான வாய்ப்புகளும் கிடைக்குமென்று பொதுவாகக் கூறப்பட்டு வந்த ஒரு கூற்றை அண்ணாமலை சர்வகலாசாலை பொய்யாக்கி வந்தது. அங்கே படித்து விட்டு வெளியே வந்த எத்தனையோ பேர் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கினர் என்பதற்கு நான் பட்டியல் போட வேண்டிய அவசியம் இல்லை.

அண்ணாமலை சர்வகலாசாலை ஹாஸ்டல் வளாகத்தினுள் நடந்த ஒரு சுசப்பான சம்பவம் மட்டும் எனது பிஞ்சு இதயத்தில் பெரும் ரணமாக உறைந்து போயிருந்தது.

டில்லியில் இடைக்கால அரசு அமைக்கப் படவிருந்த நேரம் 1946-ம் ஆண்டு செப்டம்பர் மாதம். சீனியர் இண்டர்மீடியட் படித்துக் கொண்டிருக்கிறேன்.

கல்லூரி வளாகத்தில் 'சாஸ்த்திரி ஹால்' என்று அழைக்கப்படும் ஒரு மிகப் பெரிய கட்டடம். சர்வகலாசாலை அலுவலகங்கள் அங்கேதான் இயங்கிக் கொண்டிருந்தன. அந்தக் கட்டடத்தின் நடுநாயகமாக வானளாவிய ஒரு பெரிய மணிக்கூண்டு. பாரத நாட்டின் விடுதலைக்கு முன்னோட்டமாக இடைக்கால அரசு அமைக்கப்படவிருக்கிற நாளைக்கு ஒரு வாரம் முந்தி, திடீரென்று அந்த மணிக்கூண்டின் உச்சியிலே கொடிக்கம்பம் ஒன்று கட்டப்பட்டு அதில்

19



ருந்து தேசிய மூவர்ணக் கொடி பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்தது. திடுதிப் பென்று முளைத்த இந்தக் கொடிக் கம்பமும், கொடியும் மாணவர்கள், ஆசிரியர்கள் அத்தனை பேருடைய கவனத்தையும் வெகுவாக ஈர்த்தது மட்டுமல்லாமல் எங்கு பார்த்தாலும் இதே பேச்சாகவும் இருந்தது. இந்தக் கொடியை கலாசாலை நிர்வாகம் ஏற்றி வைக்கவில்லை. அது மட்டுமல்லாமல் எந்த விதமான பிடிமானமுமில்லாத அந்த மணிக் கூண்டின் மீது துணிச்சலாக ஏறி இந்தக் கொடியை யாரோ மாணவர்கள்தான் இரவோடு இரவாகக் கட்டியிருக்க வேண்டும் என்றும் பேசப்பட்டது. இன்னும் சில நாட்களில் டில்லியிலேயே இந்த தேசியக் கொடி கோலாகலமாக ஏற்றப்படவிருக்கிறது என்பதனால் கல்லூரி நிர்வாகமும் இதைப் பற்றிப் பெரிதாக ஒன்றும் எடுத்துக் கொள்ளவில்லை.

ஆனால்!

அதற்கு மறுநாள் காலையில் பார்த்த போது மணிக்கூண்டின் மீது கறுப்பு-சிவப்பு திராவிடர் கழகக் கொடி ஒன்றும் பறந்து கொண்டிருந்தது. திராவிடர் கழக மாணவர்கள் சிலர் இரவோடு இரவாகத் தங்கள் கட்சிக் கொடியையும் மணிக்கூண்டின் மீது தேசியக் கொடிக்குச் சமமாகக் கட்டி விட்டிருக்கிறார்கள்.

கல்லூரி நிர்வாகத்திற்கு அன்று பிடித்தது தலைவலி! சாஸ்திரி ஹால் மணிக்கூண்டின் மீது தேசியக் கொடியுடன் கறுப்பு சிவப்புக் கொடியும் பறப்பதற்கு மாணவர் காங்கிரஸ் பெரும் எதிர்ப்பைத் தெரிவித்தது. கறுப்பு - சிவப்புக் கொடியை அகற்றியே தீர வேண்டுமென்று காங்கிரஸ் மாணவர்கள் பெரும் கிளர்ச்சியில் ஈடுபட, அதனை அகற்ற விட மாட்டோம் என்று திராவிடர் கழக மாணவர்களும் எதிர்ப்புத் தெரிவித்து, கிளர்ச்சியில் இறங்கினார்கள். இது ஒரு மாபெரும் போராட்டமாக உருவெடுத்துக் கொண்டிருந்தது.

கலாசாலை நிர்வாகம் ஸ்தம்பித்து நின்றது. எப்படியோ நிர்வாகத்தினர் மணிக் கூண்டின் மீதிருந்த கறுப்புச் சிவப்புக் கொடியை மட்டும் இரவோடு இரவாக அகற்றி விட்டனர். வெகுண்டு எழுந்தார்கள் திராவிடர் கழக மாணவர்கள்.

நிற்க :

மாணவர் ஹாஸ்டல் வளாகத்தினுள் கிழக்கு பிளாக், மேற்கு பிளாக் என்று இரண்டு பெரிய தனித்தனி மாணவ விடுதிகள் உண்டு. மேற்கு பிளாக்கை யொட்டிய ஒரு பெரிய மரத்தின் உச்சாணிக் கிளையிலும் தேசியக் கொடியை காங்கிரஸ் மாணவர்கள் கட்டி வைத்தார்கள். திராவிடர் கழக மாணவர்கள் இப்பொழுது அந்த மரத்தின் மீதும் தங்கள் கொடியை ஏற்றி வைத்தார்கள்.

மீண்டும் போராட்டம் தொடங்கியது.

எல்லாத்தரப்பு மாணவர்களுக்கும் பொதுவான ஹாஸ்டல் வளாகத்தில் கறுப்பு - சிவப்புக் கொடி கட்டப்படுவதை காங்கிரஸ் மாணவர்கள் தீவிரமாக எதிர்த்தார்கள். காங்கிரஸ் கொடி மட்டும் எப்படி அங்கே ஏற்றப்படலாம் என்பது திராவிடர் கழக மாணவர்களின் வாதம்.

மூவர்ணக் கொடி என்பதாலேயே அது கட்சிக் கொடி ஆகி விடாது என்றும், வரப்போகிற தேசியக் கொடியென்றும், அந்தக் கொடி மட்டும்தான் ஹாஸ்டல் வளாகத்தினுள் இருப்பதற்குச் சம்மதிப்போம் என்றும் காங்கிரஸ் மாணவர்கள் எடுத்துச் சொல்ல, திராவிடர் கழக மாணவர்கள் அதனை ஒப்

கே. பாலசந்தர்

-புக் கொள்ளவில்லை. இளம் மாணவப் பருவத்தினர் ஏதோ ஜென்மப் பகை போல் இரண்டு அணிகளாகத் திரண்டு நின்றனர் வளாகத்தினுள்.

ஹாஸ்டல் அதிகாரிகள் வேறு வழியில்லாமல் கொடியை இறக்குவதற்காக இரண்டு மூன்று ஆட்களைப் பணித்தார்கள். அவர்கள் மரத்தின் மீது ஏற ஆரம்பித்தார்கள். அவர்கள் மீது கற்கள் வீசப்பட்டன; இவர்களும் கற்களை வீச அவர்களும் கற்களை வீச.. சிறிது நேரத்தில் ஹாஸ்டல் வளாகம் போர்க்களம் ஆகியது. எங்கும் வேதனை ஓலம் கேட்கத் தொடங்கியது. ஒரு பானிப்பட்டு யுத்தம் நடந்து கொண்டிருந்தது.

இரவு மணி இரண்டு இருக்கலாம். நடந்தவற்றையெல்லாம் கிழக்கு பிளாக் எனது அறைக்குப் பக்கத்திலிருக்கும் பால்கனியில் பயத்தோடு தள்ளி நின்று பார்த்துக் கொண்டிருந்தேன். கற்கள் வீசப்பட்டவுடன் அறையினுள் சென்று பதுங்கிக் கொண்டேன்.

நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே, விடியற்காலை மூன்று மணி அளவில் வளாகத்தினுள் போலீஸ் லாரி வந்து நின்றது. தடியடிப் பிரயோகம் நடத்தப்பட்டது. கிளர்ச்சிக்காரர்களாகக் கல்லடித்துக் கொண்டிருந்தவர்கள் சிதறி ஓட ஆரம்பித்தனர்.

சர்வகலாசாலையின் சரித்திரத்திலேயே இந்த நாள் கறும் புள்ளி விழுந்த ஒரு துக்க நாள். மாணவர்களிடையே சட்டம், ஒழுங்கு காக்க போலீஸ் முதன் முறையாக வளாகத்தினுள் நுழைந்தது முதல் களங்கம்.

மூவர்ணக் கொடி செங்கோட்டையில் ஏற்றப்படுவதற்கு முன்பே இங்கு அந்த மூவர்ணக் கொடியில் ரத்தக் கறை படிந்தது இரண்டாவது களங்கம்.

16 வயது நிரம்பிய சிறுவனாக எந்தக் கட்சியிலும் ஈடுபடுத்திக் கொள்ளாதவனாகத் தள்ளி நின்று இந்தப் போராட்டத்தையும் இதனால் ஏற்பட்ட அவலங்களையும் வேதனையுடன் நான் பார்த்துக் கொண்டிருந்த போது நமது சுதந்திரம் பற்றி என் நெஞ்சில் பெரும் குழப்பம்தான் எஞ்சி நின்றது. இந்தச் சம்பவம் நாட்டில் நடைபெறவிருக்கும் எத்தனையோ பூசல்களுக்கும் மோதல்களுக்கும் ஒரு முன்னோடியாகத்தான் எனக்குத் தென்பட்டது.

அண்ணாமலை சர்வகலாசாலை மாணவமணிகளின் வாழ்க்கையில் storm in a tea cup போல் இச் சம்பவம் தோன்றி மறைந்திருக்கலாம். எனினும் அதற்கு அடுத்த ஆண்டு 1947 ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதி நடைபெற்ற நாடு தழுவிய அந்த communal flare up வட இந்தியாவையே உலுக்கிக் கொண்டிருந்த நேரம், "நமக்கேன் இந்தப் பாழாய்ப் போன சுதந்திரம்" என்கிற எண்ணத்தைத்தான் எனது பிஞ்சு நெஞ்சத்தில் தோற்றுவித்தது என்பது உண்மை.

நினைவு அலைகள்

அரசியல்ரீதியாகவோ கொள்கைரீதியாகவோ என்றைக்குமே என்னை எந்த ஒரு இயக்கத்திலும் ஈடுபடுத்திக் கொள்ளக் கூடாது என்கிற ஒரு subconscious முடிவிற்கு நான் வர இந்த கல்லூரிச் சம்பவம் ஒரு காரணமாக இருந்திருக்குமோ என்னவோ? எதிலுமே ஒரு அர்த்தமற்ற தன்மை நிலவுவதாக எனக்குத் தோன்றுவதற்கும் இதுவே காரணமாக இருந்திருக்கலாம். அந்தக் கால கட்டத்தில்தான் எனது உணர்வுகளையும் அபிலாசைகளையும் மெல்ல மெல்ல திசை திருப்பி, கலைகளின்பால் நான் கவனம் செலுத்தத் தொடங்கியிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

சொல்லடி பாரத மாதா! - நீ
சுதந்திரம் பெற்றது நீதா?
ரத்தமின்றி சுதந்திரம் பெற்றோம்!
அதுதான் எங்கள் வரலாறு!
சுதந்திரம் வாங்கி இரத்தம் சிந்தினோம்!
சொல்லடி எது நம் கோளாறு?

எனது 'ஜாதிமல்லி' திரைப்படத்திற்காக கவியரசு வைரமுத்து எழுதிய இந்தப் பாடலின் உட்கருத்துத்தான் எனது பால்ய பிராயத்தில் எனது நெஞ்சில் அரும்பாக எழுந்தது.

நாம் சுதந்திரம் பெற்றது நீதா? என்று கவியரசு கேட்கின்ற இதே கேள்வியைத்தான் அன்று நான் கேட்டுக் கொண்டேன். 47 ஆண்டுகளுக்கு முன்பாக!

மிருணாள் சென் சொன்னார் : "ஒரு தனி மனிதனுக்கு என்ன நடக்கிறது என்பதில் எனக்கு நாட்டம் இருப்பதில்லை. ஒரு குறிப்பிட்ட சூழலில் அந்தத் தனிமனிதன் எப்படி 'react' பண்ணுகிறான் என்பதில்தான் நான் அக்கறை கொள்கிறேன்."

"There is no Republican, no Democrat on the fourth of July; all are Americans" என்று சொல்வார்கள்.

அதே போல, "On August 15th there is no Muslim, no Hindu; all are Indians" என்கிற உணர்வு நமக்கிருக்கிறதாவென்று மனச்சாட்சியைத் தோண்டித் துருவிப் பார்க்கிறேன்.

The answer is either hazy or negative.

(தொடரும்)

♦ டியர் சரத், கல்கி பத்திரிகை உங்களை இரண்டாண்டுக்கு முன்பே "அடுத்த சூப்பர் ஸ்டார்" என்று கூறியிருந்தது. இப்போது தொடர்ந்து உங்கள் படங்களை, நாட்டாமை உட்பட, கிண்டல் கேலி பண்ணி எழுதுகிறது. பரவாயில்லை, take the review easy!

நாகர்கோவில், எஸ். ரவீந்திரன் துரைசாமி.

♦ 2020-ல் ஜப்பானில் என்ன நடக்கும் என்பதை நீர் சொல்லி விட்டீர். 2021-ல் இங்கே என்ன நடக்கும் என்பதை நான் சொல்லுகிறேன். ஹூம்ம்ம்... இவையெல்லாம், வெளிநாடுகளில் நடப்பதை டி.வியில் பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருப்போம்!

மதுரை - 16, இரா. முரளி.

♦ 'அடுத்த நூற்றாண்டு எப்படி இருக்கும்...?' என்று அதிசயத் தகவல்களை தந்தது சரிதான். அப்பவும் நமது துப்புறவுத் தொழிலாளர்களின் நிலைமை மாறாதா...?

இலால்குடி, ஆங்கரை பைரவி.

♦ சுபஸ்ரீ எழுதிய 'மண்ணில் தெரிகிற வானம்' - கதையில் இடம்பெற்ற தாய்மைப் போராட்டம் எந்தக் கணவனுக்கும் புரியாது...!

சென்னை - 94, ஃபரீதா.

♦ இன்றைய முன்னேற்றத்திலும் ஆண் ஆதிக்கம் எந்த அளவு உள்ளது என்பதைக் கதையினூடே சித்திரித்துள்ளார் சுபஸ்ரீ.

சென்னை - 4, ஐ. சாந்து உஸ்மானி.

♦ 'மண்ணில் தெரிகிற வானம்' - இன்று பல வீடுகளில் கேட்கிற கானம்.'

எம்.எல்.ஏ.வுக்கே இவ்வளவு தேவையென்றால்..?

• உங்கள் பெயரையும் முகவரியையும் தெளிவாக எழுதுங்கள், வாசகரே!

♦ மோட்டார் சைக்கிள் பரிசுக்கான போட்டிகளைத் தேர்வு செய்யும் குழுவிற்கு அண்ணா சாலையில் கட்-அவுட்தான் வைக்க வேண்டும்! ஒவ்வொரு போட்டியும் எங்களைத் தலையைப் பிய்த்துக் கொள்ள வைத்து விடுகிறது!

திருவாரூர், ஆர். பாஸ்கரன்.

♦ எங்களை வெகு நேரம் ஜோராக சிரிக்க வைத்தது... மழை மழையாம் ஜோக் மழையாம்!

சர்க்கார் கொல்லப்பட்டி, பெரு. இளங்கம்பன்.

♦ அட்டையில் ரன் மிஷினைப் (சச்சின்) பார்த்து... இதய மைதானத்தில் ஏகப்பட்ட 'பவுண்டரி'களும், 'சிக்ஸர்'களும் விளாசப் பட்டதைப் போல ஆனந்தப்பட்டேன்!

சேலம் - 9, மு. இரவிச்சந்திரன்.

♦ 'சிதம்பரம் பத்மினி'க்கான கமிஷனின் அறிக்கைகளைப் பார்க்கும் போது இதற்காக ஒரு விசாரணை கமிஷன் தேவைதானா என்றே எண்ணத் தோன்றுகிறது. பொதுவாகவே, 'கமிஷன்' என்றாலும் 'தாமதமான விசாரணை' என்றாலும், மறுக்கப்பட்ட நீதி என்றே ஆகிவிட்டது!

ஒட்டன்சத்திரம், சுப. அண்ணாமலை.

♦ பத்மினி வழக்கில் வேறு துறையினர் மட்டும் சிக்கியிருந்தால் இன்று காவல் துறை அவர்களைப் புரட்டி எடுத்து, கவனிக்கும் விதமே வேறு! இவர்களை யார் புரட்டி எடுப்பதாம்!

கும்பகோணம், எஸ். கே. மூர்த்தி.

♦ எம்.எல்.ஏ. ரவிச்சந்திரன் ஏதோ, மக்களுக்காகத்தான் சட்டத்துக்குப் புறம்பான காரியங்களில் ஈடுபட வேண்டியிருப்பதைப் போல பாசாங்கு செய்வதும், பேட்டி கொடுப்பதும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

சேலம் - 2, சூர்யநிலா.

♦ ஒருநாளைக்குப் பத்தாயிரம் ரூபாய் என்றால் ஒரு ஆண்டில் 36,50,000 ரூபாய் ஒரு எம்.எல்.ஏ. தேற்றினால் சட்டமன்ற அனைத்து உறுப்பினர்களின் turn over எத்தனை கோடி ரூபாய் என்று கணக்குப் போடவே பயமாக இருக்கிறது. எம்.எல்.ஏ.வுக்கே இவ்வளவு தேவை என்றால்...? ....? ...?

சென்னை - 97, வளர்மதி ஆசைத்தம்பி.

டெபாசிட்தாரர்களுக்கு 6 மாத வட்டி உடனடியாகக் கொடுக்கப்படும்.

(ரூ.5000/-முதலீடு 1 வருடத்திற்கு மேல் செய்பவர்களுக்கு மட்டும்)

வருடம்	1	2	3	4	5
வட்டி விகிதம்	18%	18.5%	19%	20%	21%

உங்கள் முதலீடு 40 மாதங்களில் இரண்டு மடங்காகும்

பென்ஷனர்ஸ் பிளஸ்டு டெபாசிட்
19.5% to 21.5%

ஸ்ரீ சக்ரா பாண்ட்
60 மாதங்கள் 21%

ரூ, 50,000 (60 மாதங்கள் முடிந்த உடன் 1,50,000 பெறுங்கள், போனஸ் தனி)

தங்க நகைகள், இந்தியாவில் எங்கும் உள்ள சொத்துக்களுக்கும் பணம் கிடைக்கும் தொடர்பு கொள்க

Saseenadh **SASWATHA NIDHI Ltd.,**

H.O. : 36, Ranganathan Street, Madras - 600 017. ✆ 4346786
B.O : 35, M.C. Road, Madras - 600 021. 34C, Railway Road, Kancheepuram - 631 501.
56, Kadappa Trunk Road, Thiruthani - 631 209.

லேவாதேவிகள் பங்குதாரர்களுக்கு மட்டும் ஸ்தாபிதம் - 1978 செவ்வாய் வார விடுமுறை ADVT

ஒரு பிளாட்பாரச் சிறுவனின் நிஜமான கதை!

'வூட்டை வுட்டு எங்களாச்சும் ஓடிப் பூடலாண்டா...' என்று வெள்ளிக் கண்ணன் சொன்ன திட்டம், அலெக்ஸுக்கு ரொம்பவும் பிடித்துப் போனது.

வீடு என்று அவன் சொன்னது ஒரு பாவனைதான். அது நான்கு சுவர்களும் ஒரு கூரையும் கொண்ட இடமே அல்ல. திருவல்லிக்கேணி - ஸ்டார் தியேட்டர் அருகில் உள்ள பிளாட்பாரம்.

ஒரு காலத்தில் - அலெக்ஸ் நான்கைந்து வயதுச் சிறுவனாக இருந்த போது - சாந்தோம் அருகில் நிஜமாகவே அவனுக்கும் ஒரு குடிசை இருக்கத்தான் செய்தது. அப்போதெல்லாம் அப்பா ரிக்ஷா ஓட்டுவார். சொந்த ரிக்ஷா.

'தே கய்த... குந்துடா ராசா மாதிரி...' என்று பீடியை வலித்துக் கொண்டே இவனை ரிக்ஷாவில் உட்கார வைத்துக் கொஞ்சுவது கூட உண்டு!

எல்லாம் காலை வேளைகளில்தான். இராத்திரியாகி விட்டால் அப்பாவின் வாயிலிருந்து சாராய நாற்றமும் வசவுகளும்தான் வரும். அந்த நாற்றத்திலேயே ரிக்ஷாவும் குடிசையும் கரைந்து போய் விட்டன.

பிறகுதான் இந்த பிளாட்பாரம். தம்பி அருளும் தங்கை வேலாவும் பிறந்ததெல்லாம் இந்த பிளாட்பாரத்தில்தான். பள்ளிக்கூடத்தில் கொடுக்கப்படும் வீட்டுப் பாடங்களை இவன் இங்கு உட்கார்ந்துதான் படிப்பான்.

ஒரு பேட்டை வஸ்தாதுவின் தோரணையோடு சொந்த ரிக்ஷா ஓட்டிக் கொண்டிருந்த அப்பா, இப்போது சினிமா தியேட்டரில் வேலைக்குப் போக ஆரம்பித்தார். இந்த நிலையிலும் அவர் திருந்தியபாடில்லை. சாராய போதை போதவில்லை என்று அதிக போதைக்காக ஊசி போட்டுக் கொள்ள ஆரம்பித்தார். வீட்டுக்கென்று பைசாக் கொடுப்பதில்லை.

அம்மா வீட்டு வேலைகளுக்குப் போக ஆரம்பித்தாள். கெட்டிக்காரி. பைசாவை அப்பாவின் கண்ணில் காட்டாமல் செலவழித்தாள். குழந்தைகளுக்கு நாஸ்டாவும் கூடைச் சோறும் வாங்கிக் கொடுத்தாள்.

இதனாலேயே அம்மாவின் முன்னால் 'நான் உனது புருஷன்' என்கிற அப்பாவின் கம்பீரம் கொஞ்சம் கொஞ்சமாக மங்கத் தொடங்கி விட்டது. ஆனாலும் 'அப்பா' என்கிற மிடுக்கு அவரிடம் குறையவில்லை.

'தே கய்த... நீ படிச்சு இன்னாடா

> "துட்டு கெடச்சாலும் மருவாதி இல்ல. குப்பத் தொட்டில கைய வுட்டுப் பேப்பர் பொறுக்கறத பாக்கறவங்க எளப்பமாத்தான் பாக்கறாங்க. எனக்குப் புடிக்கல."





''தலைவர் ரொம்ப சோகமா உட்கார்ந்திருக்காரே! என்ன விஷயம்?''

''அவர் எழுதியிருக்கிற சுயசரிதையை எதிர்த்து யாருமே கோர்ட்ல கேஸ் போடலையாம்!''

— கண்ணன்

பண்ணப் போற? பேசாம எங்கனாச்சும் வேலைக்குப் பூடு...'

'இல்லப்பா... எனக்குப் படிக்கணும்னு ஆசையா கீதுப்பா...'

'வாய மூட்றா சோமாறி... இன்னாம்மே... உம்புள்ள பேசறதக் கேட்டியா... படிச்சுப் பெரிய்ய கலெக்ட்ராவப் போறானாம்...' என்று அப்பா சிரிக்க, அம்மாவும் சேர்ந்தே சிரிக்க... அந்தச் சத்தத்தில் இவன் படிப்பும் காணாமல் போனது.

அலெக்ஸூம் வேலைக்குப் போகத்தான் செய்தான். முதலில் சைக்கிள் கடை. பிறகு வெல்டிங் பட்டறை. அப்புறம் லெதர் கம்பெனி. கடைசி இடத்தில்தான் ஒரு மாதம் தாக்குப்பிடித்தான். இருநூறு ரூபாய் சம்பளம். முன்பணமாக அம்மா வாங்கிய நாற்பது ரூபாய் போக நூற்றியறுபது ரூபாய் சம்பளமாகக் கிடைத்தது. அதில் முப்பது ரூபாயை ஒளித்து வைத்துக் கொண்டு மிச்சத்தை அம்மாவிடம் கொடுத்தான்.

அப்படி ஒளிக்கச் சொன்னவன் இந்த வெள்ளிக் கண்ணன்தான். அவனுக்கும் இவனைப் போல் பதினொன்று வயதுதான்.

'நமக்கு எதுக்குடா துட்டு?'

'எதுக்குன்னா கேட்கற? வா, சொல்றேன்...'


கூட்டிக் கொண்டு போனான். ஏதோவொரு கடையில் எதையோ வாங்கினான்.

"நம்ம வாத்தியார் ரொம்ப லேட்டா இப்பத்தான் ஜுராஸிக் பார்க் படம் பார்த்திருப்பார் போல இருக்குடா!"

"எதை வெச்சு சொல்றே?"

" இப்பல்லாம் கோபத்திலே, திட்டும் போது, 'டினோஸர் தலையா'ன்னு சொல்லி திட்டறாரே!"

— சம்பத்குமார்



ஆளரவமில்லாத மைதானத்திற்குப் போனார்கள்.

'இன்னாடா இது?' அலெக்ஸ் கேட்டான்.

'மாவாடா... (ஜர்தா மாதிரி) வாயில் போட்டுப் பார்டா...'

போட்டான். கூடவே பீடியையும் இழுக்கச் சொன்னான் :

'டேய்... ஒரே கேரா (மயக்கம்) கீதுடா...'

'இன்னும்பாரு... மஜா ஏறிக்கினே போவும்...'

நிஜந்தான். காற்றில் மிதப்பது போல உணர்ந்தான். சொல்லத் தெரியாத சுகத்தில் சொக்கிப் போனான். அதுவே பழகிப் போனது.

மாவாவின் மயக்கத்தில் படுத்துக் கிடக்கும் போது, 'டேய் சோமாறி.. பசியாக் கீதுடா.. போய் பன்னும் டீயும் வாங்கியாடா...' என்கிற அப்பாவின் கட்டளைகள் தொந்தரவாய்ப் போயின.

யாரோ ஒருவன் அம்மாவைத் தேடி வர ஆரம்பித்ததிலிருந்து அவனும் மாறிப் போனான். குடிக்கக் கூட ஆரம்பித்திருந்தான். அப்பாவின் அதிகார வரம்புகளையெல்லாம் அவன் உடைத்துப் போட்டு விட்டான்!

அப்பாவின் வரம்புகள் மட்டும்தானா? ஆயா (அம்மாவின் அம்மா) கூட அவனை ஒன்றும் சொல்ல முடியவில்லை. அவன் வாயிலிருந்து வெளிவருகிற கெட்ட வார்த்தைகள் ஆயாவுக்குக் கூட தெரியுமோ, என்னவோ! அதனால் ஆயாவும் கிழவனும் (அம்மாவின் அப்பா) கூட அம்மாவுக்கு அடங்கிப் போய் விட்டார்கள்.

அலெக்ஸால் அப்படி இருக்க முடியவில்லை. அப்பா குடிக்கலாம்; அவனுக்குத் தெரிந்து, எல்லோருடைய அப்பாக்களும் தான் குடிக்கிறார்கள். ஆனால் அம்மா அப்படிச் செய்யலாமோ!

'யம்மா... குடிக்காதம்மா... எனக்குப் புடிக்கலம்மா...'

'த்தூத்தேறி நாயே... வாய மூடிக்கினு இருக்கலியான்னா நாஸ்டாவுக்கு நாறிப் பூடுவ...'

தொடர்ந்து அவன், ஓர் அம்மாவுக்குரிய வார்த்தைகளைப் பேசவில்லை. நடுங்கிப் போனான். வெள்ளிக் கண்ணனையும் மாவாவையும் நாடினான். வெள்ளிக் கண்ணன் திட்டம் கொடுத்தான்.

"ஓட்றது சரி, எங்கடா?"

"பாரீஸ் கார்னராண்ட போய்டுவோம். அங்க எதுனாச்சும் வேலை தேடிக்கினு இருந்துர்லாம்."

சரியென்று கிளம்பினான். அவனும் கூட



மோட்டார் சைக்கிள் பரிசுத் திட்டம் - 14

இதோ வந்துவிட்டது மார்கழி! பெண்கள் கோலத்தால் வாசல்களை நிரப்புவார்கள். பக்கத்தில் கோலம் போடும் பெண்ணின் இனிமையான எட்டெழுத்துப் பெயர் படத்தினுள்ளேயே ஒளிந்திருக்கிறது. அதைக் கண்டு பிடித்துக் கூப்பனில் எழுதி பத்திரப்படுத்துங்கள். 26 வார முடிவில் எல்லா கூப்பன்களையும் அனுப்புங்கள். அதிகப் போட்டிகளில் கலந்து கொண்டு, அதிக வெற்றி பெறுபவருக்கு மோ. சைக்கிள் பரிசு. ஆறுதல் பரிசுகளும் உண்டு! ஆசிரியர் தீர்ப்பே இறுதி!

போட்டி - 14

கோலம் போடும் பெண்ணின் பெயர் ....

என் பெயர் : ....

முகவரி : ....

வந்தான்.

பாரிஸ் கார்னரில் சுக்குக் காப்பி விற்கிற ஒருவரிடம் வேலை கேட்டார்கள். அவர் இவர்களை ஏற இறங்கப் பார்த்தார்.

"எந்த வூருப்பா?"

"மதுரை..." வெள்ளிக்கண்ணன் முந்திக் கொண்டு சொன்னான். திருவல்லிக்கேணி என்றால் வேலை தர மாட்டார்கள் என்று அவன் நினைத்தான்.

"அப்ப சரி. பீச்சாண்ட தெனிக்கும் சுண்டல் விக்கறீங்களாப்பா. சோறு, துணி மணில்லாம் நாந்தர்றேன்."

"சரி."

ஒருநாளைக்கு அறுபது ரூபாய், எழுபது ரூபாய் என்று ஒவ்வொருவரும் சுண்டல் விற்றுக் கொடுத்தார்கள். சுக்குக் காப்பிக் காரரின் மனைவி இவர்களைச் சொந்தப் பிள்ளைகள் போலவே பார்த்துக் கொண் டாள்.

அங்கு போனதிலிருந்து இருவருமே மாவா போடுவதை விட்டு விட்டார்கள். அவ் வப்போது பீடி மட்டுமே வலித்தார்கள்.

வெள்ளிக்கண்ணன் சுண்டல் விற்பதில் கில்லாடி. கிளம்பிய கொஞ்ச நேரத்திலேயே அத்தனையையும் விற்று விடுவான். அலெக்ஸ் அப்படியில்லை. ஒருசில நாட்களில் இவனு டைய சுண்டல் விற்காமல் தேங்கிப் போகும். சரக்கை மிச்சம் கொண்டு போய்க் கொடுக்க முடியாது. அதனால் இவனிடமிருந்து வெள் ளிக்கண்ணன் வாங்கி விற்றுத் தருவான்.

ஒருநாள் அலெக்ஸின் சுண்டல் தேங்க ஆரம்பித்தது. அதை எப்படியும் தானே விற்று விட வேண்டும் என்று வைராக்கியம். விற்றுக் கொண்டே கண்ணகி சிலையருகில் வந்து விட்டான். அந்த நேரம் பார்த்து, அலெக்ஸுக்குத் தெரிந்த ஒருவரின் கண் ணில் பட, மாட்டிக் கொண்டான்.

இருவரும் சேர்த்தே அழைத்து வரப் பட்டார்கள். நன்றாக உதை கிடைக்கும் என்றுதான் வந்தார்கள். அப்படி எதுவுமே நடக்கவில்லை. இவர்கள் காணாமல் போனது பற்றிய எந்தச் சுவடும் யாரிடமும் தென்பட வில்லை. அனைவரும் பழையபடியே இருந் தார்கள்; பழகினார்கள்.

இரண்டு பேருக்குமே இது ஏமாற்றமாக இருந்தது. யோசித்தார்கள்.

"டேய் ஒரு ரவுண்ட் போவலாமா?" வெள்ளிக்கண்ணன்தான் கேட்டான்.

"எங்கடா?"

"வா, சொல்றேன்!" என்றவன், இரண்டு கோணிப் பைகளைக் கொண்டு வந்தான். இன்னும் இரண்டு பேர் வந்தார்கள். அலெக் ஸுக்கு ஒன்றும் புரியவில்லை.

"பேப்பர் பொறுக்கடா. இவங்க அதான்

பண்றாங்க. துட்டு கெடைக்கும்.''

"வர்றதை நாலாப் பிரிச்சிக்கலாம்!" என்றார்கள் வந்தவர்கள்.

நால்வரும் கிளம்பினார்கள். ஒவ்வொரு குப்பைத் தொட்டியாய்க் கிண்டிக் கிளறினார்கள். பேப்பர்களோடு, பழைய - உடைந்த - பிளாஸ்டிக் பொருள்களையும் எடுத்துக் கோணிப் பைகளில் அடைத்துக் கொண்டு, விற்பனை செய்யக் கிளம்பினார்கள்.

பழைய பேப்பருக்குக் கிலோ ஒரு ரூபாய் என்றும் பிளாஸ்டிக் பொருள்களுக்குப் பத்து ரூபாய் என்றும் விலை கிடைத்தது. மொத்தம் நூற்றியிருபது ரூபாய். ஆளுக்கு முப்பது ரூபாய்!

அன்று ஒரே குஷி. அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து டீயும் பன்னும் சாப்பிட்டார்கள். மாவா போட்டார்கள். பீடி வலித்தார்கள். இதுவே வாடிக்கையும் ஆனது.

ஒருமுறை ரவுண்ட் போய் விட்டு அலெக்ஸ் மட்டும் தனியாக வந்து கொண்டிருந்தான். அப்போது மாநகராட்சிப் பள்ளிக்கூடம் ஒன்றில் இவனைப் போன்ற சிறுவர்கள் உள்ளே நுழைந்து கொண்டிருந்தார்கள். இவர்களுக்கெல்லாம் இங்கென்ன வேலை என்று இவனும் உள்ளே நுழைந்தான்.

ஒருவர் இவனைப் போன்ற சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். இவன் அவர் அருகில் போய் நின்றான்.

"நீ யாரப்பா? புதுசா இருக்கே?" அவர் கேட்டார்.

"எம்பேரு அலெக்ஸ். எனக்கும் படிக்க ஆசை..." தயங்கியபடியே சொன்னான்.

"அப்படியா! நல்லது. நீயும் அவங்களோட போய் உட்கார்ந்துக்கோ..." என்றார் நாதன்.

"துட்டுக் கேப்பீங்களா?"

"இல்ல. உன்ன மாதிரி இருக்கற பசங்களுக்குப் படிப்புச் சொல்லித் தர்றதுக்குன்னே நாங்க 'நேசக்கரம்'னு ஒரு அமைப்பு வெச்சிருக்கோம். நுங்கம்பாக்கத்துல ஆபீஸ் இருக்கு. ஃபாதர் ஜேசுங்கிறவர்தான் ஆரம்பிச்சு நடத்தறார். என்ன மாதிரி நெறயப் பேரு அவர்கிட்ட வேல பார்க்கறோம். உனக்குத் தெரிஞ்சவங்க யாராச்சும் உன்ன மாதிரி படிக்க ஆசைப்பட்டா அவங்களையும் நாளைக்கு அழைச்சுக்கிட்டு வா. யார்கிட்டயும் நாங்க துட்டு கேட்க மாட்டோம்."

"எனக்கு சைக்கிள் கடை வெக்கணும்னு ஆசை..."

"மொதல்ல படி."

"நா அஞ்சாங்கிளாஸ் வரைக்கும் படிச்சிருக்கனே..."

"ஆனா, எழுதப் படிக்கவே சரியாத் தெரியலயே... அதனால நீ மொதல்ல நல்லா எழுதப் படிக்கத் தெரிஞ்சுக்கோ. அப்புறமா சைக்கிள் கடை வெக்கலாம். அதுக்கு நாங்களே ஒதவி பண்றோம். புரிஞ்சுதா?"

"சரி."

கடந்த ஒரு மாதமாகத்தான் நேசக்கரத்தின் தொடர்பு அலெக்ஸுக்குக் கிடைத்திருக்கிறது. வகுப்புகளில் கலந்து கொண்டு ஒழுங்காகப் படிக்கிறான். மாவாவை விட்டு விட்டாலும் பீடியை இன்னமும் விடவில்லை. "ஒரே நாளில் மாற்ற முடியாது. அவரவர் போக்கிலேயே போக விட்டுத்தான் கொஞ்சம் கொஞ்சமாக மாற்ற முடியும்!" என்கிறார் ஃபாதர் ஜேசு.

"இன்னமும் குப்பைக் காகிதம் பொறுக்கிக் கொண்டுதான் இருக்கியா?"

"எப்பனாச்சும்தான் ரவுண்ட் போவேன்."

"ஏன்? அதிலதான் குறைஞ்சது முப்பது ரூபா கெடைக்குதுன்னு சொல்றியே?"

"துட்டுக் கெடச்சாலும் மருவாதி இல்ல. குப்பத் தொட்டில கைய வுட்டுப் பேப்பர் பொறுக்கறத பாக்கறவங்க எளப்பமாத்தான் பாக்கறாங்க. எனக்குப் புடிக்கல. சைக்கிள் கட வெச்சாத்தான் கௌரதையா இருக்கும்..."

இது பதினாறு வயது அலெக்ஸின் நிஜமான கதை மட்டுமல்ல; இவனைப் போன்ற பல சிறுவர்களின் நிலையும் இதுதான்! அத்தனை பேரையும் அரவணைத்துப் போக எத்தனை நேசக்கரங்கள் தேவை!

— இளங்கோவன்

படம் : **யோகா**

அடுத்த இதழ்....

ம்யூஸிக் ஸ்பெஷல்!

●● "வாத்தியக் கலைஞர்களுக்கு இனி வேலை இல்லை!"

- இளையராஜாவின் நண்பர் பேட்டி

●● "நாங்களும் சீனியராக வேண்டாமா?"


- இளம் இசைக் கலைஞர்களின் 'தனியாவர்த்தனம்'

●● சோகத்தைச் சங்கீதமாக்கும் 'கானா'!

- 'கானா டாக்டர்' பேட்டி



ஸ்வீட், காரம், காப்பி!



ஏக்கச்சக்கமாக உயர்ந்து விட்ட காப்பி
யின் விலை இனி இறங்குமா? "இந்தக் கேள்
விக்கான விடைக்கு, விலை உயர்வுக்கான
மூலகாரணத்தைப் பார்க்க வேண்டும்!"
என்கிறார் லியோ காப்பியின் உரிமையாளர்,
பி. ஆர். கே. பி. ஸ்ரீனிவாசன்.

"இந்தியாவைப் பொறுத்தவரை கடந்த
நூற்றைம்பது ஆண்டுகளாக 'இந்தியன்
காப்பி போர்டு'தான் காப்பியின் விலையை
நிர்ணயித்து வந்தது. காப்பி உற்பத்தியாளர்
களிடமிருந்து அத்தனை காப்பிக் கொட்
டைகளையும் வாங்கி, உள்நாட்டு வியாபாரி
களுக்கு விற்கும் உரிமையையும் வெளிநாடு
களுக்கு ஏற்றுமதி செய்யும் உரிமையையும்
காப்பி போர்டே வைத்திருந்ததால் விலை
நிர்ணயமும் அதற்குச் சாத்தியமாயிற்று.
உள்நாட்டு மக்களின் நலனைக் கருத்தில்
கொண்டு காப்பி விலையை ஓரளவுக்குச்
சமநிலையிலும் வைத்திருந்தது.

"புதிய பொருளாதாரக் கொள்கை கார
ணமாகக் கடந்த ஆண்டு நிலைமை மாறியது.
அதன்படி காப்பி உற்பத்தியாளர்கள், தாங்
கள் உற்பத்தி செய்யும் காப்பி மொத்தத்
தையும் காப்பி போர்டுக்குத்தான் விற்க
வேண்டும் என்பதில்லை; முப்பது சதத்தைத்
தங்கள் இஷ்டம் போல் உள்நாட்டு - வெளி
நாட்டு வியாபாரிகளுக்கு விற்றுக் கொள்ள
லாம் என்று அரசு கூறியது. இந்த சீசனில்
முப்பது சதம் என்பது ஐம்பது சதம் ஆனது.

"இதே சமயத்தில் இன்னொன்றும்
நடந்தது. காப்பிக்கான உலக மார்க்கெட்
விலையை நிர்ணயிப்பது லண்டனிலும் நியூ
யார்க்கிலும் உள்ள முக்கிய ஸ்டாக் எக்சேன்
ஜ்"களுக்குப்
ஜ்"கள்தான். இந்த எக்சேஞ்ஜ்"களுக்குப்
பிரேசில் நாட்டிலிருந்து காப்பி வருவதுதான்
அதிகம். அதாவது 30 சதம் அங்கிருந்துதான்
வருகிறது. இந்த ஆண்டு பிரேசிலில் இரண்டு
கனத்த பனிமழை பெய்ததால் காப்பி
உற்பத்தி அங்கு வெகுவாகப் பாதிக்கப்
படவே, அங்கிருந்து உலகச் சந்தைக்குக்
காப்பி வருவது தடைப்பட்டு விட்டது.

"இந்த நிலையில் சர்வதேசச் சந்தையில்
காப்பிக்குத் தட்டுப்பாடு வரவே, காப்பிக்
கான சர்வதேச விலை கிடுகிடுவென
உயர்ந்து விட்டது. இதே சமயத்தில் காப்பி
உற்பத்தியாளர்களுக்கான ஏற்றுமதிக் கதவு
களும் நமது நாட்டில் திறந்து விடப்படவே,
அனைவரும் அதிக விலை கருதி, ஏற்றுமதி
யில் கவனம் செலுத்தத் தொடங்கி விட்ட
னர்.

"இதன் காரணமாக, காப்பி போர்டும்
உள்நாட்டு காப்பி விலையையும் சர்வதேச
விலை அளவுக்கு நிர்ணயிக்க வேண்டியதா
யிற்று. அதாவது முன்பு உள்நாட்டு உபயோ
கத்திற்கென்று தனி ஏலமும், ஏற்றுமதிக்
கென்று தனி ஏலமும் நடந்தது. புதிய பொரு
ளாதாரக் கொள்கை காரணமாக தனி ஏலம்
தவிர்க்கப்பட்டு ஒரே ஏலமானது. (அப்புறம்
எதற்கு காப்பி போர்டு என்பதுதான் காப்பி
விரும்பிகள் கேட்கும் கேள்வி!) இதுதான்
காப்பி விலை உயர்வுக்குக் காரணம். இது
போன்ற விலையுயர்வு கடந்த எழுபதுகளில்
ஒருமுறை ஏற்பட்டது. பிறகு நான்கைந்து
ஆண்டுகளில் சீராகி விட்டது. ஆனால் இந்த
முறை மீண்டும் குறைய வாய்ப்பில்லை
என்றே தோன்றுகிறது. இதற்குக் காரணம்,
ஏற்றுமதிக்குத் திறந்து விடப்பட்டுள்ள புதிய
பொருளாதாரக் கதவுகள். அதனால் முன்பு
காப்பி ஏற்றுமதியில் கிடைத்த அந்நியச்
செலாவணி போல் இப்போது இரு மடங்கு
அதிகமாகக் கிடைக்கிறது என்பதால் இந்த
விலையுயர்வுக்கு நாமும் பழகிக் கொள்ள
வேண்டியதுதான்!"

பேட்டி : துளசி



பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்:
வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு
அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

உங்கள் குழந்தையும் இந்நிலையை அடையலாம்.



இதை சில்ட்ரன்ஸ் காலேஜ் அண்ட் கேரியர் ஃபண்ட் மூலம் உறுதி செய்திடுவீர்

உங்கள் குழந்தையின் கல்விக்கான செலவுகள் வளர்ந்து வருகின்றன. யூடியை வழங்கும் சில்ட்ரன்ஸ் காலேஜ் அண்ட் கேரியர் ஃபண்ட் உங்கள் குழந்தை தொழில் வல்லுநராவதற்கான கனவை நனவாக்க உதவுகிறது.

சி ற ப் பு அ ம் ச ங் க ள்

• ஒரு ஓப்பன்-எண்டட் திட்டம் • 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான திட்டம். • ஒவ்வொரு யூனிட்டும் ரூ. 10, குறைந்தபட்ச முதலீடு ரூ. 2000, மற்றும் அதற்கு மேல் ரூ. 1000-ன் மடங்கில். • ஃபண்டில் ஏற்படும் வளர்ச்சி போனஸ் யூனிட்களாக அதற்குரிய காலவரையில் சேர்க்கப்படும். • ஒவ்வொரு ஆண்டும் இருமுறை பகுதியளவு பணத்தைத் திருப்பி எடுத்தல் அனுமதிக்கப்படும் — 18 வயதில் 50%ம் பிறகு ஒவ்வொரு ஆண்டும் அதோடு 10% கூடுதலாக 23 வயதுவரை. • ஒன்றுவிட்ட அடுத்த குழந்தை நியமன வசதி.

அனைத்து பரஸ்பர ஃபண்டு மற்றும் செக்யூரிட்டி முதலீடுகள் மார்க்கெட் ரிஸ்கிற்கு உட்பட்டவை. செக்யூரிட்டி மார்க்கெட்டுகளை பாதிக்கும் காரணங்களால் என்ஏவி திட்டங்களின் மதிப்பு வளர்ச்சி அடையலாம் அல்லது குறையலாம். கடந்தகால செயலாற்றல் எதிர்கால விளைவுகளைக் குறிப்பிடுபவை அல்ல. சில்ட்ரன்ஸ் காலேஜ் அண்ட் கேரியர் ஃபண்ட் திட்டத்தின் பெயரே தவிர திட்டத்தின் தரம், அதன் எதிர்கால ஆதாயம் அல்லது வருவாயைக் குறிப்பிடுபவை அல்ல. முதலீடு செய்யும் முன் ஆஃபர் பத்திரத்தை தயவு செய்து படிக்குமாறுக் கோரப்படுகிறார்கள்.

CHILDREN'S COLLEGE AND CAREER FUND
UNIT PLAN-93

யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா
உங்கள் ஒளிமயமான எதிர்காலத்திற்காக.

மண்டல அலுவலகம்: 29, இராஜாஜி சாலை, சென்னை 600 001. போன்: 517101.
கிளை அலுவலகங்கள்: • சென்னை. போன்; 517101, 517190 • மதுரை. போன்: 38186 • திருச்சி. போன்: 27060. • கோயம்புத்தூர். போன்: 214973.

UTI-134/94 TM B



... இன்றைய நாகரீக நங்கையரைப் படைக்கிறது குப்தா புடவைகள்.
REGISTERED AS NO. M. 4302
Registered as Newspaper in Sri Lanka
Gupti®
Sarees & Dress Materials